இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 54 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – புரட்டாசி 15 – திங்கள்கிழமை 02 அக்டோபர் 2023 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 54: Thiruvalluvar Year - 2054 - Purattasi 15 - Monday 02 October 2023 - Madurai 12 Pages ₹ 5.00



நாடாளுமன்றத் தேர்தல் குறித்து மாவட்டச் செயலாளர்கள், அமைச்சர்கள், தொகுதி பார்வையாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டத்தில் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் கருத்துரை வழங்கினார்!

ஒன்றியத்தில் பா.ஜ.க. ஆட்சி அமைக்க முடியாது! 'இந்தியா' கூட்டணிதான் ஆட்சி அமைக்கும்! - புதுவை உள்ளிட்ட

# 40 தொகுதிகளிலும் வென்றிட திட்டமிட்டு உழையுங்கள்!

## மாவட்டச் செயலாளர்கள் - தொகுதிப் பார்வையாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டத்தில் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் கருத்துரை!

**சென்னை, அக்.02-**

**மாவட்டச் செயலாளர்கள் - தொகுதிப் பார்வையாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டத்தில் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று காலை காணொலி மூலம் உரையாற்றுகையில், ஒன்றியத்தில் பா.ஜ.க. ஆட்சி அமைக்க முடியாது என்றும் 'இந்தியா' கூட்டணிதான் ஆட்சி அமைக்கும் என்றும் - புதுவை உள்ளிட்ட 40 தொகுதிகளிலும் வென்றிட திட்டமிட்டு உழையுங்கள் என்றும் கருத்துரை வழங்கினார்.**

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், நேற்று (1.10.2023) மாவட்டக் கழகச் செயலாளர்கள் - அமைச்சர் பெருமக்கள் - தொகுதிப் பார்வையாளர்கள் ஆகியோர் பங்கேற்ற கலந்தாலோசனைக் கூட்டம், காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற்றது.

அதில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

பொது முக்கியத்துவம் வாய்ந்த சில கருத்துகளைப் பரிமாறிக் கொண்டு, விரைந்து செயல்பட வேண்டிய காலக்கட்டத்தில் நாம் இருக்கிறோம். அதனால்தான் உடனடியாகக் காணொலி மூலமாக இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**இந்தியா கூட்டணியில் வலுவான கட்சிகள் இடம் பெற்றுள்ளன!**

நம்மை எதிர்நோக்கி வரும் நாடாளுமன்றத் தேர்தலில் புதுவை உள்ளிட்ட நாற்பது தொகுதியிலும் நாம் வெற்றி பெற வேண்டும். தமிழ்நாட்டில் அடைவது போன்ற வெற்றியை இந்தியா முழுமைக்கும் அடைய வேண்டும் என்பதற்காகத்தான் இந்தியா கூட்டணியை அமைத்துள்ளோம்.

அகில இந்தியக் கட்சிகளும் பல்வேறு மாநிலங்களை ஆளும் கட்சிகளும் - வலுவான மாநிலக் கட்சிகளும் - இந்தியா கூட்டணியில் இடம் பெற்றுள்ளன. பாரதீய ஜனதா கட்சி ஒன்றியத்தில் ஆட்சி அமைக்க முடியாது; இந்தியா கூட்டணிதான் ஆட்சி அமைக்கும் என்ற கருத்து பரவலாக ஏற்பட்டு விட்டது. எனவே, இந்த நேரத்தில் நமது பொறுப்பும் கடமையும் அதிகமாகி உள்ளது.

> **“அகில இந்தியக் கட்சிகளும் பல்வேறு மாநிலங்களை ஆளும் கட்சிகளும் - வலுவான மாநிலக் கட்சிகளும் - இந்தியா கூட்டணியில் இடம் பெற்றுள்ளன. பாரதீய ஜனதா கட்சி ஒன்றியத்தில் ஆட்சி அமைக்க முடியாது; இந்தியா கூட்டணிதான் ஆட்சி அமைக்கும் என்ற கருத்து பரவலாக ஏற்பட்டு விட்டது. எனவே, இந்த நேரத்தில் நமது பொறுப்பும் கடமையும் அதிகமாகி உள்ளது.”**

**சிறப்பு மாநாடுபோல் நடைபெற்ற பயிற்சிப் பாசறைக் கூட்டங்கள்!**

நாடாளுமன்றத் தேர்தல் பணியை கடந்த ஆறு மாதத்துக்கு முன்பே நாம் தொடங்கினோம். நமது வெற்றிக்கு அடித்தளமாக விளங்கக்கூடிய வாக்குச்சாவடி பொறுப்பாளர்களை நியமித்தோம். இதுவரையில் அவர்களுக்கான மூன்று பயிற்சிபாசறைக் கூட்டங்கள், தேர்தல் சிறப்பு மாநாடுகளைப் போல நடந்துள்ளன. அடுத்ததாக வடக்கு மண்டல பயிற்சி பாசறைக் கூட்டம் திருவண்ணாமலையிலும், சென்னை மண்டல வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் பயிற்சி பாசறை கூட்டமும் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சி பாசறைக் கூட்டங்களில் நாம் எடுத்துச் சொன்னதைச் செயல்படுத்தினாலே போதும். முழுமையான வெற்றியை நாம் அடைந்து விடலாம்.

**மக்கள் சரியாக இருக்கிறார்கள் திட்டமிட்டு உழைத்தால் வெற்றி உறுதி!**

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் புதுவை உள்ளிட்ட 39 தொகுதிகளை வென்றோம் என்றால், நடக்க இருக்கும் தேர்தலில் 40 தொகுதிகளையும் வென்றாக வேண்டும். எந்தவொரு தனி மனிதரையும் விட இயக்கமும் - இயக்கம் அடைய வேண்டிய வெற்றியும்தான் முக்கியம்.

மக்கள் நன்றாக இருக்கிறார்கள். அதனை வாக்குகளாக மாற்றுவதற்கு உழையுங்கள். உழைப்பும் செயல்பாடும் தான் வெற்றியைப் பெற்றுத் தரும். திட்டமிட்டு உழையுங்கள். தி.மு.க. கூட்டணி அனைத்துத் தொகுதியிலும் வெற்றி பெற உழையுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கருத்துரை வழங்கினார்.

---

பா.ஜ.க.வின் கடந்த காலத் தவறுகளை நினைவூட்டி பிரச்சாரம் செய்யுங்கள்! நாற்பதும் நமதாகும்! நாடும் நமதாகும்!

# இந்தியா முழுவதும் திராவிடவியல் கோட்பாட்டைக் கொண்டு செல்வோம்!

## கழகத் தகவல் தொழில்நுட்ப அணியின் 'எக்ஸ்' வலைதளத்தில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புரை!

**சென்னை, அக்.2-**

**கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், கழகத் தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் எக்ஸ் (ட்விட்டர்) சமூக வலைத்தளத்தில் திராவிட மாதமான செப்டம்பர் மாதத்தின் இறுதி நாளான நேற்று முன்தினம் (30-09-2023) ஒருங்கிணைக்கப்பட்ட ஸ்பேசஸ்-இல் சிறப்புரையாற்றினார்.**

**உணர்ச்சியும் எழுச்சியும் மிக்கதாய் அமைந்திருந்த அவ்வுரையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “பா.ஜ.க.வின் கடந்த காலத் தவறுகளை சமூக வலைதளங்களில் திரும்பத் திரும்ப நினைவூட்டும் பிரச்சாரம் செய்யுங்கள். இதைச் சரியாக செய்தாலே, நாற்பதும் நமதாகும்! நாடும் நமதாகும்!” என்றும், “கலைஞரின் உடன்பிறப்புகளாக, அவர் விட்டுச் சென்ற பணிகளைத் தொடர்ந்து, இந்தியா முழுவதும் திராவிடவியல் கோட்பாட்டைக் கொண்டு செல்வோம்” என்றும் குறிப்பிட்டார்.**

எக்ஸ் (ட்விட்டர்) சமூக வலைதளத்தில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

எல்லோருக்கும் வணக்கம்! நலமாக இருக்கிறீர்களா...

**தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர் தம்பி டி.ஆர்.பி.ராஜாவுக்கு நன்றி!**

'திராவிட மாதம்' என்று சொல்லப்படும் செப்டம்பர் மாதத்தில், தினமும் ஒரு தலைப்பில், இயக்க முன்னோடிகள் கலந்து கொண்டு திராவிட இயக்கக் கருத்துகளைப் பேசி இருக்கிறார்கள். நிறைவு நாளான இன்றைக்கு, என்னைப் பேச அழைத்திருக்கிறீர்கள்... மிகவும் மகிழ்ச்சி!

இந்த 'ஸ்பேசஸ்' கருத்தரங்கை ஆர்கனைஸ் செய்திருக்கும் ஐ.டி. விங் செயலாளர் - தம்பி டி.ஆர். பி.ராஜா மற்றும் அணியினருக்கு, நன்றி!

எல்லாவற்றுக்கும் மேல், இயக்கம்தான் பெரிது - கொண்ட கொள்கைகள்தான் பெரிது என்று, அன்றாட வாழ்க்கையிலும், சமூக வலைத்தளங்களிலும் கழகத்திற்காகப் போராடுகிற - களமாடுகிற, தலைவர் கலைஞரின் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளான உங்களுக்கு வணக்கம்!

தந்தை பெரியார் பிறந்தநாள் - பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் -கழகம் தோன்றிய நாள் என்று, இந்த மூன்று நாட்களையும் இணைத்து, முப்பெரும் விழா என்று 1985 முதல் கொண்டாடிக்கொண்டு இருக்கிறோம். தலைமைக் கழகத்தின் சார்பில் மட்டுமல்ல, ஒவ்வொரு அணியும், மாவட்டக் கழகங்களும் கூட தனித்தனியாக, இந்த செப்டம்பர் மாதம் முழுவதும் முப்பெரும் விழாவைக் கொண்டாடுகிறார்கள். அந்த வரிசையில்தான் ஐ.டி.விங், இந்த ஸ்பேசஸ்-ற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

**பேச, எழுத, நம்மிடம் கருத்துகளும் கொள்கைகளும் ஏராளம்!**

2000 ஆயிரம் ஆண்டுகள் ஒடுக்கப்பட்ட நாம் மீண்டெழுந்த வரலாறு - தந்தை பெரியார் காட்டிய பகுத்தறிவு - சமத்துவப் பாதை, பேரறிஞர் அண்ணா வகுத்துக் கொடுத்துள்ள கருத்தியல் தளம், தமிழினத் தலைவர் வடித்து கொடுத்த ஐம்பெரும் முழக்கங்கள் - 2018-ஆம் ஆண்டு நான் செயல் தலைவரான பிறகு முன்வைத்த ஐம்பெரும் முழக்கங்கள் என்று, 'எல்லார்க்கும் எல்லாம்' என்ற எதிர்காலத் தமிழ்நாட்டை உருவாக்குவதற்கான திட்டங்கள் என்று நாம் பேச - எழுத கொள்கைகளும் கருத்துகளும் ஏராளமாக இருக்கிறது.

ஒரு காலத்தில், நம்முடைய கொள்கைகளைப் பரப்ப, பேச்சு மேடை - நாடக மேடை - திரையுலகம் - எழுத்துலகம் என்று மக்களை 'ரீச்' செய்வ தற்கான அனைத்து மீடியத்தையும் பயன்படுத்திக் கொண்டோம்.

பாட்டு, கவிதை, கதை, நாவல், திரைப்படம், நாடகம், நாளிதழ், வார இதழ், மாத இதழ் என்று எவ்வாறெல்லாம் மக்களிடம் பேச முடியுமோ, அவ்வாறெல்லாம் பேசினோம். 'முரசொலி பொங்கல் மலர்' எல்லாம் பாத்தீர்கள் என்றால், பொக்கிஷம் மாதிரி இருக்கும். அவ்வளவு கருத்துகள் நிறைந்திருக்கும்.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 02-10-2023

# வாச்சாத்தி - அ.தி.மு.க.வின் கொடூரம்!

அ.தி.மு.க.வின் ஆட்சியின் கொடூரத்தன்மைக்கு எத்தனையோ உதாரணங்கள் உண்டு. அதில் முக்கியமானது வாச்சாத்தி!

குற்றவாளிகள் 215 பேருக்கும் தண்டனையை உறுதி செய்துள்ளது உயர்நீதிமன்றம். இதன் மூலம் ஜெயலலிதா ஆட்சி காலத்தின் அநியாயம், அம்பலப்படுத்தப்பட்டுள்ளது.

**தர்மபுரி மாவட்டத்தில் அரூர் - பாப்பிரெட்டிப்பட்டி நகரங்களுக்கு இடையே அமைந்துள்ள கல்வராயன் மலை தொடரின் அடிவாரப்பகுதியில் அமைந்துள்ளது வாச்சாத்தி மலை கிராமம். சந்தன மரக் கடத்தலை தடுக்கப் போகிறோம் என்று சொல்லி அ.தி.மு.க. ஆட்சியில் மிகக் கொடூரம் 1992ஆம் ஆண்டு ஜீன் 20ஆம் தேதி அரங்கேறியது. அந்தக் கிராமமே சிதைக்கப்பட்டது. ஒரு சிறுமி உள்பட 18 பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டார்கள்.**

ஜீன் 22 அன்று பழங்குடியின மக்கள் சேர்ந்து அரூர் காவல் துறையில் புகார் கொடுத்தார்கள். ஆனால் அன்றைய போலீஸ் அதனை வாங்கவில்லை. பழங்குடியினர் அமைப்பும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் இதனை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அதன்படி அ.தி.மு.க. ஆட்சி மீது நம்பிக்கை இல்லாமல், சி.பி.ஐ.க்கு இந்த வழக்கு மாற்றப்பட்டது. வனத்துறையை சேர்ந்த 155 பேர், காவல்துறையை சேர்ந்த 108 பேர், வருவாய்த்துறையினர் 6 பேர் என 269 பேர் மீது குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டனர். இந்த வழக்கின் தீர்ப்பு 2011 ஆம் ஆண்டு வெளியானது. அப்போது உயிருடன் இருந்த 215 பேரும் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டு, தண்டனையும் விதிக்கப்பட்டது. 12 பேருக்கு 10 ஆண்டுகள் சிறையும், 5பேருக்கு 7ஆண்டுகள் சிறையும், மற்றவர்களுக்கு 1-3 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்துதீர்ப்புவழங்கியது. இதன்மேல்முறையீடுசென்னைஉயர்நீதிமன்றத்தில் நடந்தது. நீதியரசர் வேல்முருகன், கீழ் நீதிமன்றத்தின் தீர்ப்பை உறுதி செய்துள்ளார்.

இந்த குற்றச்சம்பவம், ஜெயலலிதா முதலமைச்சராக இருந்தபோது நடந்தது. தமிழ்நாடு பழங்குடியினர் சங்கத்தின் செயலாளர் பி.சண்முகம், வாச்சாத்தி கிராமத்துக்கு வந்து பார்வையிட்ட பிறகுதான் இந்த கொடூரம் வெளிச்சத்துக்கு வந்தது. அன்றைய அ.தி.மு.க. ஆட்சியின் நிர்வாகம் இப்படி ஒரு சம்பவம் நடக்கவே இல்லை என்று சமாளித்தது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் நாடாளுமன்ற உறுப்பினர் அ.நல்லசிவன், இந்தப் பிரச்சினையை நீதி விசாரணை நடத்தக் கோரி அப்போதைய முதல்வர் ஜெயலலிதாவுக்கு கடிதம் எழுதினார். இதற்குப் பதிலளித்த அப்போதைய வனத்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன், அதிகாரிகளைப் பாதுகாத்து அறிக்கை வெளியிட்டார்.

**சில அரசியல் கட்சிகள் இதனை பெரிதுபடுத்துவதாக அ.தி.மு.க. ஆட்சியின் மாவட்ட ஆட்சியர் அறிக்கை கொடுத்தார். பாலியல் வன்கொடுமை குற்றச்சாட்டை முழுமையாக அ.தி.மு.க. ஆட்சி மறுத்தது.வீடுகளை அவர்களே இடித்துக் கொண்டதாகவும் அ.தி.மு.க. ஆட்சி சொன்னது. தாங்கள் விசாரணை ஆணையம் அமைத்திருப்பதாக அறிவித்தார்கள். அந்த ஆணையம் வாச்சாத்திக்கு செல்லவே இல்லை. சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறையின் அன்றைய செயலாளர், வாச்சாத்தியில் வசிப்பவர்கள் வனத்துறை மற்றும் காவல்துறையினரின் கொடூரமான தாக்குதலுக்கு பலியானதாகக் கூறப்படுவதை மறுத்து சென்னை உயர்நீதிமன்றத்தில் எதிர் பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்தார்.**

அன்றைய அ.தி.மு.க. ஆட்சி எப்படி நடந்து கொண்டது என்பது குறித்து, 'தி இந்து' ஆங்கில நாளேட்டில் (30.9.2023) கட்டுரையாளர் பி.வி.ஸ்ரீவித்யா விரிவாக எழுதி இருக்கிறார்.

"அப்போதைய போக்குவரத்து துறை அமைச்சர் செங்கோட்டையன், பாதிக்கப்பட்டவர்கள் குற்றவாளிகளை அடையாளம் காட்டும் 'அணிவகுப்பை' சீர்குலைப்பதற்காகவே அரூர் அரசு பங்களாவில் அவர் தங்கி இருந்ததாக பழங்குடியின செயற்பாட்டாளர் கிருஷ்ணமூர்த்தி குற்றம்சாட்டுகிறார். ஊத்தங்கரை மாஜிஸ்திரேட் மேற்பார்வையில் அடையாள அணிவகுப்பு நடைபெற இருந்தது. ஆனால் அதை நடத்துவதற்கு பாதுகாப்பு தேவை என உயர்நீதிமன்றத்திற்கு மாஜிஸ்திரேட் கடிதம் எழுதிவிட்டு அங்கு செல்லவில்லை. பின்னர், பாதிக்கப்பட்டவர்களை பாதுகாக்க ஒவ்வொரு 10 மீட்டருக்கும் ஒரு போலீஸ்காரர் நியமிக்கப்பட வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டது. பிறகு சேலம் சிறையில் அந்த அணிவகுப்பு நடத்த உத்தரவிடப்பட்டது. 18 இளம் பெண்கள் தங்களை துன்புறுத்தியவர்களை அடையாளம் காட்டினர். அந்த அணிவகுப்பின் போது பல்வேறு விதமாக வேஷ்டி, சட்டை மற்றும் துண்டுகள் எல்லாம் உடுத்தி அந்த பெண்களை குழப்பும் வகையில் செயல்பட்டு வந்தனர். வெயில் அதிகமாக இருக்கிறது என கூறி வெயிலில் நிற்க மறுத்தனர். அதில் இருந்து தப்பிப்பதற்காக செங்கோட்டையன் மற்றும் அ.தி.மு.க. எம்.எல்.ஏ. சிங்காரம் உதவியோடு பல முயற்சிகளை மேற்கொண்டனர். அந்த அணிவகுப்பு மூன்று முறை நடத்தப்பட்டது. மீண்டும் மீண்டும் அந்தப் பெண்கள் அவர்களை தீர்மானகரமாக அடையாளம் காட்டிக்கொண்டே இருந்தனர். கம்யூனிஸ்ட் தலைவர் நல்லசிவம், வாச்சாத்திக்கு சென்று, நடந்த கொடுமைகள் குறித்து செய்தியாளர் சந்திப்பு நடத்தினார். அப்போது, 'வாச்சாத்தி மலையடிவார கிராமம் என்பதுகூடதெரியாமல்,நல்லசிவம்வயதானதன்கால்களைவைத்துக்கொண்டு எப்படி மலை கிராமத்திற்கு சென்று பார்த்தார்' என செங்கோட்டையன் கிண்டலாக பேசியுள்ளார்" என்று எழுதி இருக்கிறது, 'தி.இந்து' ஆங்கில நாளிதழ்.

அதனால்தான், அன்றைய அ.தி.மு.க. ஆட்சிக்கான கண்டனத்தையும் சென்னை உயர்நீதிமன்றம் பதிவு செய்துள்ளது. வாச்சாத்தியில் பழங்குடியின பெண்களை பாதுகாக்க அக்கறை காட்டாத அப்போதைய அரசு, தவறிழைத்த அதிகாரிகளை பாதுகாக்கவே முற்பட்டதாக கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

வாச்சாத்தி பகுதியில் சில பெரும் புள்ளிகள் சந்தன கடத்தலில் ஈடுபட்ட நிலையில், அப்பாவி கிராம மக்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டு, அவர்களுக்கு எதிராக பொய் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றும், கடத்தலில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக வனத்துறை எந்த வழக்கையும் பதிவு செய்யவில்லை என அதிருப்தி தெரிவித்துள்ளார். வன்முறையில் ஈடுபட்ட உண்மை குற்றவாளிகள் யார் என்று தெரிந்தும் கூட, மாவட்ட ஆட்சியரோ, மாவட்ட வன அதிகாரியோ, காவல் கண்காணிப்பாளரோ எந்த நடவடிக்கையும் எடுக்காமல் குற்றவாளிகளை பாதுகாத்துள்ளதாக அதிருப்தி தெரிவித்துள்ளார். உண்மையான சந்தன கடத்தல்காரர்களை காப்பாற்றும் நோக்கில், அப்போதைய அரசின் உதவியுடன் வனத்துறை, காவல்துறை மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகள் இந்த வன்முறை வெறியாட்டத்தை அரங்கேற்றி இருக்கிறார்கள் என சுட்டிக்காட்டியுள்ளார்.

**அப்போதைய அரசு, பழங்குடியின பெண்களை பாதுகாக்க அக்கறை காட்டவில்லை எனவும், மாறாக தவறிழைத்த அதிகாரிகளை பாதுகாக்கவே முற்பட்டதாகவும் கடும் கண்டனத்தை நீதிபதி வேல்முருகன் பதிவுசெய்துள்ளார்.**

**அம்மா ஆட்சியின் எத்தனையோ அவலங்களுக்கு 'வாச்சாத்தியும்' கொடூரமான அடையாளமாக வரலாற்றில் பதிவாகி உள்ளது.**

## வைகை, கோவை விரைவு ரயில் பயண நேரம் அதிகரிப்பு!

*சென்னை, அக்.2- வந்தே பாரத் ரயில் சேவை காரணமாக, சென்னை மதுரை இடையே இயக்கப்படும் வைகை விரைவு ரயில், மதுரை கோயம் புத்தூர் சந்திப்புக்கு இயக்கப்படும் விரைவு ரயில் ஆகியவற்றின் பயண நேரம் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால், பயணிகள் கடும் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.*

*இந்நிலையில், வந்தே பாரத் ரயில் சேவை காரணமாக, சென்னை மதுரை இடையே பகலில் இயக்கப்படும் வைகை விரைவு ரயிலின் பயண நேரம் 15 நிமிடம் அதிகரிக்கப்பட்டுள்ளது. சென்னையில் இருந்து மதுரைக்கு பகல் நேரத்தில் அதிவிரைவுடன் குறைந்த கட்டணத்தில் இயக்கப்படும் ரயிலாக வைகை விரைவு ரயில் உள்ளது. கடந்த 46 ஆண்டுகளாக தென் மாவட்ட மக்களின் ரயில் பயணத்தில் வைகை விரைவு ரயில் பேருதவியாக இருக்கிறது.*





முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.10.2023) நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் 96–வது பிறந்தநாளை முன்னிட்டு சென்னை, அடையாறு, சிவாஜி கணேசன் மணிமண்டபத்தில் உள்ள சிவாஜி கணேசன் அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் த.வேலு, ஏ.எம்.வி.பிரபாகர ராஜா,துணை மேயர் மு. மகேஷ் குமார், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி முருகன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு.இரா. செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் த.மோகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், சிவாஜி கணேசன் அவர்களின் மகன்கள் ராம்குமார் மற்றும் பிரபு குடும்பத்தினர், திரைப்பட நடிகர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

அக். 2- காந்தி ஜெயந்தி நாளையொட்டி - 'எல்லார்க்கும் எல்லாம்' எனும் மையக் கருத்தின்படி - இன்று

# தமிழ்நாட்டில் - 12,525 கிராம ஊராட்சிகளிலும் கிராம சபைக் கூட்டங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - காணொலிக் காட்சி வாயிலாக உரையாற்றுகிறார்!

**சென்னை, அக்.2 -**

**தமிழ்நாட்டில் காந்தி ஜெயந்தி அக். 2 அன்று 12,525 கிராம ஊராட்சிகளிலும் கிராம சபைக் கூட்டங்கள் நடைபெறவுள்ளது. இக்கூட்டங்களில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலிக்காட்சி வாயிலாக உரையாற்றுகிறார்.**

அதன் விபரம் வருமாறு :

மக்களதிகாரத்திற்கு முக்கியத்துவம் அளித்திடும் வகையில் இவ்வரசு பொறுப்பேற்றவுடன் கிராம ஊரட்சிகளில் ஆண்டுதோறும் நடைபெறும் 4 கிராம சபைக் கூட்டங்கள் என்பதை 6 ஆக உயர்த்தி அரசாணையிட்டு கிராம சபைக் கூட்டங்கள் நடைபெறுவது உறுதி செய்யப்படுகிறது.

இந்தியா கிராமங்களில் வாழ்கிறது என்றுரைத்த உத்தமர் காந்தியடிகளின் பிறந்ததினமான அக்டோபர் 2ஆம் நாளில் நடைபெற உள்ள கிராமசபைக் கூட்டங்களில் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் பொதுமக்கள் பெருந்திரளாகக் கலந்து கொள்ளும் வகையில் அனைத்து கிராம ஊராட்சிகளும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கிராம சபைக் கூட்டங்களில் பொதுமக்கள் அதிக அளவில் கலந்து கொள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுத்திடும் வகையில் கிராமசபைக் கூட்ட அழைப்பிதழ் ஒன்று வடிவமைக்கப்பட்டு ஊரக வாழ் பொது மக்களுக்கு இல்லம் தோறும் வழங்கப்பட்டுள்ளது.

"எல்லார்க்கும் எல்லாம் என்றிருப்பதான இடம் நோக்கி நடக்கின்றது இந்த வையம்" என்கிற புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்களின் வரிகளுக்கிணங்கவும், முதலமைச்சர் அவர்களின் எண்ணப்படி "அனைவரையும் உள்ளடக்கிய, பொறுப்புள்ள மக்கள் நலனை மையமாகக் கொண்ட உள்ளாட்சி நிர்வாகத்தினை நோக்கிய இந்த கிராம சபையின் கருப்பொருளாக "எல்லார்க்கும் எல்லாம்" என்கிற மையக்கருத்தின்படி நடத்தப்படவுள்ளது.

இவ்வழைப்பிதழ் கிராமசபைக் கூட்டத்திற்கான கருப்பொருளான "எல்லார்க்கும் எல்லாம்" எனும் மைய கருத்துடன் அரசு செயல்படுத்தும் அனைத்து முன்மாதிரி திட்டங்கள் மூலம் பயன் பெற்றோர் விவரம், கிராம ஊராட்சியின் வரவு செலவு கணக்கு விவரங்கள், ஊராட்சியால் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் / பணிகள் மற்றும் அதனால் பயன்பெறும் பயனாளிகள் ஆகியன அடங்கிய கையடக்க விழிப்புணர்வு பிரதிகள் மூலம் அனைத்து வீடுகளுக்கும் விநியோகிக்கப்பட உள்ளது.

இவ்வரசின் மூலம் செயல்படுத்தப்படும் அரசின் முத்தான திட்டங்களான விடியல் பயணம்– மகளிருக்கு கட்டணமில்லாப் பேருந்து சேவை, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப் பெண் திட்டம், நான் முதல்வன், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் ஆகியவை குறித்து பொதுமக்கள் அனைவரும் தெரிந்து கொள்ளும் விதமாக திட்டசெயலாக்கம், பயனாளிகள் தேர்வு விவரம், திட்டத்தின் பயன்கள் குறித்து குறும்படங்கள் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் காட்சிப்படுத்தும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கிராமசபை கூட்டங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலி குறும்பட உரையின் மூலம் 2.10.2023 அன்று துவக்கி, கிராம சபை குறித்த கருத்துக்களைத் தெரிவித்திட உள்ளார்கள். மேலும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் தொடர்புடைய மாவட்டங்களில் நடைபெறும் கிராம சபைக் கூட்டங்களில் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

கிராமசபைக் கூட்டத்திற்கான உத்தேசப் பொருட்கள் அடங்கிய வழிகாட்டுதல்கள் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக கிராம ஊராட்சிகளுக்கு அனுப்ப ப்பட்டுள்ளது. இதில், பொதுவான விவாதப் பொருட்களாக, ஊராட்சிகளின் நிதி நிலை அறிக்கை, டெங்கு காய்ச்சல் தடுப்பு விழிப்புணர்வு, மழைநீர் சேரிப்பு, வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம், தூய்மை பாரத இயக்கம், ஜல் ஜீவன் திட்டம், கிராம ஊராட்சியின் தணிக்கை அறிக்கை, பிரதமமந்திரி ஊரக குடியிருப்பு திட்டம், மக்கள் திட்டமிடல் இயக்கம் மற்றும் இதர பொருட்களுடன் விவாதம் நடைபெற உள்ளது.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழர்களின் கம்பீரமான கலையுலக அடையாளம்

# "நடிகர் திலகம்" சிவாஜியின் புகழ் என்றென்றும் நிலைத்திருக்கும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

சென்னை, அக். 2-



**'நடிகர் திலகம்' சிவாஜி கணேசன் அவர்களின் 96-வது பிறந்தநாளை யொட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், நடிப்பின் இமயமாய், தமிழர்களின் கம்பீரமான கலையுலக அடையாளமாய் என்றென்றும் உயர்ந்து நிற்கும் 'நடிகர் திலகம்' சிவாஜி கணேசன் அவர்களின் புகழ் தரணி உள்ளவரை நிலைத்திருக்கும் என புகழாரம் சூட்டியுள்ளார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "நடிகர் திலகம்" சிவாஜி கணேசன் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சமூக வலை தளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

முத்தமிழறிஞர் கலைஞரின் கனல் தெறிக்கும் வசனங்களை அனல் பறக்கத் தமது சிம்மக் குரலால் பேசி, ரசிகர் நெஞ்சங்களில் சிம்மாசனமிட்டு அமர்ந்த "நடிகர் திலகம்" அவர்களின் 96-ஆவது பிறந்தநாள் இன்று!

நடிப்பின் இமயமாய், தமிழர்களின் கம்பீரமான கலையுலக அடையாளமாய் என்றென்றும் உயர்ந்து நிற்கும் "நடிகர் திலகம்" சிவாஜி கணேசன் அவர்களின் புகழ், தரணியும், தமிழும் உள்ளவரை என்றென்றும் நிலைத்திருக்கும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# மிக மிகச் சாதாரணமானவர்கள் சேர்ந்து உருவாக்கிய இயக்கம் இது! முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி

தி.மு.க.காரன் எந்த அளவிற்குக் கொள்கை வெறியுள்ளவன் என்பதற்கு ஒரு சிறிய உதாரணம் சொல்கிறேன்...

ஒருமுறை, பேரறிஞர் அண்ணா அவர்கள், ஒரு தொண்டருக்கு ஒரு பொறுப்பைக் கொடுத்தார், ஆனால் அந்தத் தொண்டர், தனக்கு அந்தப் பொறுப்பு வேண்டாம் என்று சொல்லிவிட்டார். 'என்ன காரணம்?' என்று அண்ணா கேட்டார். "எனக்கு வசதி இல்லை... ஏழை" என்று அந்தத் தொண்டர் சொன்னார். அவருடைய தயக்கத்தைப் புரிந்துகொண்ட அண்ணா, என்ன சொன்னார் தெரியுமா?

"உன் ஊரில் கரிக்கட்டை இருக்கும் அல்லவா... அதை வைத்து 'உதயசூரியன்' சின்னத்தை வரை... அதுதான் சிறந்த இயக்கப் பணி!" என்று சொன்னார்.

மிக மிகச் சாதாரணமானவர்கள் சேர்ந்து உருவாக்கிய இயக்கம் இது. இங்கு எல்லோருக்கும் வசதி வாய்ப்பு இல்லை... ஆனால் தி.மு.க.வில் எல்லோருக்கும் அறிவார்ந்த கொள்கை இருக்கிறது! அந்தக் கொள்கைகளை அடைய வேண்டும் என்று இலட்சியம் இருக்கிறது! அதுதான் நம்முடைய பலம்!

அதைத்தான் பேரறிஞர் அண்ணா அந்தத் தொண்டருக்குப் புரிய வைத்தார்!

ஒரு சாதாரண கரிக்கட்டையைக் கூட கருத்தியல் ஆயுதமாகப் பயன்படுத்திக் கொள்ளத் தெரிந்தவன் தி.மு.க.காரன்! அதனால்தான், சமூக வலைத்தளங்களை வெறும் பொழுதுபோக்கு அம்சமாகப் பார்க்காமல், சமூகத்தை முன்னேற்றுவதற்கான திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கைகளை நாம் பேசிக் கொண்டிருக்கிறோம். பெரிய பெரிய மாநாடெல்லாம் நடத்த வேண்டும் என்று இல்லை; நம்முடைய கருத்துகளை – கொள்கைகளை இன்னொருவரிடம் பேசுவதே, மிகப்பெரிய பரப்புரைதான்.

**அவதூறு பரப்பும் கூட்டத்தை அம்பலப்படுத்துவோம்!**

ஃபேஸ்புக் – யூடியூப் – வாட்ஸ் அப் – ட்விட்டர் – இன்ஸ்டாகிராம் – ஷேர்சாட் – டெலிகிராம் என்று நிறைய வசதிகள் வந்துவிட்டது. இவை எல்லாவற்றையும் நம் கொள்கைகளைக் கொண்டு செல்ல – கட்சியை வளர்க்கப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்! நம்முடைய சாதனைகளைச் சொல்ல வேண்டும்! மக்களை திசைதிருப்ப – ஏமாற்ற அவதூறு பரப்பும் கூட்டத்தை அம்பலப்படுத்த வேண்டும்! இதையெல்லாம் நான் பலமுறை சொல்லியிருக்கிறேன். இதைக் கவனத்தில் வைத்துச் செயல்படுங்கள்.

அவ்வாறு செயல்படும் ஐ.டி. விங்–ஐ சேர்ந்தவர்களுக்கும் – தங்களின் அடையாளத்தை வெளியே காட்டிக்கொள்ளாமல் கட்சிக்காக உழைக்கும் பலருக்கும் நன்றி!

**உங்களோடு நெருக்கமாக இருக்கப் பயன்படும் சமூக வலை தளங்கள்!**

உங்களின் பெரும்பாலான 'ட்வீட்ஸ்–ஐ'.. மன்னிக்க வேண்டும், ட்விட்டர் இப்போது, 'எக்ஸ்' ஆகிவிட்டது அல்லவா... உங்களின் பெரும்பாலான 'எக்ஸ்' பதிவுகள் என்னுடைய கவனத்திற்கு வந்துவிடும். சிலரின் பதிவுகளை ரசித்துப் படிப்பேன். அதேசமயம், ஏதாவது குறையோ – புகாரோ சொன்னீர்கள் என்றால், உடனே அதைத் தீர்ப்பதற்கான முயற்சியில் ஈடுபடுகிறேன். அந்த வகையில், உங்களோடு நெருக்கமாக இருப்பதற்கான வாய்ப்பாகத்தான் சமூக வலைதளங்களை நான் பார்க்கிறேன். இதையேதான் உங்களிடமும் நான் எதிர்பார்க்கிறேன்.

சக மனிதர்களிடம் நெருக்கமாக சமூக வலைத்தளங்களை பயன்படுத்திக் கொள்ளுங்கள். அவர்களிடம் நம்முடைய கொள்கைகளை – சாதனைகளைச் சொல்லுங்கள். ஒரே வட்டத்திற்குள் நாம் சுருங்கிடாமல், வெவ்வேறு தளங்களை நாம் 'ரீச்'–ஆக சமூக வலைதளங்கள் பயன்படுகின்றன.

அதனால்தான், நான்கூட இப்போது 'ஸ்பீக்கிங் ஃபார் இந்தியா' என்ற பாட்காஸ்ட் சீரிஸ்–ஐத் தொடங்கியிருக்கிறேன். ஏற்கனவே இரண்டு எபிஸோட் வந்துவிட்டது, விரைவாகவே அடுத்தது வரும். இந்தப் பாட்காஸ்ட் சீரிஸ், தமிழ்நாட்டைத் தாண்டி நம்முடைய கருத்துகளை, தெலுங்கு – மலையாளம் – கன்னடம் – இந்தி என்று வெவ்வேறு மொழிகளில் கொண்டு செல்கிறோம்.

**தேர்தல் பிரச்சாரம் – சேர்ந்து முன்னெடுப்போம்! வெற்றி பெறுவோம்!**

"என்னடா இது, இவர்கள் தமிழ்நாட்டில் முடங்கிக் கிடப்பார்கள் என்று பார்த்தால், இந்தி பேசும் மாநிலங்களுக்கும் வந்துவிட்டார்கள்" என்று புலம்ப ஆரம்பித்திருக்கிறார்கள்.

பார்லிமெண்ட் எலக்‌ஷனுக்கான என்னுடைய பிரச்சாரத்தை நான் தொடங்கிவிட்டேன்; நாம் சேர்ந்து முன்னெடுப்போம்! வெற்றி பெறுவோம்!

இந்திய அரசியலில் எல்லாவற்றுக்கும் முன்னோடியாக இருக்கும் நாம்தான், இந்த மாதிரி 'பாட்காஸ்ட்' பிரச்சாரத்திலும் முன்னோடியாக இருக்கிறோம். இவ்வாறு எல்லாவற்றிலும் நாம் அப்டேட்டாகவும் இருக்க வேண்டும்; அட்வான்ஸாகவும் இருக்க வேண்டும்! அதனால்தான், இப்போது நம்முடைய கருத்துகள் மற்ற மொழி ஊடகங்களிலும் எதிரொலிக்கத் தொடங்கியிருக்கிறது.




இந்தியாவுக்காகப் பேசுவோம் – எபிஸோட் 1 மற்றும் 2, இதுவரை பல லட்சம் பேரால் கேட்கப்பட்டுள்ளது.

இதெல்லாம் பத்து, பதினைந்து மாநாடு நடத்தியதற்குச் சமம்.

**கொள்கைகள், சாதனைகளை எடுத்துச் சொல்வோம்!**

மாநாடு என்றால் நம்முடைய ஆட்கள்தான் பெரும்பாலும் வருவார்கள். ஆனால், நம்மை எதிர்ப்பவர்கள் கூட, இதைக் கேட்கிறார்கள். இதன் மூலமாக வீண் வெறுப்பிலும் – பொய்களை நம்பி அறியாமையிலும் இருக்கும் அவர்கள், உண்மைகளைப் புரிந்துகொண்டு மனம் மாறுவார்கள். நம்முடைய கொள்கைகளையும் – சாதனைகளையும் சொல்வதற்கு மட்டுமே நாம் சமூக வலைதளங்களை பயன்படுத்துவோம்.

அ.தி.மு.க.வும் – பா.ஜ.க.வும் பொய்ச்செய்திகளையும் அவதூறுகளையும் பரப்புவதற்காகவே சம்பளம் கொடுத்து வேலைக்கும் – கூலிக்குத் தனியாகவும் ஆட்களை வைத்திருக்கிறார்கள். அவர்கள் என்றைக்காவது கொள்கையைப் பேசிப் பார்த்து இருக்கிறீர்களா?

**கள்ளக்கூட்டணியில் இருக்கும் அ.தி.மு.க.வும் பா.ஜ.க.வும் பரப்பும் பொய்களுக்கு ஆயுள் மிகவும் குறைவு. ஆனால், நம்முடைய கொள்கைகளுக்கு வலிமை அதிகம்! அதனால்தான், 75 ஆண்டுகளாக திராவிட முன்னேற்றக் கழகம் இளமை மாறாமல் இருக்கிறது. மக்களும், ஆறு முறை தமிழ்நாட்டை ஆளும் வாய்ப்பை நமக்குக் கொடுத்திருக்கிறார்கள்.**

**அ.தி.மு.க.விற்கு கொள்கை என்ற ஒன்றே கிடையாது!**

சமூகத்தில் ஏற்றத்தாழ்வை ஆதரித்து – வெறுப்பை விதைக்கும் பா.ஜ.க.வால் அதன் கொள்கையை தமிழ்நாட்டில் பேச முடியாது. அ.தி.மு.க.விற்குக் கொள்கை என்ற ஒன்றே கிடையாது. எந்தப் பிரச்சினைகளிலும் கொள்கை சார்ந்த நிலைப்பாடு கிடையாது. அதனால், அவர்கள் நாள்தோறும் நம்மைப் பற்றி அவதூறு பரப்புவார்கள். அதற்கெல்லாம் யாரும் முக்கியத்துவம் தராதீர்கள்.

மக்கள் தங்களை அடையாளம் கண்டுபிடித்துவிட்டார்கள் என்று உணர்ந்துவிட்டாலே கூலிகளுக்குப் பதற்றம் வந்துவிடும். என்னதான் கத்தினாலும், சீண்டினாலும் தி.மு.க. காரர்கள் நம்மை கவனிக்கவில்லையே என்று அடிமைக் கும்பலுக்கு விரக்தி வந்துவிடும்.

இப்போதுகூட, பேரறிஞர் அண்ணா மன்னிப்பு கேட்டார் என்று ஒரு செய்தியைப் பரப்பினார்கள். அவ்வாறு ஒரு சம்பவமே நடக்கவில்லை என்று இந்து ஆங்கில நாளிதழே மறுத்து விட்டது.

அடுத்து, மருதமலை கோயிலுக்கு, தி.மு.க. ஆட்சி மின் இணைப்பு தரவில்லை என்று பரப்பினார்கள். ஆனால், தி.மு.க. ஆட்சிக்கு வருவதற்கு 5 வருடத்திற்கு முன்பே மருதமலை கோயிலில் மின் இணைப்பு வந்துவிட்டது என்று கல்வெட்டு ஆதாரம் காட்டியிருக்கிறார்கள்.

பா.ஜ.க.விற்குப் பொய் சொல்வது எந்த அளவிற்கு பழக்கம் ஆகிவிட்டது என்றால், பிரதமர் தொடங்கி ஒன்றிய அமைச்சர்கள் பலரும் பொய்களை உண்மை என்று நினைத்து நாடாளுமன்றத்திலேயே பேசுகிறார்கள். இவ்வாறு அவர்கள் பொய்களைப் பரப்பிக்கொண்டே இருப்பார்கள். நாம் எல்லாவற்றுக்கும் பதில் சொல்லிக்கொண்டு இருக்க முடியுமா? நமக்கு ஆக்கப்பூர்வமான வேலைகள் நிறைய இருக்கின்றன. எதிர்காலத்தில் தமிழ்நாடு எதிர்நோக்கியிருக்கும் பிரச்சினைகள் நிறைய இருக்கின்றன. அதையெல்லாம் நாம் எதிர்த்தும் போராடியாக வேண்டும். எவ்வாறு, நீட் தேர்வின் அபாயத்தை முன்பே உணர்ந்து, நாம் போராட ஆரம்பித்தோமோ, அவ்வாறு நிறைய வேலைகள் நமக்கு இருக்கிறது.

கள்ளக்கூட்டணியில் இருக்கும் அ.தி.மு.க.வும் பா.ஜ.க.வும் பரப்பும் பொய்களுக்கு ஆயுள் மிகவும் குறைவு. ஆனால், நம்முடைய கொள்கைகளுக்கு வலிமை அதிகம்! அதனால்தான், 75 ஆண்டுகளாக திராவிட முன்னேற்றக் கழகம் இளமை மாறாமல் இருக்கிறது. மக்களும், ஆறு முறை தமிழ்நாட்டை ஆளும் வாய்ப்பை நமக்குக் கொடுத்திருக்கிறார்கள்.

**பா.ஜ.க.வின் பொய் முகத்திரையைக் கிழிப்போம்!**

அடுத்து, நாடாளுமன்றத் தேர்தல் வரப் போகிறது. 'நாற்பதும் நமதே! நாடும் நமதே!' என்று நம்முடைய முழக்கத்தைச் சொல்லி வருகிறோம். தமிழ்நாட்டில் இருக்கும் அனைத்துத் தொகுதிகளிலும் வெற்றி பெற்றால் மட்டும் போதாது. இந்தியா முழுவதும் நம்முடைய 'இந்தியா கூட்டணி'தான் வெற்றி பெற வேண்டும். அதற்கு பா.ஜ.க.வின் பொய் முகத்திரையைக் கிழிக்க வேண்டும். கடந்த பத்து ஆண்டுகளாக, கொடுத்த வாக்குறுதி எதையும் நிறைவேற்றாமல், பா.ஜ.க. பம்மாத்து செய்துகொண்டு இருக்கிறது என்பதை அம்பலப்படுத்த வேண்டும்.

'டைவர்ஷன் பாலிட்டிக்ஸ்'தான் அவர்களின் ஆயுதம். உண்மையான பிரச்சினைகளைப் பற்றி எப்போதுமே பேச மாட்டார்கள். பிரச்சினையே இல்லாத ஒன்றைப் பற்றி, திரும்பத் திரும்பப் பேசிப் பிரச்சினையாக ஆக்குவார்கள். அதற்கு சில ஊடகங்களும் துணை செல்லும். இதைக் கரெக்ட்டாகப் புரிந்து கொண்டாலே போதும்!

'சந்திராயன் விட்டோம். ஜி–20 மாநாடு நடத்தினோம்' என்று பிரதமர் நரேந்திர மோடி படம் காட்டிக் கொண்டு இருக்கிறார். அவர் இதற்கு முன்பு கொடுத்த வாக்குறுதிகள் எல்லாம் என்ன ஆயின என்று நினைவூட்டி, அந்த வீடியோக்களை அதிகம் பரப்புங்கள்.

'ஆட்சிக்கு வந்தால் கருப்புப் பணத்தை மீட்டு, ரூபாய் 15 லட்சம் கொடுப்போம்' என்று பிரதமர் மோடி சொன்னதையும் – அதெல்லாம் உங்களை ஏமாற்றுவதற்காக சொன்ன 'ஜூம்லா' என்று உள்துறை அமைச்சர் அமித் ஷா சொன்னதையும் அதிகமாகப் பரப்புங்கள்.

**மணிப்பூருக்கு பிரதமர் ஒருமுறை யேனும் சென்றாரா?**

"இந்திய மகளிருக்காக இப்போது உருகுகிற மாதிரி நடிக்கும் பிரதமர் அவர்களே! மணிப்பூரில் இரண்டு பெண்கள் நிர்வாணப் படுத்தப்பட்டபோது என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்? மணிப்பூருக்குப் போய் பாதிக்கப்பட்டவர்களைப் பார்த்தீர்களா?" என்று கேள்வி எழுப்புங்கள். "மல்யுத்த வீராங்கனைகள் பா.ஜ.க. எம்.பி. மேல் சொன்ன பாலியல் புகார், பல மாத காலமாகப் பிரதமர் காதில் விழாமல் போனது ஏன்?" என்று கேள்வி எழுப்புங்கள்.

**நாற்பதும் நமதாகும்! நாடும் நமதாகும்!**

பா.ஜ.க.வின் கடந்த காலத் தவறுகளை சமூக வலைதளங்களில் திரும்பத் திரும்ப நினைவூட்டி பிரச்சாரம் செய்யுங்கள். இதைச் சரியாக செய்தாலே, நாற்பதும் நமதாகும்! நாடும் நமதாகும்!

இந்த 'செப்டம்பர் – திராவிட மாதம்', தலைவர் கலைஞரின் நூற்றாண்டில் வந்திருக்கிறது. கலைஞரின் உடன்பிறப்புகளாக, அவர் விட்டுச்சென்ற பணிகளைத் தொடர்ந்து, இந்தியா முழுவதும் திராவிடவியல் கோட்பாட்டைக் கொண்டு செல்வோம். அடுத்த 'செப்டம்பர் – திராவிட மாத'த்தை, 'வெற்றி விழாக் கொண்டாட்ட மாத'மாகக் கொண்டாடுவோம்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

## தமிழினத் தலைவர்
## கலைஞர் நூற்றாண்டு சிறப்பிதழ் (5)
### அக்டோபர் 4 புதன்கிழமை வெளிவருகிறது !



**தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினை யொட்டி, ஒவ்வொரு மாதமும் 3 ஆம் தேதியன்று "முரசொலி சிறப்பிதழ்" வெளிவரும் என்று அறிவிக்கப்பட்டு, இதுவரை 4 சிறப்பிதழ்கள் வெளியிடப்பட்டுள்ளன.**

**அக்டோபர் 2 - திங்கள் கிழமை, அண்ணல் காந்தி அடிகள் பிறந்த நாள் என்பதால், அன்று முரசொலிக்கு விடுமுறை.**

**எனவே அக்டோபர் 4, புதன்கிழமை அன்று, முரசொலி சிறப்பிதழ்(5), "தமிழ்த் திரை உலகத்தின் பார்வையில் கலைஞர்" என்ற தலைப்பில், முரசொலியின் இணைப்பாக வெளிவருகிறது.**


**- ஆசிரியர்.**

---

# மகளிர் இடஒதுக்கீடு பா.ஜ.க.வின் ஏமாற்று வேலை!
## ஒன்றிய முன்னாள் நிதி அமைச்சர் ப.சிதம்பரம் பேட்டி!

சிவகங்கை, அக். 2 -

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் முன்னாள் ஒன்றிய நிதி அமைச்சர் ப. சிதம்பரம் எம்.பி. செய்தியாளர்களிடம் கூறியதாவது.



காரைக்குடியில் முதல்வரால் அறிவிக்கப்பட்ட சட்ட கல்லூரிக்கான ஒப்பந்தகாரை தேர்வு செய்யும் பணி முடிவடையும் நிலையில் உள்ளது. விரைவில் கட்டிடப் பணிகள் துவங்கும். இந்த கல்லூரியில் 75 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளார்கள் இதில் 54 பேர் மாணவிகள் என்பது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. பெண்கள் சட்டக் கல்வியை ஆர்வத்துடன் படிக்க வருவது வரவேற்கத்தக்கதாகும்.

சமீபத்தில் கூடிய நாடாளுமன்றத்தில் மகளிர்க்கு 33 சதவீத இட ஒதுக்கீடு இன்று பா.ஜ.க. கூறிய சட்டம் கொண்டு வந்தது ஏமாற்று வேலை. இதற்கு குடியரசுத்தலைவர் ஒப்புதல் அளித்தது வரவேற்கத்தக்கது . ஆனால் இந்த சட்டம் மசோதா வாக உள்ளதே தவிர அமலுக்கு வர வாய்ப்பு இல்லை. முன்னாள் பிரதமர் தேவகவுடா 1996 இல் மகளிர் சட்ட மசோதா கொண்டு வந்தார்.

பிறகு வாஜ்பாய் முயற்சி எடுத்தும் அது நிறை வேற்றப் படவில்லை. 2010ல் மன்மோகன் சிங் நிறைவேற்றி னார். 1996 , 1999, 2000, 2010, ஆண்டுகளில் கொண்டுவரப் பட்ட இந்த மகளிர் மசோதாவில் எந்த வேறுபாடும் கிடையாது . அதே மசோதா அதே வரைவினை சட்டத்தினை பி.ஜே.பி. அரசு அமுல்படுத்தியிருந்தால் அல்லது குடியரசுத்தலைர் ஒப்புதல் அளித்தி ருந்தால் 2024 தேர்தலில் இந்த சட்டம் நடைமுறைக்கு வந்திருக்கும்.

ஆனால் பா.ஜ.க. அரசு விஷமத் தனமாக வேண்டும் என்றே இதில் பல்வேறு தடைக்கற்களை வைத்துள்ளது. அதில் முக்கியமாக மக்கள் தொகை கணக்கெடுப்பும் அதன் பிறகு தொகுதி மறுவரையும் ஆகும் .

இந்த கணக்கின்படி 2024, 2029 தேர்தல் களில் இந்த மசோதா அமலுக்கு வராது. இந்த மசோதா மீது பா.ஜ.க அரசுக்கு நம்பிக்கை இல்லை. தேர்தலுக்காக இதை கொண்டு வந்துள்ளது. அ.தி.மு.க. பா.ஜ.க.வை விட்டு வெளியேறுவது மகிழ்ச்சி. பா.ஜ.க. அரசு நாடாளுமன்ற தேர்தல் வருவதால் டீசல் பெட்ரோல், விலையை குறைப்பார்கள். சேமிப்பு கணக்கு வட்டியை உயர்த்துவார்கள்.

ஏன் தக்காளி வெங்காயம் விலையை கூட குறைப்பார்கள். நடைபெற உள்ள பாராளுமன்ற தேர்தலில் இந்தியா கூட்டணி சார்பில் 10 ஆண்டுகளில் பா.ஜ.க. ஆட்சியில் ஏற்பட்ட விலைவாசி உயர்வு, இந்து முஸ்லிம் பகைமை, மணிப்பூர் கலவரம் குறித்து மக்களிடம் விளக்கி வாக்கு கேட்போம். இந்தியா கூட்டணி நாளுக்கு நாள் வலுவடைந்து வருகிறது. முதல்வர் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை ஒரு கோடியே 6 லட்சத்து 50 ஆயிரம் பேருக்கு கொடுப்பது வரவேற்கத்தக்கது. பாராட்டுக்குரியது. இதில் விடுபட்டுள்ள 15 லட்சம் பேருக்கும் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் .

இது மிக சிறப்பான திட்டம். அது தவிர அரசு பேருந்துகளில் பெண்களுக்கான இலவச பயணம், காலை சிற்றுண்டி திட்டம் மிகவும் வரவேற்கத்தக்கதாகும் பாராட்டுக்குரியதாகும்.

இவ்வாறு ஒன்றிய முன்னாள் அமைச்சர் ப.சிதம்பரம் எம்.பி. கூறினார்.

பேட்டியின் போது எஸ். மாங்குடி எம்.எல்.ஏ. மாவட்ட தலைவர் சஞ்சய் காந்தி ஆகியோர் இருந்தார்கள்.

---

## விடுமுறை

**உத்தமர் காந்தியடிகள் பிறந்த நாளையொட்டி 'முரசொலி' அலுவலகத்திற்கு இன்று (2.10.2023 – திங்கள்கிழமை) விடுமுறை! 'முரசொலி'யின் அடுத்த இதழ், வழக்கம் போல 4.10.2023 - புதன்கிழமை அன்று வெளிவரும்.**

**- நிர்வாகி**

வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணி:

# கடலூர் கிழக்கு மாவட்டக் கழகத்தினர் தீவிரமாக ஈடுபடுவீர்!

## கழகத்தினருக்கு - மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் வேண்டுகோள்!



கடலூர், அக்.02-

கடலூர் கிழக்கு மாட்டத்திலுள்ள கழக நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள், வாக்குச்சாவடி நிலை முகவர்களுக்கு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினரும், கடலூர் கிழக்கு மாவட்ட செயலாளருமான எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களின் அறிவுறுத்தலின்படி, இந்திய தேர்தல் ஆணையம் வருகின்ற 01.01.2024ஐ தகுதி யேற்படுத்தும் நாளாகக் கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்தத்தினை இந்தியத் தேர்தல் ஆணையம் கீழ்காணும் அட்டவணையின்படி அறிவித்துள்ளது. கடலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும், 27.10. 2023 முதல் 09.12.2023 வரை புதிய வாக்காளர்களைச் சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும் திருத்தம் செய்யவும் மனுச் செய்ய கால அவகாசம் கொடுக்கப் பட்டுள்ளது.

இதுதவிர 04.11.2023 (சனிக்கிழமை), 05.11.2023 (ஞாயிற்றுக்கிழமை) - 18.11.2023 (சனிக்கிழமை) மற்றும் 19,11,2023 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய நான்கு நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட மையங்களில் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 வரை அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்படவுள்ளன.

அதன்படி, இந்த நாட்களில் வாக்காளரே தாமாக முன்வந்து வாக்காளர்கள் பட்டியலில் உள்ள தங்களது விவரங்களை சரிபார்த்து, விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும், 1.1.2024 அன்று 18 வயது நிரம்பக்கூ டிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று, பூர்த்தி செய்து, அந்தப் படிவங்களை அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் கொடுக்க வேண்டும்.

இதனடிப்படையில் 2024ஆம் ஆண்டு ஜனவரி 1-ந் தேதி 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும், புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்களர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும், தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் - 27. 10.2023 பெயர்களைச் சேர்க்க / நீக்க / திருத்தம் செய்வதற்கு மனு கொடுக்ககால அவகாசம் -27.10.2023 முதல் 09.12.2023 வரை.

சிறப்பு முகாம் நடத்தப்படும் நாட்கள் 04, 05.11. 2023 மற்றும் 18, 19.11.2023

இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாள் - 01.01.2024

மேலும் மேற்கண்ட நாட்களில் நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு பணியிலும், சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்களிலும், கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த, மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், மாநகர மேயர், நகரமன்ற, பேரூராட்சி மன்ற, ஊராட்சி மன்ற தலைவர்கள், துணைத்தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக்குழு, ஒன்றியக் குழு உறுப்பினர்கள், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், மற்றும் வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (Blc) மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக தோழர்கள் அனைவரும் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். மேலும் இந்த பணியின் விவரத்தினை மாவட்ட கழகத்திற்குத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பு: வாக்காளர் சேர்க்கும் பணியின்போது நமது கழகத்தின் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள BLA2க்கள் இந்த பணியினை முழுமையாக இருந்து நாடாளுமன்ற தேர்தல் வரை, தேர்தல் ஆணையத்தால் நிய மிக்கப் பட்டுள்ள BLOஉடன் இருந்து கண்காணிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பி ட்டுள்ளார்.

விலைமதிப்பற்ற உயிர்களைத் தொடர்ந்து காத்திட

# பொதுமக்கள் மனமுவந்து தன்னார்வ ரத்த தானம் செய்திட முன்வாரீர்!

## தேசிய தன்னார்வ இரத்ததான நாள் செய்தியில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

**சென்னை, அக்.2 -**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தேசிய தன்னார்வ இரத்ததான நாளையொட்டி விடுத்துள்ள செய்தியில், "விலைமதிப்பற்ற உயிர்களைத் தொடர்ந்து காத்திட, பொதுமக்கள் அனைவரும் மனமுவந்து தன்னார்வ இரத்ததானம் செய்திட முன்வர வேண்டும்!" என வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தேசிய தன்னார்வ இரத்ததான நாள் செய்தி வருமாறு:

இரத்த தானம் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் திங்கள் முதல் நாள் தேசிய தன்னார்வ இரத்த தான தினமாகக் கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டிற்கான தேசிய தன்னார்வ இரத்த தான தினத்தின் கருப்பொருள் "தொடர்ந்து இரத்தம், பிளாஸ்மா தானம் செய்வோம், வாழ்வைப் பகிர்ந்து கொள்வோம்" என்பதாகும்.

அறிவியலில் ஏராளமான கண்டுபிடிப்புகள் நிகழ்ந்திருந்தா லும் இரத்தம் என்ற உயிர் திரவத்தை இன்னும் செயற்கையாக உருவாக்க இயலவில்லை. ஒவ்வொருவரின் உடலிலும் உள்ள சுமார் 5 லிட்டர் இரத்தத்தில், இரத்த தானத்தின் போது 350 மி.லி இரத்தம் மட்டுமே எடுக்கப்படுகிறது. இரத்த தானம் செய்ய 20 நிமிடங்களே ஆகும். இரத்த தானம் செய்தவுடன் வழக்கம் போல் அன்றாட வேலைகளை மேற்கொள்ளலாம். 18 வயது முதல் 65 வயது வரை உள்ள ஆரோக்கியமான அனைவரும் 3 மாதத்திற்கு ஒருமுறை இரத்த தானம் செய்யலாம்.

உரிய கால இடைவெளியில் இரத்த தானம் செய்வதால் உடலில் புதிய செல்கள் உருவாகி அவர்களின் உடல் நலன் காக்கப்படுகிறது. அரசு இரத்த மையங்கள் மற்றும் இரத்த தான முகாம்களில் தன்னார்வமாக இரத்த தானம் செய்யலாம்.

இரத்த மையங்களின் செயல்பாடுகளை கண்காணிப்பதற்கான e-RaktKosh வலைதளத்தில், இரத்த தான முகாம் மற்றும் இரத்த கொடையாளர்களை பதிவு செய்து கொள்ளலாம். பொதுமக்கள் இத்தளத்தைப் பயன்படுத்தி தங்களுக்கு தேவைப்படும் நேரங்களில் எளிதில் இரத்தம் பெற்றுக் கொள்ளலாம்.

தானமாகப் பெறப்படும் ஒரு அலகு இரத்தம் 4 உயிர்களை காப்பாற்றும். இவ்வாறு பிறர் உயிர் காக்க உதவிடும் இரத்தக் கொடையாளர்கள் மற்றும் இரத்த தான முகாம் அமைப்பாளர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களும், பதக்கங்களும் வழங்கி தமிழ்நாடு அரசு சிறப்பித்து வருகிறது.

கடந்த ஆண்டு அரசு இரத்த மையங்கள் மூலம் 95 விழுக்காடு இரத்தம் சேகரிக்கப்பட்டு, தன்னார்வ இரத்த தானத்தில், இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்வது குறித்து பெருமையடைகிறேன். நடப்பு ஆண்டில், தன்னார்வ இரத்ததானத்தில் தமிழ்நாடு 100 விழுக்காடு இலக்கை எய்தி, விலை மதிப்பற்ற உயிர்களை தொடர்ந்து காத்திட, பொதுமக்கள் அனைவரும் மனமுவந்து தன்னார்வ இரத்த தானம் செய்திட முன்வர வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**'மகிழ்வுடன் இரத்த தானம் செய்திடுவோம்!**

**மனித உயிர்களை காத்திடுவோம்!!**

இவ்வாறு அச்செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாடு முழுவதும் - பள்ளி மாணவ-மாணவியர் - கலைஞரின் கவிதைகள் - திரைப்பட வசனங்கள் ஒப்பிக்கும் போட்டி!

# கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை சார்பில் - கலைஞர் நூற்றாண்டு விழா!

## மாவட்டம் வாரியாக நடைபெறும் விபரம்! வாகை சந்திரசேகர் அறிவிப்பு!

சென்னை, அக்.02-

கழக கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை சார்பில், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தமிழ்நாடு முழுவதும், மாவட்டந்தோறும், பள்ளி மாணவ, மாணவியருக்கான - கலைஞரின் கவிதைகள் மற்றும் திரைப்பட வசனங்கள் ஒப்பிக்கும் போட்டிகள் நடைபெறுகின்றன எனவும், அணியின் மாநிலச் செயலாளர்களும், மாநில துணைச் செயலாளர்களும், மாவட்ட வாரியாகச் சென்று அப்பணியினைச் செவ்வனே நிறைவேற்றும் பொறுப்பினை ஏற்றுக்கொண்டுள்ளார்கள் எனவும், கழக கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவையின் தலைவர் வாகை சந்திரசேகர் அறிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

பள்ளி மாணவ-மாணவியருக்கான தலைவர் கலைஞர் அவர்களின் கவிதைகள், திரைப்பட வசனங்கள் ஒப்பிக்கும் போட்டியில் - பேரவையின் மாநிலச் செயலாளர்கள், துணைச் செயலாளர்கள் பொறுப்பு ஏற்கும் மாவட்டங்கள் விவரம் வருமாறு:-

**மாநிலச் செயலாளர்**
**பொள்ளாச்சி மா.உமாபதி**

கோவை மாநகர், கோவை வடக்கு, கோவை தெற்கு, நீலகிரி, திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு, ஈரோடு வடக்கு, ஈரோடு தெற்கு.

**மாநில துணைச் செயலாளர்**
**மீனா ஜெயக்குமார்**

சேலம் வடக்கு, சேலம் தெற்கு, சேலம் மத்தி

**மாநிலச் செயலாளர்**
**அர.திருவிடம் (திருவாரூர்)**

நாகை, மயிலாடுதுறை, தஞ்சை வடக்கு, தஞ்சை தெற்கு, தஞ்சை மத்தி, விருதுநகர் வடக்கு, விருதுநகர் தெற்கு.

**மாநிலச் செயலாளர்**
**இறையன்பன் குத்தூஸ்**

**துணைச் செயலாளர்**
**கவிஞர் நன்மாறன்**

சென்னை கிழக்கு, சென்னை மேற்கு, சென்னை தெற்கு, சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை தென்மேற்கு, திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மேற்கு, திருவள்ளூர் மத்தி, காஞ்சி வடக்கு, காஞ்சி தெற்கு, விழுப்புரம்.

**மாநிலச் செயலாளர்**
**வண்ணை அரங்கநாதன்**

திருச்சி தெற்கு, கடலூர் கிழக்கு, கடலூர் மேற்கு, அரியலூர், பெரம்பலூர், கரூர், சிவகங்கை, இராமநாதபுரம்.

**மாநிலச் செயலாளர்**
**தில்லை செல்வம்**

கன்னியாகுமரி கிழக்கு, கன்னியாகுமரி மேற்கு, தூத்துக்குடி வடக்கு, தூத்துக்குடி தெற்கு, திருநெல்வேலி வடக்கு, திருநெல்வேலி தெற்கு, தென்காசி வடக்கு, தென்காசி தெற்கு.

**மாநில துணைச் செயலாளர்**
**மதுரை சி.வீரகணேசன்**

மதுரை வடக்கு, மதுரை தெற்கு, மதுரை மாநகர், திண்டுக்கல் கிழக்கு,

திண்டுக்கல் மேற்கு, தேனி வடக்கு, தேனி தெற்கு.

**மாநிலத் துணைச் செயலாளர்**
**எழில்மாறன்**

திருச்சி வடக்கு, திருச்சி மத்திய, நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு, புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு, கள்ளக்குறிச்சி தெற்கு.

**மாநிலத் துணைச் செயலாளர்**
**கே.வி.குப்பம் சி.கோபி**

வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், கிருஷ்ணகிரி வடக்கு, கிருஷ்ணகிரி தெற்கு, தர்மபுரி வடக்கு, தர்மபுரி தெற்கு, திருவண்ணாமலை வடக்கு, திருவண்ணாமலை தெற்கு.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

நீலகிரி மாவட்டத்தில் சுற்றுலாப் பேருந்து பள்ளத்தில் விழுந்து ஏற்பட்ட

# விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, அக்.02-**

**நீலகிரி மாவட்டத்தில் சுற்றுலாப் பேருந்து பள்ளத்தில் விழுந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறிய முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு நிதியுதவி அறிவித்துள்ளார்.**

இதுதொடர்பாக, முதல்வர் அவர்கள் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிவிப்பு வருமாறு :-

தென்காசி மாவட்டத்திலிருந்து உதகமண்டலத்திற்கு தனியார் பேருந்து மூலம் சுற்றுலாவிற்கு சென்றவர்கள் இன்று (30. 9.2023) தென்காசிக்கு திரும்பும் வழியில், சுற்றுலாப் பேருந்து நீலகிரி மாவட்டம், குன்னூர், பர்லியாறு அருகே வந்துகொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக பள்ளத்தில் விழுந்த ஏற்பட்ட விபத்தில் பேருந்தில் பயணம் செய்த திருமதி.முப்புடாதி (வயது 67), முருகேசன் (வயது 65), இளங்கோ (வயது 64), திருமதி.தேவிகலா (வயது 42), திருமதி. கௌசல்யா (வயது 29) மற்றும் செல்வன். நிதின் (வயது 15) ஆகியோர் உள்ளிட்ட எட்டு பேர் உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச் சந்திரன் அவர்களை விபத்து நடந்த இடத்தில் நடைபெற்றுவரும் மீட்பு மற்றும் நிவாரணப்பணிகளை மேற்பார்வையிட்டு துரிதப்படுத்தவும், மேலும் இவ்விபத்தில் படுகாயம் மற்றும் லேசான காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு சிறப்பு சிகிச்சை வழங்க வும் அறிவுறுத்தியுள்ளேன்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆறுதலையும், ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாயும், படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும், லேசான காயமடைந்து சிகிச்சை பெற்றுவருபவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு அவ்வறிவிப்பில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

ஆ.வெங்கடேசன் தலைமை! வே.ஜெயபாலன் - தனுஷ் எம்.குமார் எம்.பி., புவனேஸ்வரி பங்கேற்பு!

# செங்கோட்டை நகரில் மாபெரும் பொதுக்கூட்டம்!

## பேராசிரியர் சுப.வீரபாண்டியன் சிறப்புரை!

தென்காசி, அக். 2 -

தென்காசி தெற்கு மாவட்டம் செங்கோட்டை நகர தி.மு.க சார்பில் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா, நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மற்றும் மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (2ம் தேதி திங்கட்கிழமை) மாலை 6 மணி அளவில் செங்கோட்டை தாலுகா அலுவலகம் அருகில் அறிஞர் அண்ணா திடலில் செங்கோட்டை நகரச் செயலாளர் ஆ.வெங்கடேசன் தலைமையில் ரஹீம்,லிங்கராஜ்,சண்முகராஜா, ஆபத்துக்காத்தான்,பேபி ரசப்பாத்திமா, நசீர், காளி,ஜோதிமணி, ராஜா, முத்து சரோஜா, நடராஜன், மணிகண்டன், சுப்பிரமணியன்,ராமலட்சுமி ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது. மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் காதர் அண்ணாவி வரவேற்புரையாற்றுகிறார்.

இந்நிகழ்வில் திராவிட இயக்க தமிழர் பேரவை பொது செயலாளர் தமிழ்நாடு அரசின் சமூக நீதி கண்காணிப்புக் குழு தலைவர் பேராசிரியர் சுப. வீரபாண்டியன், தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன், தென்காசி தனுஷ் எம் குமார் எம்.பி. சேலம் மாவட்ட மகளிர் தொண்டர் அணி புவனேஸ்வரி ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றுகின்றனர்.


நிகழ்வில் மாநில விவசாய அணி இணை செயலாளர் அப்துல் காதர், விவசாய அணி துணை செயலாளர் செல்லப்பா, மாவட்ட அவைத்தலைவர் சுந்தரமகாலிங்கம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மா.செல்லதுரை, ஆறுமுகசாமி,ஷேக் தாவுது, முத்துப்பாண்டி, சேசுராஜன்,மாவட்ட துணை செயலாளர்கள் தமிழ்செல்வன், கென்னடி, கனிமொழி,பொருளாளர் ஷெரிப்,பொதுக்குழு உறுப்பினர்கள் சாமிதுரை, தமிழ்ச்செல்வி,அருள், ராஜேஷ்வரன்,ரவிச்சந்திரன்,சமுத்திர பாண்டி,கதிர்வேல் முருகன்,உள்பட ஒன்றிய செயலாளர்கள்,பேரூர் கழக செயலாளர்கள்,சார்பு அணி அமைப்பாளர்கள்,நகர் மன்ற உறுப்பினர்கள்,கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொள்கின்றனர்.

நிகழ்ச்சி நிறைவில் பீர் முகமது நன்றியுரையாற்றுகிறார்.

வேலூர் மாவட்டத்தில் அடங்கியுள்ள

# 5 - சட்டமன்றத் தொகுதிகளில் வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பணி!

## மாவட்ட செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!



வேலூர், அக். 2 -

வரைவு வாக்காளர் பட்டியலில் தேவைப்படும் திருத்தங்களை மேற்கொள்ளும் பொருட்டு தேர்தல் ஆணையம் வாய்ப்பு வழங்கி உள்ளதின் அடிப்படையில் என்னென்ன திருத்தங்கள் மேற்கொள்ளலாம் என வேலூர் மாவட்டச் செயலாளரும், அணைக்கட்டு சட்டபேரவை உறுப்பினருமான ஏ.பி.நந்தகுமார் தனது அறிக்கையில் வேண்டுகோள் விடு த்துள்ளார். அதன் விவரம் பின் வருமாறு

இந்திய தேர்தல் ஆணையம் 01.01.2024ம் தேதியை தகுதி ஏற்படுத்தும் நாளாக கொண்டு சிறப்பு சுருக்க திருத்தம், 2024இன் கீழ் வாக்காளர் பட்டியல் தயாரிக்க ஏதுவாக வேலூர் மாவட்டத்தில் 27.10.2023 அன்று வரைவு வாக்காளர் பட்டியலை வெளியிட உள்ளது. இதனை தொடர்ந்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளில் சிறப்பு முகாம் நடத்தவும் ஆணையிட்டுள்ளது.

04.11.2023, 05.11.2023, 18.11.2023, 19.11.2023 ஆகிய தேதிகளில் நடைபெறுகின்றது.

மேலும் வாக்காளர் பட்டியலில் மேற்கொள்ளப் பட வேண்டிய பணிகள் 27.10.2023 முதல் 09.12.2023 ஆகிய தேதிகளில் சிறப்பு முகாம் நடைபெறுகின்றது. இதில் பெயர் சேர்த்தல் / நீக்கம் / திருத்தம் / முகவரி மாற்றம் குறித்து செய்யலாம்.


எனவே மாவட்ட நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள், தலைமை கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில மற்றும் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் சார்பு அணிகளின் நிர்வாகிகள், வட்ட, வார்டு, ஊர் கிளை கழக நிர்வாகிகள் குறிப்பாக BLA 2 மற்றும் பூத் கமிட்டி நிர்வாகிகள் ஆகியோர்கள் மேற்குறிப்பிட்ட அட்டவணைப்படி நடைபெற உள்ள சிறப்பு முகாமை பயன்படுத்தி அதிகப்படியான தகுதி வாய்ந்த வாக்காளர்களை வாக்காளர் இறுதி பட்டியலில் இடம் பெற செய்ய தொய்வின்றி பணியாற்றிட வேண்டும் என கனிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேற்கண்டவாறு வேலூர் மாவட்ட செயலாளரும், அணைக்கட்டு சட்டபேரவை உறுப்பினருமான ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## சூலூர் எஸ்.எஸ்.பொன்முடி

**அக்டோபர் 2 (2012)**



**மாவட்டக் கழக துணைச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், ஒன்றியக் கழகச் செயலாளர் என்ற பொறுப்புகளை வகித்து, சூலூர் பகுதியில் கழக வளர்ச்சிக்குப் பாடுபட்டவர்.**

**சூலூர் பேரூராட்சித் தலைவர், நிலவள வங்கித் தலைவர், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கித் தலைவர், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர்,பல்லடம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆகிய பொறுப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாக மக்கள் பணியாற்றியவர்.**

**1986ஆம் ஆண்டு முதல் கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டில் - தமிழ்நாட்டின் கடற்கரைப் பகுதிகளில்

# ஒரு கோடி பனை விதைகளை விதைக்கும் திட்டம் வெற்றியடைய வாழ்த்துகிறேன்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

**சென்னை, அக்.02-**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டில் முன்னெடுக்கப்படும் தமிழ்நாட்டின் கடற்கரைப் பகுதிகளில் ஒரு கோடி பனை விதைகளை விதைக்கும் திட்டம் வெற்றியடைய வாழ்த்துகிறேன் என இத்திட்டத்தையொட்டி வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வர் அவர்களின் வாழ்த்துச் செய்தி வருமாறு:-

பராமரிப்பில்லாமலே காலத்துக்கும் பயன்தரும் மரமான பனை மரம் தமிழர்களின் வாழ்வியலோடு நெருங்கிய உறவுடையது. நம் மொழியின் அரிய இலக்கியங்களும் சுவடிகள் மூலமே பல நூற்றாண்டுகள் கடத்தப்பட்டன. நுங்கு, பதநீர், பனை மட்டை, நார், ஓலை, வெல்லம், கருப்பட்டி, பனங்கற்கண்டு எனப் பனையின் பயன்கள் எண்ணிலடங்கா. தமிழ்நாட்டின் மாநில மரமாகவும் பனைமரமே விளங்குகிறது.

ஆட்சிக்கு வந்ததும் வேளாண் துறைக்கெனத் தனி நிதிநிலை தாக்கல்செய்து வரலாறு படைத்த நமது கழக அரசு பனை விவசாயிகளின் வாழ்வாதாரத்தைக் காக்கவும், பனை நடுவதை ஊக்குவிக்கவும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. 2021-22 வேளாண் நிதிநிலை அறிக்கையில் பனை மேம்பாட்டு இயக்கம் என்ற பெயரில் தனி இயக்கமே அறிவிக்கப்பட்டு, 30 மாவட்டங்களில் 76 இலட்சம் பனை விதைகளும் 1 இலட்சம் பனங்கன்றுகளும் முழு மானியத்தில் வழங்கப்பட்டது. 2022-23 வேளாண் நிதிநிலை அறிக்கையின்படி 2.02 கோடி ரூபாயில் இந்த இயக்கம் செயல்படுத்தப்பட்டது.

பனை மரங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க 10 இலட்சம் பனைவிதைகள் 30 இலட்சம் ரூபாயில் வழங்கப்பட்டதோடு, கூடம் ஒன்றுக்கு 50 ஆயிரம் ரூபாய் என்ற வீதத்தில் 62 இலட்சம் ரூபாயில் 124 இடங்களில் மதிப்பு கூட்டப்பட்ட பனை பொருட்கள் தயாரிக்கும் கூடங்கள் அமைத்தல், 20.40 இலட்சம் ரூபாயில் மதிப்பு கூட்டப்பட்ட பனை பொருட்கள் தயாரிப்பதற்கான கருவிகள் வழங்குதல், 45 இலட்சம் ரூபாய் நிதியில் 1000 பேருக்கு பனைமரம் ஏறுவதற்கான கருவிகள் வழங்குதல், 43.32 இலட்சம் ரூபாய் நிதியில் பனைபொருள் வளர்ச்சி வாரியத்தின் சார்பில் பனைவெல்லம், பனங்கற்கண்டு, பிற பனைசார் பொருட்களைத் தூய்மையான முறையில் தயாரிப்பதற்கான பயிற்சி மற்றும் மகளிருக்குப் பனை ஓலைப் பொருட்கள் தயாரிப்பதற்கான பயிற்சியும் வழங்கப்பட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

நடப்பாண்டில் (2023-24), 12 ஆயிரம் பனைவிதைகள் விநியோகம், 7,500 பனங்கன்றுகள் விநியோகம், 116 மதிப்பு கூட்டப்பட்ட பனை பொருட்கள் தயாரிக்கும் கூடங்கள் அமைத்தல், 1000 பனை ஏறும் கருவிகள் வழங்குதல், பனைசார் பொருட்கள் தயாரிப்பதற்கான பயிற்சி வழங்குதல் உள்ளிட்டவை 2 கோடி ரூபாயில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதற்கெல்லாம் மேலும் சிறப்பு சேர்க்கும் வகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டில் தமிழ்நாட்டின் கடற்கரைப் பகுதிகளில் ஒரு கோடி பனை விதைகளை விதைக்கும் திட்டத்தைத் 'தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர்கள் நல வாரியம்' 01.10.2023 அன்று தொடங்குவது மகிழ்ச்சி அளிக்கிறது. கழக ஆட்சியில் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போதுதான் இந்த வாரியம் அமைக்கப்பட்டு, அதன் தலைவராக இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர்கள் நியமிக்கப்பட்டு 2011-ஆம் ஆண்டு வரை பணியாற்றினார்.

தமிழ்நாடு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் கீழ் செயல்படும் இவ்வாரியம் க்ரீன் நீடோ சுற்றுச்சூழலமைப்பு, மாநில நாட்டு நலப்பணித் திட்டம் ஆகியவற்றுடன் இணைந்து இந்த முயற்சியில் ஈடுபடுகிறது. மேலும், சென்னை ஐ.ஐ.டி., டாடா கன்சல்டன்சி சர்வீசஸ், இராணி மேரி கல்லூரி உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்கள் உள்ளிட்ட ஒரு இலட்சம் தன்னார்வலர்களும் இணைந்து ஒரு கோடி பனை விதைகளை நடும் திட்டத்தை வெற்றிபெறச் செய்யவுள்ளார்கள் என்பது நெஞ்சுக்கு இதமளிக்கிறது.

தமிழ்ச் சமூகத்துக்கு வாழ்நாள் எல்லாம் பல வகையிலும் பல துறையிலும் பயனளித்திட்ட தமிழினத் தலைவர் நூற்றாண்டில் முன்னெடுக்கப்படும் இந்த சீரிய முயற்சி வெற்றி அடைய வாழ்த்துகிறேன். இதற்காக தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் அவர்களையும், தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர் நல வாரியத் தலைவர் எர்ணாவூர் ஆ.நாராயணன் அவர்களையும் பாராட்டுகிறேன்.

இவ்வாறு அச்செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட் டுள்ளார்.




# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

**ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள்**
**பொறுப்புகளுக்கான நேர்காணல்**
**இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு**

ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கு அனைத்துக் கழக மாவட்டங்களில் இருந்தும் விண்ணப்பங்கள் வந்துள்ளன. அவற்றில் மண்டலம் 3, மண்டலம் 4 மற்றும் மண்டலம் 5-ல் உள்ள மாவட்டக் கழகங்களில் மேற்கண்ட பொறுப்புகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்காணல் கீழ்க்கண்டவாறு நடைபெறுகின்றது.

காஞ்சிபுரம் தெற்கு, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகங்களுக்கு வருகிற 03.10.2023 செவ்வாய்கிழமையும், திருப்பத்தூர், திருவண்ணாமலை வடக்கு, திருவண்ணாமலை தெற்கு மாவட்டக் கழகங்களுக்கு 04.10.2023 புதன்கிழமையும், இராணிப்பேட்டை, வேலூர் மாவட்டக் கழகங்களுக்கு 05.10.2023 வியாழக்கிழமையும், தருமபுரி கிழக்கு, தருமபுரி மேற்கு, கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டக் கழகங்களுக்கு 06.10.2023 வெள்ளிக்கிழமையும் நேர்காணல் நடைபெறும். விண்ணப்பித்தவர்கள் அனைவரும் நேர்காணலில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## மண்டலம்-3

**நேர்காணல் தேதி : 03.10.2023,**
**அன்பகம், தேனாம்பேட்டை, சென்னை**

| வ.எண் | கழக மாவட்டம் | நேரம் |
|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் தெற்கு | காலை 9.00 மணி |
| 2 | காஞ்சிபுரம் வடக்கு | மதியம் 12.00 மணி |

**நேர்காணல் தேதி : 04.10.2023,**
**ஆண்டாள் சிங்கார வேலு திருமண மண்டபம்,**
**வேலூர் ரோடு, வேங்கிக்கால், திருவண்ணாமலை**

| வ.எண் | கழக மாவட்டம் | நேரம் |
|---|---|---|
| 1 | திருப்பத்தூர் | காலை 9.00 மணி |
| 2 | திருவண்ணாமலை வடக்கு | காலை 11.00 மணி |
| 3 | திருவண்ணாமலை தெற்கு | மதியம் 2.00 மணி |

**நேர்காணல் தேதி : 05.10.2023,**
**வேலூர் மாவட்ட தி.மு.க. அலுவலகம்,**
**ஹோட்டல் ரிவர்யூ அருகில், வேலூர்**

| வ.எண் | கழக மாவட்டம் | நேரம் |
|---|---|---|
| 1 | இராணிப்பேட்டை | காலை 9.00 மணி |
| 2 | வேலூர் | மதியம் 12.00 மணி |

## மண்டலம்-4

**நேர்காணல் தேதி : 06.10.2023,**
**வன்னியர் குல மண்டபம்,**
**தெற்கு ரயில்வே லைன் சாலை, தருமபுரி-3**

| வ.எண் | கழக மாவட்டம் | நேரம் |
|---|---|---|
| 1 | தருமபுரி மேற்கு | மதியம் 2.00 மணி |
| 2 | தருமபுரி கிழக்கு | மதியம் 3.00 மணி |

## மண்டலம்-5

**நேர்காணல் தேதி : 06.10.2023,**
**லட்சுமி மஹால், சேலம் பைபாஸ் சாலை,**
**உமாராணி மருத்துவமனை அருகில், கிருஷ்ணகிரி.**

| வ.எண் | கழக மாவட்டம் | நேரம் |
|---|---|---|
| 1 | கிருஷ்ணகிரி மேற்கு | காலை 9.00 மணி |
| 2 | கிருஷ்ணகிரி கிழக்கு | காலை 10.00 மணி |

நேர்காணலில் கலந்துகொள்ள வரும் விண்ணப்பதாரர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய வயதை நிரூபிப்பதற்கான கல்விச் சான்றிதழ், ஆதார் அட்டை, கழக உறுப்பினர் அட்டை, இளைஞர் அணி போன்ற கழக அமைப்புகளில் ஏற்கெனவே பணியாற்றியிருந்தால், அதுதொடர்பான புகைப்படத் தொகுப்பு மற்றும் ஆவணங்களைக் கொண்டு வருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

"அன்பகம்"
சென்னை – 18.
நாள் : 30–09–2023.

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி







முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை, வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, செங்கல்பட்டு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், மாவட்ட நிர்வாகம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் ஆகியன இணைந்து நடத்தும் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நேற்று முன்தினம் மேற்கு தாம்பரம் வள்ளுவர் குருகுலம் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கழகப்பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் ஆகியோர் கலந்துகொண்டு 100க்கும் மேற்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி சிறப்புரையாற்றினார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர்.ராஜா, இ.கருணாநிதி, அரவிந்த் ரமேஷ், ஆட்சித்தலைவர் ஆ.ர.ராகுல் நாத், ஆணையர் (வேலைவாய்ப்பு மற்றும் பயற்சிதுறை) கிண்டி கொ.வீர.ராகவ ராவ், மேயர் திருமதி.க.வசந்தகுமாரி, துணை மேயர் ஜி.காமராஜ், மண்டல குழுத்தலைவர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன், ச.ஜெய பிரதிப் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



விருதுநகர் அரசுமருத்துவக்கல்லூரி கலையரங்கத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் , தலைமையில் , விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் , சாத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.ரகுராமன் மற்றும் சிவகாசி மாநகராட்சி மேயர் சங்கீதா இன்பம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் , வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் மற்றும் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம்தென்னரசு ஆகியோர் 259 மகளிர் சுய உதவிகுழுக்களுக்கு ரூ .30.03 கோடி மதிப்பிலான வங்கிக் கடன் உதவிகளை வழங்கினார்கள் .

### தமிழ்நாடு முழுவதும் - 1000 இடங்களில்

# டெங்கு - மழைக்கால நோய்த்தடுப்பு - காய்ச்சல் மருத்துவ முகாம்!

## மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!



*சென்னை, அக்.02-*

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு முழுவதும் இன்று (01.10.2023) 1000 இடங்களில் டெங்கு மற்றும் மழைக்கால நோய்கள் தடுப்பு நடவடிக்கைகளுக்கான சிறப்பு காய்ச்சல் மருத்துவ முகாம்கள் நடைபெறும் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் தெரிவித்தார்.

செய்தியாளர்களிடம் அமைச்சர் கூறியதாவது:

தமிழகத்தில் டெங்கு மற்றும் மழைக்கால தொற்று நோய்களான வயிற்றுப் போக்கு, டைபாய்டு போன்ற நோய்கள் பரவாமல் தடுக்க பல்வேறு நடவடிக்கைகள் தீவிரமாக எடுக்கப்பட்டு வருகின்றன. முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கு ஏற்ப, சுகாதாரத்துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் போன்ற பல்வேறு துறைகளுடன் ஒருங்கிணைந்து கொசு ஒழிப்பு, விழிப்புணர்வு ஏற்படுத்துதல், காய்ச்சல் கண்டறிதல், காய்ச்சல் கண்ட இடங்களில் உடனடி தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், மருத்துவ முகாம்கள் நடத்துதல் போன்ற தொடர் நடவடிக்கைகளின் காரணமாக தமிழகத்தில் தொற்று நோய்கள் கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது. தமிழகத்தில் 2,972 அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளிலிருந்து தினசரி காய்ச்சல் கண்டவர்கள் அடையாளம் காணப்பட்டு, கிராமம் மற்றும் நகரங்கள் வாரியாக பட்டியல் தயார் செய்து அந்தந்த மாவட்டங்களுக்கு நோய்த் தடுப்புப் பணிகளை உடனடியாக மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. உள்ளாட்சி அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து கொசுப் புழு தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள சுமார் 23,717 தினசரி தற்காலிக பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தென்மேற்கு பருவமழைக் காரணமாக டெங்கு காய்ச்சலை பரப்பும் கொசுக்கள் உற்பத்தியாவதால் தடுப்பு நடவடிக்கைகளை மாவட்ட அளவில் துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**சுகாதாரத் துறை நடவடிக்கைகள்**

அரசு மருத்துவமனைகளில் சிகிச்சைக்குத் தேவையான உயிர்காக்கும் மருந்துகள், இரத்த அணுக்கள் பரிசோதனை கருவிகள், இரத்த கூறுகள் மற்றும் இரத்தம் ஆகியவை போதிய அளவு இருப்பு வைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. பொது சுகாதாரத் துறையோடு இணைந்து உள்ளாட்சி அமைப்புகள், டயர் பிளாஸ்டிக் கப்புகள், தேங்காய் சிரட்டை போன்ற தேவையற்ற கொசு உற்பத்தியாகும் பொருட்களை அகற்றும் பணியினை மேற்கொண்டு வருகின்றனர். பொது கட்டிடங்கள், அரசு அலுவலகங்கள், உணவகங்கள், பூங்காக்கள், திரையரங்குகள், திரு மண மண்டபங்கள், கல்வி நிலையங்கள், தொழிற்சாலைகள் ஆகியவற்றில் கொசு உற்பத்தியாகும் இடங்களை கண்டறிந்து அவற்றை அகற்றும் பணிகளும் நடைபெற்று வருகின்றது.

இந்திய மருத்துவ முறை மருந்துகளான நிலவேம்பு குடிநீர் மற்றும் பப்பாளி இலைச்சாறு போன்றவை தமிழ்நாட்டில் இருக்கின்ற அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் வழங்கப்பட்டு வருகின்றது. அனைத்து அரசு மருத்துவமனைகளிலும், டெங்குவிற்கென்று தனி வார்டு இயங்கி வருகிறது, தேவைக்கேற்ப கூடுதலாக விரிவுபடுத் தப்படும். கிராமங்கள் தோறும் துப்புரவுப் பணிகள் செயல்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. மழைக் காலங்களில் கொசு புழுக்கள், நீர்த்தேக்கங்களில் உற்பத்தியாகி டெங்கு, மலேரியா நோய்கள் பரவாமல் இருக்க கொசு புழு உற்பத்தியாகும் இடங்களை அடியோடு அகற்றிடவும், பூச்சிக்கொல்லி மருந்துகள் தெளிக்கும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டினை பொறுத்தவரை கடந்த ஆண்டு அதாவது 2022 ஆம் ஆண்டு 2,65,834 டெங்கு மாதிரிகள் எடுக்கப்பட்டது, அதில் 6,430 நபர்களுக்கு பாதிப்புகள் கண்டறியப்பட்டது. இந்தாண்டு (2023) இதுவரை 2,42,743 டெங்கு மாதிரிகள் எடுக்கப்பட்டுள்ளது. இதில் 4,524 நபர்களுக்கு டெங்கு பாதிப்புகள் கண்டறியப்பட்டுள்ளது. தமிழ்நாடு முழுவதும், கொசு உற்பத்தியை தடுக்க 16,005 புகை அடிக்கும் இயந்திரங்களும், பூச்சிக்கொல்லி மருந்துகளான பைரித்திரம் 65,769 லிட்டர், மாலத்தியான் 12,493 லிட்டர், டெமிபாஸ் 48,122 லிட்டர் கையிருப்பில் உள்ளது.

**சென்னையில் டெங்கு தடுப்பு நிலவரம்**

சென்னை மாநகரில் டெங்குக் காய்ச்சலைத் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சென்னையில் உள்ள சுமார் 17 இலட்சம் வீடுகளின் பகுதிகளை சிறுவட்டங்களாக (Sector) பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு வட்டத்திற்கும் சுமார் 500 வீடுகள் கொண்ட தெருக்களில் வாரந்தோறும் கொசு புழு வளரிடங்களான மேல் நிலை/கீழ்நிலைத் தொட்டி, கிணறு, தேவையற்ற பொருட்கள் (டயர்கள், உடைந்த பிளாஸ்டிக் குடங்கள் போன்றவைகளை கண்டறிந்து கொசு புழுக்கள் இருப்பின் அழித்து வருகின்றனர். டெங்கு கொசு ஒழிப்பு பணிகளுக்காக 318 மருத்துவ அலுவலர்கள், 635 செவிலியர்கள், 954 கொசு ஒழிப்புக்கென நிரந்தர கொசு ஒழிப்பு பணியாளர்கள், 2,324 ஒப்பந்த பணியாளர்கள் என ஆக மொத்தம் 4,231 மருத்துவ பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மேலும், 424 மருந்து தெளிப்பான்கள், 120 பவர் ஸ்ப்ரேயர்கள், 300 பேட்டரி மூலம் இயங்கும் ஸ்ப்ரேயர்கள், 324 கை புகைப்பரப்பும் இயந்திரம், 1 சிறிய புகைப்பரப்பும் இயந்திரம், 68 வாகனங்களில் பொருத்தப்பட்ட புகைப்பரப்பும் இயந்திரங்கள் கையிருப்பில் உள்ளது. மருந்துகளை பொருத்தவரை 29.05 டன் ப்ளீச்சிங் பவுடர், 1795.6 லிட்டர் பைரித்ரம், 1 லிட்டர் டெக்னிக்கல் மாலத்தியான், 2,287.4 லிட்டர் டெமிபோஸ், 33,963 லிட்டர் எம்.எல்.ஒ கையிருப்பில் உள்ளது.

**டெங்கு பற்றி கடந்த கால ஒப்பீடு**

தமிழ்நாட்டில் அதிக டெங்கு பாதிப்பை பொறுத்தவரை, 2012 ஆம் ஆண்டு மட்டும் 13,204 பேர் டெங்குவினால் பாதிக்கப்பட்டு, 66 பேர் உயிரிழந்தனர். அதிகபட்ச டெங்கு பாதிப்பு என்பது 2017ஆம் ஆண்டு 23,294 பேர் டெங்கு பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார்கள். இந்த வகையில் அதிக எண்ணிக்கையிலான டெங்கு பாதிப்புகள் அப்போது இருந்தன. எனவே தான் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கடந்த ஆண்டு சுகாதாரத்துறை, நகராட்சித்துறை, ஊரக உள்ளாட்சித் துறையும் இணைந்து டெங்கு பாதிப்பு குறித்து கூட்டம் நடத்தப்பட்டது. அதேபோல் இந்த ஆண்டும் நமது தலைமைச் செயலாளர் அவர்களும் பல்வேறு துறை செயலாளர்கள் தலைமையில் டெங்கு பாதிப்பு கட்டுக்குள் வைப்பது குறித்து ஆலோசனைக் கூட்டம் நடத்தியிருக்கிறார்கள். இதனைத் தொடர்ந்து மருத்துவத் துறையின் சார்பிலும் மாநில அளவிலான கல்லூரி முதல்வர்கள், இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள் என்று 500க்கும் மேற்பட்ட சுகாதார உயரலுவலர்கள் கலந்து கொண்ட கூட்டம் நடத்தப்பட்டது. அந்த கூட்டத்தில் டெங்கு பாதிப்பு குறித்தும், டெங்கு விழிப்புணர்வு குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து தலைமைச் செயலாளர் அவர்கள் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அவர்களுடனான கூட்டத்தில் டெங்கு பாதிப்பு குறித்து ஆலோசனை நடத்தப்பட்டது. மேலும் இத்துறை செயலாளர் அவர்களும் அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் கடிதம் வாயிலாக டெங்கு பாதிப்பு தடுப்பது தொடர்பான ஆலோசனைகள் வழங்கியுள்ளார். நேற்று தூத்துக்குடி, மதுரை மற்றும் விளாத்திக்குளம் அரசு மருத்துவமனையில் ஆய்வு மேற்கொண்டு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் சிகிச்சைகள் குறித்து கேட்டறிந்தேன். இப்படி தொடர்ச்சியாக டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் தமிழ்நாடு அரசு சார்பிலும், மருத்துவத் துறையின் சார்பிலும் எடுக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் தமிழ்நாடு முழுவதும் டெங்குவினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறுபவர்கள் 363 பேர் (Active cases) இதில், சென்னையில் மட்டும் 54 பேர் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

தமிழ்நாட்டில் ஒரே நாளில் 1000 காய்ச்சல் கண்டறியும் சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்படவுள்ளது. சென்னையில் நாளை காலை 9.00 மணிக்கு மயிலாப்பூர் சீனிவாசபுரம் பகுதியில் நடைபெறும் முகாமை நானும் துறையின் செயலாளர் அவர்களும் தொடங்கி வைக்கவுள்ளோம். தொடர்ந்து இதுபோன்ற மருத்துவ முகாம்கள் நடத்தப்படும்.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.தி.சி.செல்வவிநாயகம் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் இல்லம் தேடி இளைஞர் அணி உறுப்பினர் சேர்த்தல் நிகழ்ச்சி மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் இன்பா ரகு தலைமையில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சௌந்தர்ராஜன் முன்னிலையில் மதுரை மாநகர் மாவட்டக் கழக செயலாளர் கோ.தளபதி துவக்கி வைத்தார். உடன் மாநில கழக நிர்வாகிகள் வ. வேலுச்சாமி பெ.குழந்தை வேலு மாவட்ட கழக துணைச் செயலாளர் மூவேந்திரன், பகுதி செயலாளர் ராதாகிருஷ்ணன், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஐயப்பன், ராம்பிரசாத், தமிழ் சந்திரன், ராஜ பாண்டி, தினேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.


திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள்!



## அக்டோபர் (2023) மாத நிகழ்வுகள்

### அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அறிவிப்பு!

| நாள் / நேரம்: 01/10/2023 - மாலை 6 மணி | |
|---|---|
| **நிகழ்ச்சிகள் :** பொறியியல் கல்லூரிகளில் தலைவர் கலைஞர் பிறந்த நாள் நிகழ்வை பேச்சுப்போட்டி மற்றும் கருத்தரங்கம் நடத்தி, தலைவர் கலைஞர் எழுதிய புத்தகம் பரிசளித்தல் | **தலைமை :** எம்.ஜியாவுதீன் (மாவட்ட அமைப்பாளர்), சி.எம்.மெய்யப்பன் (மாநகர அமைப்பாளர்) |
| **நிகழ்ச்சி ஏற்பாடு :** மாவட்ட, மாநகர பொறியாளர் அணி | **சிறப்பு அழைப்பாளர்கள் :** கு.கருணாநிதி (மாநில பொறியாளர் அணி செயலாளர்) கருத்தரங்கில் கவிஞர் நந்தலாலா உரையாற்றினார். |

| நாள் / நேரம்: 07/10/2023 - மாலை 6 மணி | |
|---|---|
| **நிகழ்ச்சிகள் :** தலைவர் கலைஞருக்கு புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | **தலைமை :** கே.என்.சண்முகம், என்.தங்கவேலு |
| **நிகழ்ச்சி ஏற்பாடு :** வார்டு எண் 16,16A அரியமங்கலம் பகுதி | **சிறப்பு அழைப்பாளர்கள் :** பொன்னேரி சிவா, தலைமை கழக பேச்சாளர் |

| நாள் / நேரம்: 08/10/2023 - மாலை 5.30 மணி | |
|---|---|
| **நிகழ்ச்சிகள் :** தலைவர் கலைஞருக்கு புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | **தலைமை :** ஆர்.சேகர், கே.என்.நலங்கிள்ளி |
| **நிகழ்ச்சி ஏற்பாடு :** வார்டு எண் 30,30A பாலக்கரை பகுதி | **சிறப்பு அழைப்பாளர்கள் :** சைதை சாதிக், தலைமை கழக பேச்சாளர் |

| நாள் / நேரம்: 14/10/2023 - மாலை 6 மணி | |
|---|---|
| **நிகழ்ச்சிகள் :** தலைவர் கலைஞருக்கு புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | **தலைமை :** இ.பரமசிவம், கே.முருகன் |
| **நிகழ்ச்சி ஏற்பாடு :** வார்டு எண் 46,46A, பொன்மலை பகுதி | **சிறப்பு அழைப்பாளர்கள் :** எழும்பூர் கோபி, தலைமை கழக பேச்சாளர் |

| நாள் / நேரம்: 15/10/2023 - காலை 10 மணி | |
|---|---|
| **நிகழ்ச்சிகள் :** தலைவர் கலைஞர் அவர்களின், திரைக்கதை வசனத்தில் உருவான திரைப்படத்தை திரையிடுதல் மற்றும் தலைவர் கலைஞர் எழுதிய திரை வசனங்களை ஒப்புவித்தல் மற்றும் கலைஞர் எழுதிய கவிதை ஒப்புவித்தல் போட்டிகள் | **நிகழ்ச்சி ஏற்பாடு :** மாவட்ட, மாநகர கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை |
| | **தலைமை :** எஸ்.வி.ராஜ்குமார், மாவட்ட அமைப்பாளர். டி.செந்தில், மாநகர அமைப்பாளர் |
| | **சிறப்பு அழைப்பாளர்கள் :** வாகை.சந்திரசேகர், மாநில கலை - இலக்கிய பகுத்தறிவுப் பேரவை தலைவர் |

| நாள் / நேரம்: 15/10/2023 - மாலை 6 மணி | |
|---|---|
| **நிகழ்ச்சிகள் :** தலைவர் கலைஞர் புகழ் பரப்பும் பொதுக்கூட்டம் | **தலைமை :** ஓ.நீலமேகம் |
| **நிகழ்ச்சி ஏற்பாடு :** காட்டூர் பகுதி கழகம் | **சிறப்பு அழைப்பாளர்கள் :** ஐ.பெரியசாமி, கழக துணை பொது செயலாளர் / உள்ளாட்சி துறை அமைச்சர் |

| நாள் / நேரம்: 21/10/2023 - காலை 8.30 மணி | |
|---|---|
| **நிகழ்ச்சிகள் :** மாவட்ட கழகம் சார்பில் திருச்சி கிழக்கு தொகுதியில் கழக கொடியேற்றுதல், மற்றும் தலைவர் கலைஞர் புகழ் பரப்பும் வகையில் அணிகளுக்கு கருத்துரை வழங்கும் விழா | **தலைமை :** மாவட்ட கழக செயலாளர் |
| **நிகழ்ச்சி ஏற்பாடு :** திருச்சி தெற்கு மாவட்ட கழகம் | **சிறப்பு அழைப்பாளர்கள் :** துரை முருகன், (கழக பொதுச்செயலாளர், நீர்வளத் துறை அமைச்சர்) 23 கழக சார்பு அணிகளுக்கு கருத்துரை வழங்குதல் (மாவட்டம் / மாநகரம்) |

| நாள் / நேரம்: 22/10/2023 - காலை 6 மணி | |
|---|---|
| **நிகழ்ச்சிகள்:** மணப்பாறை ஒன்றியம் 14 ஊராட்சிகளிலும் தலைவர் கலைஞர் நூற்றாண்டு கல்வெட்டு அமைத்து கல்வெட்டு திறப்பு மற்றும் கொடியேற்று விழா | **நிகழ்ச்சி ஏற்பாடு :** மணப்பாறை ஒன்றிய கழகம் |
| | **தலைமை :** தலைமை சி.ராமசாமி, ஒன்றிய செயலாளர் |
| | **சிறப்பு அழைப்பாளர்கள் :** மாவட்ட கழக செயலாளர் |

| நாள் / நேரம்: 22/10/2023 - மாலை 6 மணி | |
|---|---|
| **நிகழ்ச்சிகள் :** தலைவர் கலைஞர் புகழ் பரப்பும் பொதுக்கூட்டம் | **தலைமை :** மு.ம.செல்வம், நகர செயலாளர் |
| **நிகழ்ச்சி ஏற்பாடு :** மணப்பாறை நகரம் | **சிறப்பு அழைப்பாளர்கள் :** எஸ்.எஸ்.சிவசங்கர், போக்குவரத்துத்துறை அமைச்சர் / அரியலூர் மாவட்ட கழக செயலாளர் |

| நாள் / நேரம்: 28/10/2023 - மாலை 6 மணி | |
|---|---|
| **நிகழ்ச்சிகள் :** தலைவர் கலைஞருக்கு புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | **தலைமை :** பி.முருகானந்தம், சிவசக்தி.கே.கார்த்திக் |
| **நிகழ்ச்சி ஏற்பாடு :** வார்டு எண் 43,43A, காட்டூர் பகுதி | **சிறப்பு அழைப்பாளர்கள் :** நெல்லிக்குப்பம் புகழேந்தி, தலைமை கழக பேச்சாளர் |

**அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி**
செயலாளர், திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.



தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், கடலூர் மண்டலம், சிதம்பரம் பணிமனையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம். போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆகியோர் பணிக்காலத்தில் இறந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையிலான பணி நியமன ஆணைகளை வழங்கினர். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் அ.அருண் தம்புராஜ், விருத்தாசலம் சட்டமன்ற உறுப்பினர் எம்.ஆர்.இராதாகிருஷ்ணன் ஆகியோர் உள்ளனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா: செங்கல்பட்டு அரசு சட்டக்கல்லூரியில்

# சென்னை மண்டல சட்டக்கல்லூரி மாணவர்களுக்கு பேச்சுப்போட்டி!

## சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி துவக்கி வைத்தார்! என்.ஆர்.இளங்கோ எம்.பி. தலைமை!

செங்கல்பட்டு, அக்.02-

முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி கழக இளைஞர் அணிச் செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆலோசனைப்படி தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கழக சட்டத்துறை சார்பில் செங்கல்பட்டு அரசு சட்டக்கல்லூரியில் கழக சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ எம்.பி. தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற சென்னை மண்டலத்திற்குட்பட்ட சட்டக்கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டியை சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி துவக்கி வைத்தார்.

தலைவர் கலைஞர் அவர்களின் சரித்திரப் பணிகளை இளைய தலைமுறையினர் அறிந்துக்கொள்ளும் வகையில் 5 தலைப்புகளில் நடைபெற்ற மண்டல அளவிலான போட்டியின் இறுதியில் வெற்றி பெற்று மாநில அளவிலான போட்டிக்கு தேர்வாகியுள்ள மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் கழக சட்டத்துறை இணைச் செயலாளர்கள் கே.எஸ்.இரவிச்சந்திரன், ராதாகிருஷ்ணன், துணைச் செயலாளர்கள் பச்சையப்பன், சந்துரு, தலைமைக் கழக வழக்கறிஞர்கள் KJ சரவணன், பா. கணேசன், கவி. கணேசன், மறைமலை ஆகியோர் கலந்து கொண்டனர். இப்போட்டிக்கு நடுவர்களாக - தலைமைக் கழக வழக்கறிஞர்கள் சூர்யா வெற்றிகொண்டான், வழக்கறிஞர் நன்மாறன், மூத்த வழக்கறிஞர் ஷாஜகான், திருமுருகன் ஆகியோர் இருந்து பரிசுக்குரியோரைத் தேர்ந்தெடுத்தனர்.

இந்நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட அணி அமைப்பாளர் N. கனகராஜ் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்.

மேலும் இந்நிகழ்ச்சியில் சென்னை மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்ட அமைப்பாளர்கள் துரை கண்ணன் தேவேந்திரன் , கணேஷ் பாண்டியன் , காணிக்கை நாதன் , லக்ஷ்மி காந்தன் , ரமேஷ் , மற்றும் துணை அமைப்பாளர்கள் கழக வழக்கறிஞர்கள் கலந்துகொண்டனர்.

இதில் மாணவ- மாணவியருக்கு கீழ்க்கண்ட தலைப்புகளில் பேச்சுப்போட்டிகள் நடத்தப்பட்டது.

1. கலைஞரின் பார்வையில் சமூக நீதி

2. கலைஞரின் பார்வையில் மாநில சுயாட்சி

3. கலைஞரின் பார்வையில் மகளிர் முன்னேற்றம்

4. கலைஞரின் பார்வையில் தொழில்வளம்

5. கலைஞரின் பார்வையில் கல்வி

இப்போட்டியில் முதல் பரிசு வென்ற செங்கல்பட்டு சட்டக் கல்லூரி மாணவி பிரியதர்ஷினிக்கு ரூபாய் 50,000 சான்றிதழ் மற்றும் தங்கப்பதக்கமும்,

இரண்டாம் பரிசு வென்ற செங்கல்பட்டு சட்டக்கல்லூரி மாணவர் தனுஷ்ராமிற்கு ரூபாய் 25 ஆயிரம், சான்றிதழ் மற்றும் வெள்ளி பதக்கமும்,

மூன்றாம் பரிசு வென்ற பிரிஸ்ட் சட்டக்கல்லூரி மாணவர் முகமதுவிற்கு ரூபாய் 15,000, சான்றிதழ் மற்றும் வெண்கல பதக்கமும் , சிறப்பு ஆறுதல் பரிசு பெற்ற எம். ஜி. ஆர் பல்கலைக்கழக சட்டக்கல்லூரி மாணவர் ஜெயசூர்யா மற்றும் பட்டறை பெரும்புதூர் டாக்டர் அம்பேத்கர் சட்டக் கல்லூரி மாணவி செண்பகவடிவு ஆகியோருக்கு ரூபாய் ஐந்தாயிரம், சான்றிதழ் மற்றும் செம்பு பதக்கமும் வழங்கப்பட்டது.

ரூ.2.90 கோடி மதிப்பில் - தண்டையார்பேட்டை மண்டலம் - பெரம்பூர் காமராஜ் நகரில்

# புதிதாகக் கட்டப்பட்ட - நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடம்!

## அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்தார்! அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை!

சென்னை, அக்.2-

நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, நேற்று முன்தினம், பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார் பேட்டை மண்டலம், வார்டு 44, பெரம்பூர், காமராஜ் நகர், 2ஆவது தெருவில் தேசிய நகர்ப்புர சுகாதாரத் திட்ட நிதியின் கீழ், ரூ.2.90 கோடி மதிப்பீட்டில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள இரண்டு தளங்களுடன் கூடிய நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடத்தினை அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் மக்கள் மருத்துவ சேவை பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

பின்னர், அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

பெரம்பூர் காமராஜ் நகரில் ரூ.2.90 கோடி மதிப்பில் ஆரம்ப சுகாதார மைய நிலையம் கட்டி முடித்து திறக்கப்பட் டுள்ளது. தரைத் தளம் மற்றும் முதல் தளம் தலா 4040 சதுர அடி பரப்பளவில் என இரண்டு தளங்களுடன் கட்டப்பட்டுள்ள இந்த ஆரம்ப சுகாதார மையத்தினை பெரும்பாலான மக்களுக்கு சிறந்த மருத்துவ சேவை அளிக்கும் வகையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த மருத்துவமனை காலை 8.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை செயல்படும். இந்த மருத்துவமனைக்கு மேலும் கூடுதலாக மருத்துவ வசதிகள் செய்து தர கோரிக்கை விடுத்துள்ளனர். அதனை செய்வதற்கான நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ள அலுவலர்க ளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில், டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சென்ற ஆண்டில் 426 நபர்கள் பாதிப் படைந்தனர். இந்த ஆண்டில் இது வரை 346 நபர்கள் டெங்குவினால் பாதிக்கப்பட்டுள்ளனர். டெங்குவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய சிகிச்சை சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மழையின் காரணமாக தாமதப்பட்ட மழைநீர் வடிகால் பணிகளை ஒருவார காலத்திற்குள் முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி, வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆறுகள், கால்வாய்கள் உள்ளிட்ட நீர்நிலைகளில் தூர் வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பெருமழை பெய்தாலும் மக்களை பாதிக்காத வகையில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்கள் மாநகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலைப் பணிகளை பார்வையிட்டு வழங்கிய அறிவுரையின் அடிப்படையில் பருவ மழைக்கு முன்னதாக சாலைப்பணிகள் மற்றும் சாலை சீரமைக்கும் பணிகள் தரமாகவும், விரைவாகவும் நடைபெற்று வருகின்றன. மாநகராட்சிப் பகுதியில் சென்னை குடிநீர் வாரியம், சென்னை மெட்ரோ இரயில், மின்துறை உள்ளிட்ட பல்வேறு சேவைத் துறையிலும் பணிகள் நடைபெற்று வருவதையொட்டி அத்துறைகளை ஒருங்கிணைத்து சாலை அமைக்கும் பணிகள் விரைவாக முடித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பருவ மழையினை முன்னிட்டு எவ்வித சாலை வெட்டுக்களும் சேவைத் துறைகளால் மேற்கொள்ள கூடாது என உத்தரவிடப்பட்டுள்ளது. நெம்மேலியில் கடல்நீரை குடிநீராக்கும் திட்டத்தின்கீழ் 150 எம்.எல்.டி. குடிநீர் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதனை நேற்று அலவலர்களுடன் நேரடியாக கள ஆய்வு மேற்கொள்கிறேன். முதலமைச்சர் அவர்களால் இத்திட்டம் விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப் படும். செம்பரம்பாக்கம் உள்ளிட்ட அனைத்து ஏரிகளிலும் போதுமான அளவிற்கு தண்ணீர் நிரம்பியுள்ளது. எனவே, சென்னைக்கு குடிநீர் பற்றாக் குறை ஏதும் இல்லை.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சி, திருவொற்றியூர் மண்டலம், வார்டு3, கத்திவாக்கம் இரயில் நிலைய சாலை (மேற்கு), எண்ணூர் துறைமுகம் அனல்மின் நிலையப் பகுதியில் தமிழ்நாடு அரசு மற்றும் காமராஜர் துறைமுகத்தின் பங்களிப்புடன் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூபாய் 48 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 2 வகுப்பறைகளுடன் கூடிய சென்னை தொடக்கப்பள்ளி கட்டடத்தினை நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திறந்து வைத்து மாணவர்களுடன் கலந்துரையாடி அவர்களுக்கு இனிப்புகளையும், உணவினையும் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மேயர் திருமதி ஆர்.பிரியா, வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.டி. சேகர், கே.பி. சங்கர், எஸ். சுதர்சனம், துணை மேயர் மு. மகேஷ்குமார், ஆணையாளர் (பொ) சங்கர்லால் குமாவத், இணை ஆணையர் (பணிகள்) டாக்டர் ஜி. எஸ்.சமீரன், நிலைக் குழுத் தலைவர்கள் தா.இளைய அருணா (நகரமைப்பு), டாக்டர் கோ.சாந்தகுமாரி, த.விஸ்வநாதன், திருமதி சர்பஜெயா தாஸ் நரேந்திரன், துணை ஆணையாளர்கள் எம்.சிவகுரு பிரபாகரன், ஷேக் அப்துல் ரகுமான், மண்டலக்குழுத் தலைவர்கள் நேதாஜி யு.கணேசன், தி.மு.தனியரசு, மண்டல அலுவலர் எஸ்.ராதாகிருஷ்ணன் மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள, தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை கூட்டரங்கில், டெங்கு மற்றும் மழைக்கால நோய்கள் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து செய்தியாளர்களைச் சந்தித்தார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.தி.சி.செல்வவிநாயகம் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தாயுமானவராக இருக்கிறார் தமிழ்நாடு முதல்வர்!

## ‘கணையாழி’ தலையங்கம்!

நேரான மரங்களே முதலில்
வெட்டப்படுகின்றன என்ற போதும்
பயன்படுகிறோம் என்ற உணர்வில்
சூரியனை நோக்கிய பயணப் பாதையை
மாற்றிக்கொள்வதில்லை
மரங்கள்!

நேர்மையானவர்களே
குறிவைக்கப்படுகிறார்கள் என்று
சாணக்கியன் சொன்னதைக் கேட்டு
அதிகார உச்சியில் இருப்பவர்கள்
அச்சுறுத்துகிற போதும் வளைந்து கொடுக்காமல்
வரலாறாய் வாழ நினைக்கிறார்கள்
இப்போதும் சிலர்!

காவிரிநீர்ப் பிரச்சினை போல
ஆண்டுக்கொரு முறை பிள்ளையார் சதுர்த்தி!
மலைக்கோட்டை உச்சியில்
பிள்ளையார் இருந்தபோதும்
அங்குள்ள நவக்கிரகங்கள் என்னவோ
சூரியனையே பார்த்துக்கொண்டிருக்கின்றன!

இந்தியா விடுதலை பெறத்
திலகர் கொண்டாடிய தேசியத் திருவிழா!

சுதந்திரத்தை மீட்க
இந்தியா போராடும் காலத்திலும்
பிள்ளையார் சதுர்த்தி!

இனி பிள்ளையார் சதுர்த்தி போல
ஒரே நேரத்தில் இந்தியா முழுதும்
ஒரே தேர்தலாம்!

ஐந்துநாள் கொண்டாட்டம் முடிந்து
தாரை தப்பாட்டம் அடித்து முழக்கிய
பட்டாசு வெடித்து ஆட்ட ஊர்வலம் நடத்தி
நீரில் கரைக்கிறார்கள் பிள்ளையார் சிலைகளை!

இதோ ஐந்தாண்டு முடியப்போகிறது?
தொடங்கிவிட்டது தேர்தல் கொண்டாட்டம்!

கரையப் போவதும் நிலைக்கப் போவதும்
மக்கள் கையில்!
தாமே உருவாக்கிக்
குழந்தைகளோடு வீட்டில் கொண்டாடிய
பிள்ளையாரைக் காணவில்லை.

வண்ணங்களில் 70 அடி உயரங்களில்
தெருவை அடைத்துப்
பந்தல் போட்டுக் கூட்டம் கூட்டும்
விளம்பர வெளிச்சச் சூட்டில்
கார்ப்பரேட் நிறுவனப் பிள்ளையார் சிலைகள்!

பெண் பாதியாக மாதொரு பாகர்
பாதி மிருகமாக நரசிங்கப் பெருமாள்!
முகம் பெண்ணாகக் காமதேனு என்று
மன வெளிச்சப்பாடுகளில் கடவுள்களின்
படைப்புகள்!

ஆனைமுகம் எலி வாகனம் தொப்பை வயிறு
கொழுக்கட்டை. சுண்டல் என்று
குழந்தைகள் முதல் முதியவர் வரை
இரசிக்கும் படைப்பில் பிள்ளையார்!
பெண்ணாகவும் பார்த்திருக்கிறது செங்கல்பட்டு.

வாதாபிப் பிள்ளையாருக்குத்
தமிழகக் கோயில்களில் முதல் மரியாதை!
திருச்சி மலைக்கோட்டையில்
உச்சிப் பிள்ளையார்!

உலகின் தொன்மையான பாறைகளுள் ஒன்று
மலைக்கோட்டை!

பல்லவர் காலம் முதல் அண்மைக்காலம் வரை
போர்க்களக் கோட்டை!
ஆதிசேடனுக்கும் வாயு பகவானுக்கும் நடந்த
பலசாலி யுத்தத்தில் தூக்கி எறியப்பட்ட
மேரு மலையின் சிறு துண்டு என்றும்
இராமரின் முடிசூட்டு விழாவுக்குச்
சென்று திரும்பிய விபீடணன் கையில்
பரிசுப்பொருளாக இருந்த அரங்கநாதரைத்
தரையில் வைக்கக் கூடாது என்பதால்
கையிலேயே வைத்திருந்த களைப்பு நீங்க
ஒரு சிறுவன் கையில் கொடுத்துக்
காவிரிக்கரையில் விபீடணன் ஓய்வெடுக்க
வாங்கிய சிறுவன் வைத்துவிட்டு
ஒழிப்போன இடம் திருவரங்கமாம்!

ஒழிப்போனவனைத் தேடிப்பிடித்து
தலையில் குட்டிய இடம் மலைக்கோட்டையாம்!
குட்டுப்பட்ட வீக்கம் குறையாமல்
இப்போதும் அங்கு பிள்ளையார் சிலையாம்!

மேலே இருந்து பார்த்தால்
படிக்கட்டுகள் தும்பிக்கை போலக்
கிழக்கிலிருந்து பார்த்தால்
பிள்ளையார் சிலை போல
வடக்கிலிருந்து பார்த்தால்
ஆடும் மயில் போலத்
தென் கைலாயமாக மலைக்கோட்டையாம்!

உச்சியில் பிள்ளையார் நடுவில் தாயுமானவர்!
கரைக்கப்படுவது என்னவோ
பிள்ளையார் சிலைகள்தாம்.

தனது மகளின் மகப்பேறு காலத்தில்
தாய் உடன் இருக்க விடாமல்
காவிரியில் வெள்ளமாம்.
பேறுவலி தாங்காமல் காவிரியின் மறுகரையில்
மகளின் கதறல்!
தாய் போல உதவிக்கு வந்தவர்
தாயுமானவர் ஆகியிருக்கிறார்.


உச்சியில் பிள்ளையார் இருந்தாலும்
குட்டு வாங்கியவரை
வேடிக்கை பார்க்கப் போகிறவர்கள்
வழியில் தாயும் ஆனவரைக்
கையெடுத்துக் கும்பிடுகிறார்கள்!

மகளிருக்கு உரிமைத் தொகை!

அதிகாரம் அடையாளம் இல்லை
பண்புதான் அடையாளம் என்று
என்ன நடந்தாலும் எதுவந்தாலும்
எதிர்கொள்ளும் மனநிலையை
வளர்த்தெடுக்கும் வாழ்க்கைத் துணைக்கு -
சுதந்திரத்தை ஊட்டி வளர்க்கும்
தாய்க்குலத்திற்குத் தேவைப்படுவது முதலில்
உரிமை பிறகு தொகை.

மகளிருக்கு உரிமை
கிடைக்கும் தொகையாலும் உறுதிப்படும் என்பதால்
அறிவித்திருக்கிறார் தாயுள்ளத்தோடு
முதலமைச்சர்!

உச்சிப் பிள்ளையாராக
ஒன்றிய அரசு இருந்தபோதும்
தாயுமானவராக இருக்கிறார்.
தமிழ்நாடு முதல்வர்!



ம.ரா.



நீலகிரி மாவட்டம், கூடலூர், தேவர் சோலை சாலையில் உள்ள (என்.எஸ்.கேப்) கால்பந்து விளையாட்டு மைதானத்தில், சமூக நலன் (ம) மகளிர் உரிமைத்துறையின் சார்பில் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சியினை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, முன்னிலையில் தொடங்கி வைத்து, கர்ப்பிணிப் பெண்களுக்கு வளைகாப்பு சீர்வரிசை பொருட்களை வழங்கினார். உடன் கூடலூர் வருவாய் கோட்டாட்சியர் முகமது குதரதுல்லா, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர் திருமதி.தேவகுமாரி உட்பட பலர் உள்ளனர்.

மு.பிரகாஷ் தலைமை! ஈ.ராஜா எம்.எல்.ஏ. - ச.தங்கவேல் பங்கேற்பு!

# சங்கரன்கோவிலில் மாபெரும் பொதுக்கூட்டம்!

## திண்டுக்கல் ஐ.லியோனி சிறப்புரை!

தென்காசி, அக். 2 -

தென்காசி வடக்கு மாவட்டம் சங்கரன்கோவில் நகர தி.மு.க சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் தி.மு.க முப்பெரும் விழா மாபெரும் பொதுக்கூட்டம் வடக்கு ரதவீதியில் வைத்து நகர செயலாளர் மு.பிரகாஷ் தலைமையில் துணை செயலாளர்கள் முத்துக்குமார், மாரியப்பன், சுப்புத்தாய், பொருளாளர் லாசர், மாவட்ட பிரதிநிதிகள் டைட்டஸ் ஆதித்தன், முத்துக்குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. மாவட்ட திட்ட குழு உறுப்பினர் கௌசல்யா வெங்கடேஷ் வரவேற்புரையாற்றினார்.

15வது வார்டு செயலாளர் வீராசாமி நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

கழக கொள்கை பரப்பு செயலாளர் - தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி பங்கேற்று சிறப்புரையாற்றினார்.

சங்கரன்கோவில் நகர திமுக சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் நிகழ்வில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ. ராஜா எம்.எல்.ஏ.தலைமை செயற்குழு உறுப்பினர் ச.தங்கவேலு ஆகியோர் உரையாற்றினர்.

பின்னர் கழக கொள்கை பரப்பு செயலாளர் திண்டுக்கல் ஐ.லியோனி பேசியதாவது.

கடந்த 32 ஆண்டுகளாக அ.தி.மு.க வசம் வந்த சங்கரன்கோவில் தொகுதியை மீட்டு கழக கொடியை ஏற்றிய சட்டமன்ற உறுப்பினர், தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா சிறப்பாக இங்கு பணி செய்து வருகிறார். தமிழகத்தில் முதலமைச்சர் மு. க.ஸ்டாலின் அவர்கள் “திராவிட மாடல்” ஆட்சியை நடத்தி வருகிறார்கள்.

திராவிட மாடல் ஆட்சியில் மதங்களைக் கடந்து அனைவரும் மனிதர்களாக வாழ்ந்து வருகின்றோம். ஆண்களுக்கு சமமாக பெண்களும் முன்னேற வேண்டும் என்ற திராவிட கோட்பாட்டால் இன்று சங்கரன்கோவில் அருகே உள்ள செங்கோட்டை சேர்ந்த நிகர் ஹாஜி என்ற இஸ்லாமிய பெண்மணி ஆதித்யா மின்கலத்தை சூரியனுக்கு அனுப்பும் பணியை வெற்றிகரமாக முடித்துள்ளார்.

திராவிட மாடல் ஆட்சியில் ஏழை, எளிய, மக்களுக்கு அனைத்தும் கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில் முதலமைச்சர் அவர்கள் செயல்பட்டு வருகிறார்கள். மாணவ மாணவிகளுக்கு ஊட்டச்சத்துக்களை வழங்கி மாணவியர்கள் கல்வியில் சிறந்து விளங்க வழி செய்தவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள். இன்று அதையும் தாண்டி முதலமைச்சர் அவர்கள் புதுமைப்பெண் என்ற திட்டத்தின் மூலம் மாதம் ரூபாய் 1000,ம் வழங்கி வருகிறார். இதன் மூலம் 2.5 லட்சம் மாணவிகள் பயன் பெறுகின்றனர்.

பிஜேபி ஆட்சியில் 7.5 லட்சம் கோடி ஊழல் நடந்திருப்பதாக சி.ஏ.ஜி. அறிக்கை தெரிவித்துள்ளது. ஒரே நாடு ஒரே தேர்தல் என்று சொல்லுவது ஏற்றுக்கொள்ள முடியாததாகும். இந்தியாவில் 866 மொழிகள் பேசப்பட்டு வருகிறது. அவ்வாறு இருக்கும் சூழ்நிலையில் ஒரே நாடு ஒரே தேர்தல் என்ற திட்டம் செயல்படுத்த முடியாது. வேற்றுமையில் ஒற்றுமை காண்பது இந்தியாவின் பண்பாடு. எந்த தொழில் செய்வதாக இருந்தாலும் அவர்கள் வாழ்வில் முன்னேற சமூக நீதிக்காக பல்வேறு திட்டங்களை தீட்டி பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை பழங்குடியினர் நலத்துறை, ஆதிதிராவிடர் நலத்துறை ஆகிய துறைகளை ஆரம்பித்து இன்று அனைவரும் பல்வேறு அரசு பணிகளில் உயர் அதிகாரி பணியாற்றி வருவது கலைஞரின் திட்டங்களால் தான்.

தற்போது கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டம் மாதம்தோறும் ரூபாய் 1000 பெண்கள் மத்தியில் பெரிய வரவேற்பை ஏற்படுத்தி உள்ளது.

முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். எனவே வரும் நாடாளுமன்றத் தேர்தலில் 40 தொகுதியிலும் நமது கழகம் வெற்றி பெற அயராது பாடுபட வேண்டும்.

இவ்வாறு திண்டுக்கல் ஐ.லியோனி பேசினார்.

கூட்டத்தில் மாவட்ட அவைத் தலைவர் பத்மநாபன், பொருளாளர் சரவணன், துணை செயலாளர் ராஜதுரை, பொதுக்குழு உறுப்பினர்கள் வெள்ளதுரை, வெள்ளைச்சாமி பாண்டியன், சாகுல் ஹமீது, மாரிசாமி, தேவதாஸ், பராசக்தி, மகேஸ்வரி, ஒன்றிய செயலாளர்கள் லாலா சங்கர பாண்டியன், பொன். முத்தையா பாண்டியன், பூசை பாண்டியன், சேர்மதுரை, கிறிஸ்டோபர், பெரியதுரை, இராமச்சந்திரன், மதிமாரி முத்து, புளியங்குடி நகர செயலாளர் அந்தோணிசாமி, பேரூர் கழக செயலாளர்கள் மாரிமுத்து, ரூபி பாலசுப்பிரமணியன், குருசாமி, அணி அமைப்பாளர் பிச்சையா, உதயகுமார், சிவசங்கரி, அன்புமணி கணேசன், மாடசாமி, முத்துராமலிங்கம், கார்த்திக், அன்சாரி, மணிகண்டன், ராஜராஜன், பசுபதி பாண்டியன், அண்ணாமலை, முருகராஜ், சண்முகையா, சந்தன பாண்டியன், பிரபாகரன், நேரு, அன்புச்செல்வன், கழக மூத்த முன்னோடி அண்ணாவியப்பன், தொ.மு.ச மைக்கேல் நெல்சன், குருசாமி, சங்கர், செல்வகுமார் உள்பட கழகத்தினர் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் மாவட்ட பிரதிநிதி செய்யது அலி நன்றி உரையாற்றினார்.



தென்காசி வடக்கு மாவட்டம் சங்கரன்கோவில் நகர தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் கழக முப்பெரும் விழா மாபெரும் பொதுக்கூட்டம் வடக்கு ரதவீதியில் வைத்து நகர செயலாளர் மு.பிரகாஷ் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கழக கொள்கை பரப்பு செயலாளர்,தமிழ்நாடு பாடநூல் கழக தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி பங்கேற்று சிறப்புரையாற்றினார். உடன் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்.எல்.ஏ. ச. தங்கவேலு,முப்புடாதி,லாலா சங்கர பாண்டியன்,சரவணன்,மாரியப்பன், முத்துக்குமார்,சுப்புதாய்,லாசர்,கௌசல்யா வெங்கடேஷ்,அன்புமணி கணேசன்,கார்த்திக் உள்பட பலர் உள்ளனர்.



மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா மற்றும் டிசம்பர் 17ஆம் தேதி சேலத்தில் நடைபெற உள்ள இளைஞரணி இரண்டாவது மாநில மாநாட்டில் 50 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் எழுச்சியுடன் பங்கேற்பது குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரையாற்றினார். உடன் மாவட்டத் துணைச் செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., அவைத் தலைவர் பாலசுப்பிரமணியன், பொருளாளர் சோமசுந்தர பாண்டியன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் வடிவேல்முருகன், புதூர் சேகர், துணைச் செயலாளர் ஆசை கண்ணன், மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் நேரு பாண்டியன் மற்றும் திரளான கழக நிர்வாகிகள் கழகத்தினர் உள்ளனர்.

சு.சுப்பிரமணியன் தலைமை!

# நெல்லை பேட்டை பகுதியில் பொதுக்கூட்டம்!

## நடிகர் எம்.ஆர்.ஆர்.வாசுவிக்ரம் - டி.பி.எம்.மைதீன்கான் சிறப்புரை!

நெல்லை, அக். 2 -

நெல்லை மாநகர நெல்லை பேட்டை பகுதி தி.மு.க சார்பில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா, கழக அரசின் 2 ஆண்டு சாதனை விளக்கம், சேலத்தில் டிசம்பரில் நடைபெற இருக்கும் இளைஞர் அணி மாநில மாநாடு விளக்க மாபெரும் பொதுக்கூட்டம் நெல்லை டவுண் குளப்பிறை தெருவில் இன்று (02.10.2023 - திங்கள்கிழமை) மாலை 6 மணி அளவில் மாநகர செயலாளர் சு.சுப்ர மணியன் தலைமையில் வேல்முருகன், செந்தில், முருகன், சுந்தர்ராஜன், முருகன், லெனின், ஆறுமுகம், மன்சூர், மீனாட்சி சுந்தரம், ஆனந்த பெருமாள், மாரிமுத்து, ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது. மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் மாலைராஜா, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஏ. எல்.எஸ்.லெட்சுமணன், பேச்சிப் பாண்டியன் ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர். நிகழ்ச்சியை கழக தீர்மானக் குழு உறுப்பினர் சுப. சீதாராமன், முன்னாள் அரசு வழக்கறிஞர் பொன்னம்பலநாதன் என்ற துரை, கழக வழக்கறிஞர் சுரேஷ்குமார், மாநில மகளிர் தொண்டரணி துணை செயலாளர் விஜிலா சத்யானந்த், மாநில நெசவாளர் அணி துணை செயலாளர் பெருமாள் ஆகியோர் துவக்கி வைக்கின்றனர்.

இந்நிகழ்வில் மாநில கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை தலைவர் எம்.ஆர்.ஆர்.வாசுவிக்ரம், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான், மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ

ஞானதிரவியம் எம்.பி, மாநில நெசவாளர் அணி துணை செயலாளர் நெல்லை தொகுதி பார்வையாளர் வசந்தம் ஜெயக்குமார் ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றுகின்றனர்.

நிகழ்வில் மாவட்ட அவைத்தலைவர் முருகன், மேயர் சரவணன், துணை மேயர் ராஜ், பகுதி செயலாளர்கள் சுப்பிரமணியன், அண்டன் செல்லத்துரை துபாய் சாகுல், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் பொன்னையா பாண்டியன், மாநகர துணை செயலாளர் அப்துல் கையூம், நெல்லை மண்டல தலைவர் மகேஸ்வரி உள்பட கழக நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.

கூட்டத்திற்கான ஏற்பாடுகளை நெல்லை பேட்டை பகுதி கழக செயலாளர் நமச்சிவாயம் என்ற கோபி செய்துள்ளார்.


# இரா.கி.பேட்டையில் கழகக் கொடியேற்று விழா!

திருவள்ளூர், அக்.02–

திருவள்ளூர் மேற்கு மாவட்ட இரா.கி.பேட்டை ஒன்றிய தி.மு.க. சார்பில் ஒன்றிய செயலாளர் சி.என். சண்முகம் ஏற்பாட்டில் கழக நிர்வாகிகள் இல்லந்தோறும் கழக கொடியேற்றும் விழா நடைபெற்றது இதில். திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல.ஏ அம்மையார்குப்பத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து ஒன்றியத்தில் உள்ள கழக நிர்வாகிகள் இல்லத்திற்கு நேரில் சென்று இருவண்ணக் கொடியினை ஏற்றினார். அருகில் ஒன்றிய கழகச் செயலாளர் பெ.பழனி, பி.டி.சந்திரன், ஒன்றிய குழு பெருந்தலைவர் ரஞ்சிதா ஆபாவாணன், ஒன்றிய குழு துணை தலைவர் திலகவதி ரமேஷ், ஊராட்சி மன்ற தலைவர் அனிதா செங்குட்டுவன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பள்ளிப்பட்டு முரளி சேனா, மற்றும் கே.எம்.எஸ்.சுப்பிரமணி, சிவகுமார், உமாபதி, செல்வி, சந்தோஷ், கணேசன், கே.பி.மணி, கே.சீராளன், பன்னீர்செல்வம், திருஞானம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.







# சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.சார்பில்

# கலைஞர் நூற்றாண்டு துவக்க விழா தொடர் 100 நிகழ்ச்சிகள்!



## இரண்டாம் கட்டமாக – அக்டோபர் 4 முதல் ஜனவரி 10 (2024) வரை 40 தொடர் நிகழ்ச்சிகள்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



தமிழர் நலத்திற்கும், திராவிட மேன்மைக்கும், மனித முன்னேற்றத்திற்கும் ஓயாது உழைத்த உன்னதத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை, சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க சார்பில் ஆண்டு முழுவதும்கொண்டாடப்படும் தொடர் நிகழ்ச்சிகளின் இரண்டாம் கட்டமாக அக்டோபர் 04.2023 முதல் ஜனவரி10.2024 வரை 40 நிகழ்ச்சிகள் நடைபெறும்.

வரலாற்று தலைவருக்காக எடுக்கப்படும் இந்நிகழ்ச்சிகளில் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறோம்.

### கலைஞர் 100 – 41

**திருநாட்டின் அரும் தலைவர்**
**திசை மாற்றிய திரைக்கலைஞர்**

நாள்: 04.10.2023, புதன்கிழமை, மாலை: 6.00 மணி, இடம்: ஸ்வாதி மகால், கொரட்டூர் தலைமை: M.T.R. நாகராஜ் (அம்பத்தூர் கிழக்கு பகுதி செயலாளர்)

வாழ்த்துரைப்போர்:
பேராசிரியர் - **ஜெ. ஜெயரஞ்சன்**
திரைக்கலைஞர் - **கோவை.சரளா**
திரைப்பட இயக்குனர் **மிஷ்கின்**
நடிகர். **அஜய் ரத்னம்**

அன்புடன்: 84வது வட்டம் அம்பத்தூர் கிழக்கு பகுதி

### கலைஞர் 100 – 42

**திருவாரூரின் அறிவுத்தேர்!**
**திசைகளெங்கும் அவரின் பேர்!**

நாள்: 07.10.2023, சனிக்கிழமை, மாலை: 6.00 மணி, இடம்: வில்லிவாக்கம் பேருந்து நிலையம் அருகில், வில்லிவாக்கம்

தலைமை: கூ.பி.ஜெயின், எம்.சி., (வில்லிவாக்கம் மேற்குபகுதி செயலாளர், 8வது மண்டலக்குழுத்தலைவர்)

வாழ்த்துரைப்போர்: திரு.**ஆ.ராசா**,எம்.பி.,
கழக துணைப் பொதுச்செயலாளர்
திரு.**விடுதலை ராஜேந்திரன்**
திராவிடர் விடுதலைக் கழக பொதுச் செயலாளர்
திரு.**கே. கனகராஜ்**, )
மாநில செயற்குழு உறுப்பினர் - சி.பி.எம்)

அன்புடன்:
94வது வட்ட திமுக - வில்லிவாக்கம் மேற்கு பகுதி

### கலைஞர் 100 – 43

**உயிர்காக்க ரத்தம் கொடுப்போம்**
**உடன்பிறப்பாய் எழுந்து நிற்போம்**

நாள்: 08.10.2023, ஞாயிறு, காலை: 9.00 மணி

இடம்: எஸ்.எம்.கே.மகால், பழைய பாங்க் ஆப் பரோடா தெரு, அம்பத்தூர்

தலைமை: Dr.G.சாந்தகுமாரி,MC., (மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர்),

இரத்ததான முகாமை துவக்கி வைப்பவர் :
டாக்டர். **மயில்வாகணன்** (M.N.ஆர்த்தோபேடிக் மருத்துவமனை)

அன்புடன்:
மாவட்ட மருத்துவரணி - அம்பத்தூர் வடக்கு பகுதி

### கலைஞர் 100 – 44

**நட்சத்திரங்களின் சந்திரன்**
**தமிழ் திரைவானின் சூரியன்**

நாள்: 11.10.2023, புதன்கிழமை, மாலை: 6.00 மணி, இடம்: வீராசாமி தெரு எழும்பூர்.

தலைமை: கே.எஸ்.எம்.நாதன் ( தலைமை செயற்குழு உறுப்பினர்)

போற்றுவோர்: நடிகர். **ராஜ்கிரண்**
நடிகர்.**பாண்டியராஜன்**
நடிகை.**ரோகிணி**

அன்புடன்:
61வது வட்ட திமுக - எழும்பூர் தெற்கு பகுதி

### கலைஞர் 100 – 45

**உடல் நலம் பேணுவோம்**
**உதயத்தை காணுவோம்**

நாள்: 13.10.2023, வெள்ளிக்கிழமை, காலை: 9.00 மணி, இடம்: துறைமுகம் சட்டமன்ற தொகுதி,

துறைமுகம் தொகுதியில் பணியாற்றும் மாநகராட்சி தூய்மை பணியாளர்களுக்கான தொடர் மூன்று நாள் முழு உடல்பரிசோதனை மருத்துவ முகாமை துவக்கி வைப்பவர்

**உதயநிதிஸ்டாலின்** அவர்கள்
(இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்)

அன்புடன்:
துறைமுகம் மேற்கு /கிழக்கு பகுதி

### கலைஞர் 100 – 46

**கலைஞர் கண்டது கல்வி புரட்சி**
**தமிழகம் கண்டது புதிய எழுச்சி**நாள்: 14.10.2023, சனிக்கிழமை, காலை: 9.00 மணி, இடம்: திருவள்ளுவர் திருமண மாளிகை, பெரியார் நகர்

தலைமை: D.லோகேஷ் (இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர்)

மாவட்ட அளவில் நடைபெறும் இளைஞர்களுக்கான பேச்சுப் போட்டியை துவக்கி வைப்பவர்

தங்கம் தென்னரசு (நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர்)

அன்புடன்:
மாவட்ட இளைஞரணி - கொளத்தூர் கிழக்கு பகுதி

### கலைஞர் 100 – 47

**நெஞ்சுக்கு நீதியின் அரசர்**
**நிலையான புகழான கலைஞர்**

நாள்: 15.10.2023, ஞாயிற்றுக்கிழமை, காலை: 9.00 மணி, இடம்: மகேஷ் மகால், பெரம்பூர் பேரக்ஸ் சாலை

தலைமை: ஜி.தாமோதரன் (மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் )

மாணவ, மாணவியர்களுக்கான கலைஞர் வசனம் ஒப்பித்தல் போட்டியை துவக்கி வைப்பவர்

அமைச்சர் **எஸ்.எஸ்.சிவசங்கர்** (போக்கு வரத்துத்துறை)

அன்புடன்: மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, எழும்பூர் வடக்கு பகுதி

### கலைஞர் 100 – 48

**கலைஞர் என்பது அன்பாகும்**
**கருணை அவரின் பண்பாகும்**

நாள்: 18.10.2023, புதன்கிழமை, மாலை: 6.00 மணி , இடம்: சந்திரயோகி சமாதி சாலை, மங்களபுரம்.

தலைமை:மேயர். பிரியாராஜன் (தலைமை செயற்குழு உறுப்பினர் )

வாழ்த்துரைப்போர்: நடிகர்.**விஜயகுமார்**
முனைவர்.**பர்வின் சுல்தானா**
திரைப்பட இயக்குனர்-நடிகர் - **கவிதா பாரதி**
நடிகை.**அறந்தாங்கி நிஷா**

அன்புடன்
:74 அ வட்ட திமுக - திரு.வி.க.நகர் வடக்கு பகுதி

### கலைஞர் 100 – 49

**செந்தமிழ் படைப்பாளி**
**திராவிடப் போராளி**

நாள்: 21.10.2023, சனிக்கிழமை, மாலை: 6.00 மணி , இடம்: ஹயாத் மகால், பிராட்வே

தலைமை: N.P.M. ஷேக்அப்துல்லா (மாநில சிறுபான்மையினர் அணி துணை செயலாளர்)

போற்றுவோர்: டாக்டர். **சுதா சேஷய்யன்**
முனைவர்.**ம.ராஜேந்திரன்**
மூத்த பத்திரிக்கையாளர். **பா.கிருஷ்ணன்**
கலையரசி **நடராஜன்**

அன்புடன்: சிறுபான்மையினர் அணி
துறைமுகமம் கிழக்கு பகுதி

### கலைஞர் 100 – 50

**நவீன நாட்டை வரைந்தவர்**
**நடைமுறைபடுத்தி உயர்ந்தவர்**

நாள்: 22.10.2023, ஞாயிறு, காலை: 9.00 மணி, இடம்: சௌந்தரபாண்டியன் நாடார் பள்ளி, அயனாவரம்

தலைமை: வானவில் விஜய் (மாவட்ட மாணவரணி அமைப்பாளர்)

மாணவ, மாணவியர்களுக்கான கட்டுரைப் போட்டியை துவக்கி வைப்பவர்: **சி.வி.எம்.பி.எழிலரசன்**, எம்.எல்.ஏ., (கழக மாணவரணிச் செயலாளர்)

அன்புடன்:
மாவட்ட மாணவரணி - வில்லிவாக்கம் கிழக்கு பகுதி

### கலைஞர் 100 – 51

**இதயமும் இதயமும் இணையட்டும்**
**எதிர்காலம் கலைஞரை புகழட்டும்**

நாள்: 25.10.2023, புதன்கிழமை, காலை: 8.00 மணி, இடம்: ராஜா அண்ணாமலை மன்றம், பாரிமுனை

தலைமை: எஸ்.முரளி (துறைமுகம் மேற்கு பகுதி செயலாளர்)

இணையர்களுக்கு சீர்வரிசையுடன் திருமணத்தை நடத்தி வைப்பவர் : **எ.வ.வேலு** அவர்கள்
பொதுப்பணித்துறை அமைச்சர்

அன்புடன்:
59வது வட் திமுக- துறைமுகம் மேற்கு பகுதி

### கலைஞர் 100 – 52

**உடல் குணமாகட்டும்**
**உயிர் நலமாகட்டும்**

நாள்: 27.10.2023, வெள்ளிக்கிழமை, காலை: 9.மணி, இடம்: T.K.A திருமண மாளிகை, வில்லிவாக்கம்

தலைமை: கூ.பி.ஜெயின், (வில்லிவாக்கம் மேற்கு பகுதி செயலாளர்,8வது மண்டலக்குழுத்தலைவர்)

வில்லிவாக்கம் தொகுதியில் பணியாற்றும் மாநக ராட்சி தூய்மை பணியாளர்களுக்கான தொடர் மூன்று நாள் முழு உடல்பரிசோதனை மருத்துவ முகாமை துவக்கி வைப்பவர்

Dr.**மா.மதிவேந்தன்** ( வனத்துறை அமைச்சர்)

அன்புடன்:
94வது வட்ட திமுக - வில்லிவாக்கம் மேற்கு பகுதி

### கலைஞர் 100 – 53

**மாற்றத்தின் நாயகன்**
**வரலாற்றுச் சூரியன்**

நாள்: 28.10.2023, சனிக்கிழமை, மாலை: 6.00 மணி , இடம்: ஜாயின்ட் ஆபிஸ் அருகில், அயனாவரம்

தலைமை: வே. வாசு (வில்லிவாக்கம் கிழக்கு பகுதி செயலாளர் )

வாழ்த்துரைப்போர்: **தொல்.திருமாவளவன்**
(தலைவர் - விடுதலை சிறுத்தைகள் கட்சி)
திரு.**சி.மகேந்திரன்** ( மூத்ததலைவர் - இந்திய கம்யூனிஸ்ட் கட்சி)
திரு. தி.வேல்முருகன் - தலைவர்தமிழகவாழ்வுரிமை கட்சி

அன்புடன்:
96வது வட்ட திமுக - வில்லிவாக்கம் கிழக்கு பகுதி

### கலைஞர் 100 – 54

**கலைஞர் என்றால் பேரறிவு**
**காலம் தந்த தமிழமுது**

நாள்: 01.11.2023, புதன்கிழமை, மாலை: 6.00 மணி , இடம்: ராகவன் தெரு, பெரம்பூர் செம்பியம்

தலைமை: ஐ.சி.எப்.வ.முரளிதரன்
(கொளத்தூர் கிழக்கு பகுதி செயலாளர்)

புகழுரைப்போர்:
திரு. **கே.பாலகிருஷ்ணன்** ( மாநில செயலாளர் -சி.பி. எம்.
திரு.**எம்.எச்.ஜவாஹிருல்லா**, எம்.எல்.ஏ.,
தலைவர் - மனிதநேய மக்கள் கட்சி
திரு.**சபாபதி மோகன்**
கழக கொள்கைப் பரப்பு செயலாளர்

அன்புடன்:
70வது வட்ட திமுக - கொளத்தூர் கிழக்கு பகுதி

### கலைஞர் 100 – 55

**மருத்துவம் செய்வோம்**
**மக்களை மீட்போம்**

நாள்: 03.11.2023 வெள்ளிக்கிழமை, காலை: 9.00 மணி, இடம்: ஜி.கே.எம்.காலனி மைதானம், கொளத்தூர்

தலைமை: சரிதா மகேஷ்குமார், எம்.சி., (பொதுக்குழு உறுப்பினர் - 6வது மண்டலக்குழுத்தலைவர்)

கொளத்தூர் தொகுதியில் பணியாற்றும் மாநகராட்சி தூய்மை பணியாளர்களுக்கான தொடர் மூன்று நாள் முழு உடல்பரிசோதனை மருத்துவ முகாமை துவக்கி வைப்பவர்

அமைச்சர் **மா.சுப்பிரமணியன்** (மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை )

அன்புடன்:
64 அ வட்ட திமுக - கொளத்தூர் மேற்கு பகுதி

### கலைஞர் 100 – 56

**பேராற்றல் கொண்டவர்**
**பேரன்பால் வென்றவர்**

நாள்: 04.11.2023 சனிக்கிழமை, மாலை: 6.00 மணி , இடம்: OT பேருந்து நிலையம் அருகில், அம்பத்தூர்

தலைமை: பி.கே.மூர்த்தி, எம்.சி., ( தலைமை செயற்குழுஉறுப்பினர்-7வதுமண்டலக்குழுத்தலைவர்)

போற்றுவோர்:
திரு. **ஆர்.எஸ்.பாரதி** - கழக அமைப்பு செயலாளர்
திரு.**E.V.K.S. இளங்கோவன்**, எம்.எல்.ஏ.,
தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி முன்னாள் தலைவர்
திரு. **நாஞ்சில் சம்பத்**, - திராவிட இயக்க போர் முரசம்

அன்புடன்:
81வது வட்ட திமுக - அம்பத்தூர் வடக்கு பகுதி

### கலைஞர் 100 – 57

**கிழக்கு வானின் சுடரே**
**கேள்வியும் பதிலும் அவரே**

நாள்: 05.11.2023, ஞாயிற்றுக்கிழமை, காலை: 9.00 மணி , இடம்: இராஜராஜேஸ்வரி திருமண மகால், சிட்கோ நகர்

தலைமை: சுதா தீனதயாளன், எம்.சி., (மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர்)

மாணவ - மாணவியர்களுக்கான வினாடி வினா போட்டியை துவக்கி வைப்பவர்

திருமதி. **ஹெலன் டேவிட்சன்** ( கழக மகளிர் அணிச் செயலாளர்)

அன்புடன்:
மாவட்ட மகளிர் அணி - வில்லிவாக்கம் மேற்கு பகுதி

### கலைஞர் 100 – 58

**ஏழ்மையை விரட்டியவர்**
**எளிமையை போற்றியவர்**

நாள்: 08.11.2023 புதன்கிழமை, மாலை 6.00 மணி , இடம்: G.K.M. காலனி மைதானம், கொளத்தூர்.

தலைமை: எ. நாகராசன், எம்.சி., (கொளத்தூர் மேற்கு பகுதி செயலாளர்)

வாழ்த்துரைப்போர்: **இந்து என்.ராம்**
(தி இந்து குழுமம்)
திரு.**எஸ்.பி. முத்துராமன்** - திரைப்பட இயக்குநர்
திரு.**தராசு.ஷியாம்** - தராசு வார இதழ்

அன்புடன்:
69, 69அ வட்ட திமுக - கொளத்தூர் மேற்கு பகுதி

### கலைஞர் 100 – 59

**புகழில் கலைஞர் முதலிடம்**
**புதுமை அவரிடம் புகலிடம்**

நாள்: 15.11.2023 புதன்கிழமை, மாலை: 6.00 மணி , இடம்: கேரள சமாஜ் ஆடிட்டோரியம் - பூந்தமல்லி நெடுஞ்சாலை

தலைமை: பரிதி இளம்சுருதி, எம்.சி.,
(கழக அயலக அணி துணைச் செயலாளர்)

புகழுரைப்போர்:
திரு.**கி.வைத்தியநாதன்** - தினமணி ஆசிரியர்
நீதியரசர் **கண்ணதாசன்**
சிற்பி.**பாலசுப்பிரமணியன்** - புகழ்பெற்ற கல்வியாளர்
புலவர். **இரெ. சண்முகவடிவேல்** - பட்டிமன்றப் பேச்சாளர்
திரு.**நல்லி குப்புசாமி** செட்டியார்

அன்புடன்:
கழக அயலக அணி - எழும்பூர் வடக்கு பகுதி

### கலைஞர் 100 – 60

**வேரானவர் கலைஞர்**
**விழுதானவர் தலைவர்**

நாள்: 19.11.2023 ஞாயிற்றுக்கிழமை, காலை: 9.00 மணி , இடம்: மாநகராட்சி திடல் - மகாத்மா காந்தி ரோடு, குமரன் நகர்.

தலைமை: நாகவள்ளி பிரபாகரன், எம்.சி., (மாவட்ட சுற்றுச் சூழல் அணி அமைப்பாளர் )

மரக்கன்றுகள் நடும் விழாவை துவக்கி வைப்பவர்
திரு.**கா.ராமச்சந்திரன்**
மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர்

அன்புடன்: மாவட்டச் சுற்றுச்சூழல் அணி
அம்பத்தூர் தெற்கு பகுதி

### கலைஞர் 100 – 61

**கதை திரைக்கதை வசனம்**
**கலைஞரே என்றைக்கும் சிகரம்**

நாள்: 22.11.2023 புதன்கிழமை, மாலை: 6.00 மணி , இடம்: ஹேம்ராஜ் பவன், ஓட்டேரி

தலைமை:செ.தமிழ்வேந்தன் (திரு.வி.க.நகர் வடக்கு பகுதி செயலாளர்)

வாழ்த்துவோர்:
நடிகர். **கே. பாக்கியராஜ்**,
நடிகை.**குட்டி பத்மினி**
இயக்குநர். **கரு பழனியப்பன்**

அன்புடன்:
71 அ வட்ட திமுக - திரு.வி.க.நகர் வடக்கு பகுதி

### கலைஞர் 100 – 62

**நோயற்ற வாழ்வு! உயிருக்கு உயர்வு!**

நாள்: 24.11.2023 வெள்ளிக்கிழமை, காலை: 9.00 மணி . இடம்: மகாலட்சமி திருமண மண்டபம், ராம் நகர், அம்பத்தூர்

தலைமை: ஜோசப்சாமுவேல், எம்.எல்.ஏ, (அம்பத்தூர் வடக்கு பகுதி செயலாளர்)

அம்பத்தூர் தொகுதியில் பணியாற்றும் மாநகராட்சி தூய்மை பணியாளர்களுக்கான தொடர் மூன்று நாட்கள் முழு உடற்பரிசோதனை மருத்துவ முகாமை துவக்கி வைப்பவர்

டாக்டர்.**கனிமொழி என்.வி.என். சோமு**, எம்.பி.,
கழக மருத்துவரணித்தலைவர் - செய்தி தொடர்பாளர் -திமுக

அன்புடன்:
79 அ வட்ட திமுக - அம்பத்தூர் வடக்கு பகுதி

### கலைஞர் 100 – 63

**முத்துவேலரின் மகனானவர்**
**மூன்றுதமிழின் புகழானவர்**

நாள்: 25.11.2023 சனிக்கிழமை, மாலை: 6.00 மணி , இடம்: ரமணன் தெரு, யானைக்கவுனி

தலைமை: பி.ஸ்ரீராமுலு, எம்.சி., (பகுதி பொருளாளர் 5வது மண்டலக்குழு தலைவர்)

போற்றுவோர்:
திரு. **திண்டுக்கல் ஐ.லியோனி** (கழக கொள்கைப் பரப்பு செயலாளர்- தலைவர் தமிழ்நாடு பாடநூல் கழகம்)
திரு. **கவிஞர் மோகனசுந்தரம்** - பட்டிமன்ற பேச்சாளர்
திரு. **விஜய் டி.வி.பழனி** (சின்னத்திரை நடிகர்)

அன்புடன்:
57வது வட்ட திமுக - துறைமுகம் மேற்கு பகுதி

### கலைஞர் 100 – 64

**கலை உலகின் முன்னோடி**
**காலத்தின் கருத்தியல் கண்ணாடி**

நாள்: 29.11.2023 , புதன்கிழமை, மாலை: 6.00 மணி , இடம்: மோகன் கார்டன், கொரட்டூர், சென்னை76.

தலைமை: D.S.P. ராஜகோபால், எம்.சி., (அம்பத்தூர் தெற்கு பகுதி செயலாளர்)

போற்றுவோர்:

தொடர்ச்சி 10 ஆம் பக்கம்

# சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.சார்பில் - கலைஞர் நூற்றாண்டு துவக்க விழா தொடர் 100 நிகழ்ச்சிகள்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு... 9 ஆம் பக்கத் தொடர்ச்சி

திருமதி. **ராதிகா சரத்குமார்**

நடிகர். **சூரி**

நடிகர். **ஸ்ரீமன்**

அன்புடன்:

83வது வட்ட திமுக - அம்பத்தூர் தெற்குகிழக்கு பகுதி

**கலைஞர் 100 – 65**

**ஆயுளை மீட்பது மருத்துவம்**

**அறிவினில் கலைஞர் தனித்துவம்**

நாள்: 01.12.2023 , வெள்ளிக்கிழமை, காலை: 9.00 மணி , இடம்: உமா சுராஜ் மகால், அங்காளம்மன் கோயில் தெரு,

தலைமை: சொ. வேலு, எம்.சி., ( எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர்)

எழும்பூர் தொகுதியில் பணியாற்றும் மாநகராட்சி தூய்மைப் பணியாளர்களுக்கான தொடர் மூன்று நாள் முழு உடல் பரிசோதனை மருத்துவ முகாமை துவக்கி வைப்பவர்

டாக்டர். **நா.எழிலன்**, எம்.எல்.ஏ., (கழக மருத்துவ ரணிச் செயலாளர்)

அன்புடன்:

78 அ வட்ட திமுக - எழும்பூர் வடக்கு பகுதி

**கலைஞர் 100 – 66**

**போற்றுவோம் கலைஞர் புகழை**

**ஏற்றுவோம் அவரின் சுடரை**

நாள்: 02.12.2023 , சனிக்கிழமை, மாலை: 6.00 மணி , இடம்: மேனாம்பேடு சாலை, அம்பத்தூர் தொழிற்பேட்டை

தலைமை: M.கமல், எம்.சி., (வட்டச் செயலாளர்)

வாழ்த்துரைப்போர்:

திரு. **திருச்சி N. சிவா**, எம்.பி., கழக கொள்கை பரப்பு செயலாளர்

திரு. **சு.வெங்கடேசன்** - மாநில செயற்குழு உறுப்பினர் CPM

அன்புடன்:

86வது வட்ட திமுக - அம்பத்தூர் வடக்கு பகுதி

**கலைஞர் 100 – 67**

**வெற்றியே வீரரின் இலக்கு**

**வழங்கிடும் சூரிய கிழக்கு**

நாள்: 03.12.2023 , ஞாயிற்றுக்கிழமை, காலை: 9.00 மணி , இடம்: பந்தர்கார்டன் பள்ளி மைதானம்

தலைமை: ம. அசோக்குமார் (மாவட்ட விளையாட்டு அணி அமைப்பாளர்)

கிரிக்கெட் போட்டியை துவக்கி வைப்பவர்

திரு. **தயாநிதிமாறன்**, எம்.பி.,

கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்

கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர்

அன்புடன்: மாவட்ட விளையாட்டு அணி

கொளத்தூர் கிழக்கு பகுதி

**கலைஞர் 100 – 68**

**கூடுவோம் திராவிட ஒளியேற்றி!**

**பாடுவோம் கலைஞர் புகழ்போற்றி!**

நாள்: 07.12.2023 வியாழன், மாலை: 6.00 மணி

இடம்: ரமணா நகர், பெரம்பூர், கொளத்தூர் தொகுதி

தலைமை: துரைக்கண்ணன் (வழக்கறிஞர் அணி மாவட்ட அமைப்பாளர்)

சின்னத்திரை பிரபலங்களின் இன்னிசை பட்டிமன்றம்

**நடுவர்** : இன்னிசை. சொல்லரசி - கல்பாக்கம் ரேவதி

**தலைப்பு** : முத்தமிழறிஞரின் சீரிய புகழுக்கு அடித்தளமானது அவரது எழுத்தாளுமையா? அவரது சொல்லாளு மையா?

**எழுத்தாளுமையே**

விஜய்டிவி /சன்டிவி புகழ் -திருச்சி அன்னலட்சுமி

சன்டிவி/ஆதித்யா டிவி புகழ்முனைவர் சேலம் அபு

**சொல்லாளுமையே**

விஜய்டிவி புகழ் - கல்பாக்கம் காயத்திரி

விஜய்டிவி/சன்டிவிபுகழ் - கோவில்பட்டி அன்னபாரதி

**இசை** - எழில் ரிதம்ஸ்

அன்புடன்:மாவட்ட வழக்கறிஞர் அணி

கொளத்தூர் கிழக்கு பகுதி

**கலைஞர் 100 – 69**

**நிலம் போற்றும் முத்தமிழறிஞர்**

**நிதம் போற்றும் தமிழினத் தலைவர்**

நாள்: 09.12.2023 , சனிக்கிழமை, மாலை: 6.00 மணி - இடம்: ஜாயின்ட் ஆபிஸ் அருகில், அயனாவரம்.

தலைமை: வே. வாசு (வில்லிவாக்கம் கிழக்கு பகுதி செயலாளர்)

போற்றுவோர்

திரு. **இரா. முத்தரசன்** (மாநில செயலாளர் - இந்திய கம்யூனிஸ்ட் கட்சி)

திரு. **கே.எம்.காதர் மொய்தீன்**

தலைவர்இந்திய யூனியன் முஸ்லீம் லீக்

திரு. **பி.வி.கதிரவன்**

மாநில பொதுச்செயலாளர் - இந்திய பார்வர்டு பிளாக்

அன்புடன்:

96வது வட்ட திமுக - வில்லிவாக்கம் கிழக்கு பகுதி

**கலைஞர் 100 – 70**

**சமூக சமத்துவம் சாதித்தவர்**

**பாலின சமத்துவம் போதித்தவர்**

நாள்: 10.12.2023 , ஞாயிற்றுக்கிழமை, மாலை : 4.00 மணி . இடம்: எஸ்.ஆர்.மகால், ராட்லர்ஸ் ரோடு

தலைமை: ராஜேஸ்வரி ஸ்ரீதர் ( மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர்)

திருநங்கைகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குபவர்

**ஸ்ரீலஸ்ரீ கயிலை மாசிலாமணி தேசிக. ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்**

(திருகயிலாயப் பரம்பரைத் தருமையாதீனம் 27வது குரு சந்திதானம்)

அன்புடன்: மாவட்ட மகளிர் தொண்டரணி

எழும்பூர் தெற்கு பகுதி

**கலைஞர் 100 – 71**

**கற்றுத் தந்த கலை மேதை**

**கழகம் நடப்பது அவர் பாதை**

நாள்: 13.12.2023 , புதன்கிழமை, மாலை : 6.00 மணி , இடம்: கிருஷ்ணதாஸ் சாலை, ஜமாலியா

தலைமை: பி. உதயசங்கர் (பொதுக்குழு உறுப்பினர் மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர்)

திரைப்பிரபலங்கள் பங்கேற்கும் இன்னிசை நிகழ்ச்சியை துவக்கி வைப்பவர்

திரு. **அர.சக்கரபாணி** (உணவு (ம) உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர்

இன்னிசை வழங்குவோர்: M.K.T. ராஜாவின் தீம் திரனா

பாடுவோர்:

**கானாபாலாமாலதி**

**முகேஷ்வேல்முருகன்**

அன்புடன்:

மாவட்ட வர்த்தகர் அணி - 74வது வட்ட திமுக

**கலைஞர் 100 – 72**

**தமிழோவியம் வரைந்த தலைவர்**

**குறளோவியம் புனைந்த கலைஞர்**

நாள்: 16.12.2023 , சனிக்கிழமை, மாலை : 6.00 மணி, இடம்: தம்பு செட்டி தெரு, மண்ணடி.

தலைமை: எஸ். ராஜசேகர்

துறைமுகம் கிழக்கு பகுதி செயலாளர்

புகழுரைப்போர்:

திரு. **ஜி.விஸ்வநாதன்** (நிறுவனர் - வி.ஐ.டி. பல்கலைக்கழகம்)

திரு. **ராம.சுப்பிரமணியன்** - அரசியல் விமர்சகர்

திரு. **கவிஞர்.பா.விஜய்** - நடிகர் பாடலாசிரியர்

அன்புடன்:

60. 60அ வட்ட திமுக - துறைமுகம் கிழக்கு பகுதி

**கலைஞர் 100 – 73**

**திராவிட நாட்டின் விளக்கு**

**தென்னாட்டின் கிழக்கு**

நாள்: 20.12.2023 , புதன்கிழமை, மாலை : 6.00 மணி , இடம்: YMCA, ரித்தர்டன் ரோடு

தலைமை: ஆர்.பாபு, வட்டகழக செலாளர்

போற்றுவோர்:

எழுத்தாளர். **சிவசங்கரி**

எழுத்தாளர். **இந்துமதி**

இயக்குனர். **தங்கர்பச்சான்**

அன்புடன்:

58அ வட்டம் - எழும்பூர் தெற்கு பகுதி

**கலைஞர் 100 – 74**

**நோயற்ற சமூகம் வேண்டி நின்றவர்**

**நூறாண்டு கடந்தும் வாழுகின்றவர்**

நாள்: 22.12.2023 , வெள்ளிக்கிழமை, காலை : 9.00 மணி , இடம்: காஸா கிராண்ட் வளாகம்

தலைமை: செ.தமிழ்வேந்தன்

திரு.விக.நகர். வடக்கு பகுதி செயலாளர்

திரு.வி.க.நகர் தொகுதியில் பணியாற்றும் மாநகராட்சி தூய்மைப் பணியாளர்களுக்கான தொடர் மூன்று நாள் முழு உடல்பரிசோதனை மருத்துவ முகாமை துவக்கி வைப்பவர்

டாக்டர் **கலாநிதி வீராசாமி**, எம்.பி

கழக அயலக அணித்தலைவர்

அன்புடன்:

71 அ வட்ட திமுக - திரு.வி.க.நகர் வடக்கு பகுதி

**கலைஞர் 100 – 75**

**இலக்கியம் தந்தவர்**

**இலட்சியம் வென்றவர்**

நாள்: 27.12.2023 , புதன்கிழமை, மாலை : 6.00 மணி, இடம்: வெங்கட்டம்மா சமாதி, சூளை, ஓட்டேரி.

தலைமை: எஸ்.சசிக்குமார் வட்டக் கழக செயலாளர்

போற்றுவோர்: **முனைவர்.க.பொன்முடி**

மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர்

திரு. **ஈ.ஆர்.ஈஸ்வரன்**,எம்.எல்.ஏ.,(பொதுச் செயலாளர் - கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி)

திரு. **பொன்குமார்** (தலைவர்தமிழ்நாடு விவசாயிகள் தோழமைக்கட்சி - தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நலவாரியத் தலைவர்)

அன்புடன்:

76வது வட்ட திமுக - திரு.வி.க.நகர் தெற்கு பகுதி

**கலைஞர் 100 – 76**

**ஏற்றம் தந்தவர் - மாற்றம் கண்டவர்**

நாள்: 30.12.2023 , சனிக்கிழமை, மாலை : 6.00 மணி, இடம்: ஜெயின்பள்ளி வளாகம், அகரம்

தலைமை: கே.சந்துரு (தலைமை செயற்குழு உறுப்பினர்)

புகழுரைப்போர்:

திருமிகு. **கனிமொழி கருணாநிதி**, எம்.பி.,

கழக துணைப் பொதுச் செயலாளர்

பத்திரிக்கையாளர் **பிரியன்**

இயக்குனர். வி.**சி. குகநாதன்**

கவிஞர். **யுகபாரதி**

அன்புடன்:

68வது வட்ட திமுக - கொளத்தூர் கிழக்கு பகுதி

**கலைஞர் 100 – 77**

**தனித்துவத் தலைவர் - தமிழாண்ட கலைஞர்**

நாள்: 03.01.2024 , புதன்கிழமை, மாலை : 6.00 மணி, இடம்: மலையாளி கிளப், கிளப்ரோடு, சேத்துப்பட்டு

தலைமை: V.சுதாகர் (எழும்பூர் தெற்கு பகுதி செயலாளர்

புகழுரைப்போர்:

மேனாள். **நீதியரசர்.கே.சந்துரு**

திருமதி. **உ.வாசுகி**

திரு. **கம்பம் செல்வேந்திரன்**

திரு. **ஒ.ஏ. நாகலிங்க**ம்

அன்புடன்:

58, 58அ வட்ட திமுக - எழும்பூர் தெற்கு பகுதி

**கலைஞர் 100 – 78**

**உலகத் தமிழர்களின் இதயம்**

**ஒளிதந்த கலைஞரே உதயம்**

நாள்: 06.01.2024 , சனிக்கிழமை, மாலை : 6.00 மணி , இடம்: B.K.N. மகால், அனிதா பள்ளி வளாகம்

தலைமை: D.லோகேஷ் ( மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்)

முத்தமிழறிரை போற்றும் அயலக வாழ் தமிழ்த்தலைவர்கள்

திரு. **டத்தோ ஸ்ரீ எம்.சரவணன்**

மலேசிய பாராளுமன்ற உறுப்பினர்

ம.இ.கா.தேசியத் துணைத்தலைவர்

முனைவர். **அருள்ராசா நாகேஸ்வரன்**

எழுத்தாளர் பேச்சாளர்

சுவிஸ் தமிழ் இலக்கிய நிறுவனர்

அன்புடன்:

மாவட்ட இளைஞரணி - எழும்பூர் தெற்கு பகுதி

**கலைஞர் 100 – 79**

**இலக்கிய வானில் ஒளிதந்தவர்**

**இலட்சிய பயண வழிதந்தவர்**

நாள்: 07.01.2024 , ஞாயிற்றுக்கிழமை, மாலை: 4.00 மணி , இடம்: இளங்கோ நகர், விளையாட்டு மைதானம், பாடி.

தலைமை: - L.P.F.மோகன் ( மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர்)

ஆட்டோ ஓட்டுநர்களுக்கு தையற்தொகையுடன் கூடிய சீருடைகள் வழங்குபவர்

அமைச்சர் . **கே.என்.நேரு** (நகராட்சி நிர்வாகத்துறை)

அன்புடன்:

89வது வட்டம் - அம்பத்தூர் தெற்கு பகுதி

**கலைஞர் 100 – 80**

**திசையெங்கும் அவர்சொல் ஒளியானது**

**திராவிட மாடலின் வழியானது**

நாள்: 10.01.2024 , புதன்கிழமை, மாலை: 6.00 மணி, இடம்: வில்லிவாக்கம் பேருந்து நிலையம் அருகில், வில்லிவாக்கம்

தலைமை: வானவில் விஜய் (மாவட்ட மாணவரணி அமைப்பாளர்)

போற்றுவோர்: திரு. **எஸ்.திருநாவுக்கரசு**

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி முன்னாள் தலைவர்

திரு. **அன்பில் மகேஷ் பொய்யாமொழி**

மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர்

அன்புடன்: மாவட்ட மாணவரணி

வில்லிவாக்கம் மேற்கு பகுதி

**சென்னை கிழக்கு மாவட்டம்**

**பங்கேற்று சிறப்பிப்பவர்கள்..**

டி .ஆர்.பாலு .எம்.பி., (கழக பொருளாளர், நாடாளு மன்ற குழுத்தலைவர்), தயாநிதி மாறன் .எம்.பி., (கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர்), மேயர் பிரியா ராஜன்,(தலைமை செயற்குழு உறுப்பினர்) டாக்டர். கலாநிதி வீராசாமி. எம்.பி,(கழக மருத்துவ அணி இணைச் செயலாளர்), இரா.கிரிராஜன் எம்பி., (கழக சட்டத்துறை செயலாளர்), ப. தாயகம் கவி. எம். எல்.ஏ, (கழக இளைஞர் அணி துணைச் செயலாளர்), ஜோசப் சாமுவேல். எம்.எல்.ஏ, (அம்பத்தூர் வடக்கு பகுதி செயலாளர்), இ.பரந்தாமன் எம்.எல். ஏ, (கழக சட்டத்துறை இணைச் செயலாளர்), அ.வெற்றி அழகன். எம்.எல்.ஏ. (கழக பொறியாளர் அணி இணைச் செயலா ளர்,) ப. ரங்கநாதன், (தலைமை செயற்குழு உறுப்பினர்)

பி.கே .மூர்த்தி. எம்.சி, (தலைமை செயற்குழு உறுப்பினர். மண்டல குழுதலைவர்) கே.சந்துரு, (தலைமை செயற்குகுழு உறுப்பினர்) , கே.எஸ்.எம். நாதன். (தலைமை செயற்குழு உறுப்பினர்), எம். விஜயகுமார், (தலைமை செயற்குழு உறுப்பினர்) , கே .எஸ்.ரவிச்சந்திரன், (கழக சட்டத்துறை துணைச் செயலாளர்), எஸ். மணி முடி, (மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை தலைவர்), சங்கரி நாராயணன், (கழக மகளிர் அணி துணைச் செயலாளர்), தமிழன் பிரசன்னா, (கழக செய்தித்தொடர்பு இணைச் செய லாளர்), சரிதா மகேஷ்குமார், (பொதுக்குழு உறுப்பினர், மண்டலகுழுத்தலைவர்),

ப.ஸ்ரீராமுலு, (மண்டலகுழுத்தலைவர், (பகுதி பொரு ளாளர்), கூ.பீ. ஜெயின்.எம்.சி, (மண்டலக்குழு தலைவர், பகுதிச் செயலாளர்), ஜி.சாந்தகுமாரி, எம் சி, தலைவர், பொது சுகாதாரத்துறை / மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர்) சொ.வேலு. எம்.சி, (பகுதி செயலாளர், சென்னை மாநகராட்சி நியமன குழு உறுப்பினர்), ஆ.தாமோதரன், (தலைமை கழக வழக்கறிஞர்). வே .உமாகாந்த், (கழக பொறியாளர் அணி துணைச் செயலாளர்), என்.பி.எம் .ஷேக் அப்துல்லா, (கழக சிறுபான்மை அணி துணைச் செயலாளர் ), பரிதி இளம்சுருதி, எம்.சி., (கழக அயலக அணி துணைச் செயலாளர்), கவிஞர் நன்மாறன், (கழக கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணைச் செயலாளர்),

கோ. ஏகப்பன், மாவட்ட அவைத்தலைவர்,

தேவ ஜவகர், மாவட் துணைச் செயலாளர்,

ஜி .மகாதேவன், மாவட் துணைச் செயலாளர்,

புனிதவதி எத்திராசன் .எம். சி. மாவட்ட துணைச் செயலாளர், இசட்.ஆசாத். எம் .சி.. மாவட்ட பொருளாளர்

**பகுதி செயலாளர்கள்**.. ஐ.சி.எஃப். வ. முரளிதரன், ஏ. நாகராசன்.எம் சி., டி.எஸ்.பி.ராஜகோபால்.எம்.சி., எம் .டி .ஆர். நாகராஜ், செ. தமிழ்வேந்தன், எம். சாமிக்கண்ணு, எஸ். ராஜசேகர், எஸ் .முரளி, வே . வாசு, வி.சுதாகர்.

**பொதுக்குழு உறுப்பினர்கள்**.. எஸ். பன்னீர்செல்வம், கோ. மணி, டி.வி. செம்மொழி, பி.ஜே. துளசிங்கம், சாவித்திரி வீரராகவன், பி. உதயசங்கர், வி.ரமேஷ் (எ) நீலகண்டன்,எம்.சி., எம் இப்ராஹிம் கனி, அ.நிர்மலா தேவி, டாக்டர். ஏ .பி. பூர்ணிமா. எம். சி. இரா. கலைச்செல்வி, டி .போஸ்.

**மாவட்ட பிற அணிகளின் அமைப்பாளர்கள்**.. டி. லோகேஷ், ஜெ.பாலமுருகன், பி.ஜெகதீஷ், எஸ். தனசேகர், க.வினோத், ஜி.ஜெ.பிரபு, ஆர்.டி.சங்கர்நானா, வானவில் விஜய், சுதா தீனதயாளன்,எம்.சி., நா. துலுக்காணம், ஜி.தாமோதரன், எம்.பெரோஸ்கான், LPF. மோகன், பி.விஜயகுமார், M.விநாயகம், ராஜேஸ்வரி ஸ்ரீதர்,எம்.சி., ஜி.வி.நாகவள்ளி பிரபாகரன் எம்.சி., ஆர். எஸ்.சித்திக், கு.கிருஷ்மூர்த்தி, எல்.சம்பத்குமார், கா.ராஜ் முகமது, து.ஆயிரம், ஜி.பி.பிரதீப்குமார், ம. அசோக்குமார்,

**மாமன்ற உறுப்பினர்கள்**.. கே. சாரதா, டி .யோக பிரியா, எம் .தாவுத்பீ, பி.அமுதா, சி .ஸ்ரீ தணி, லதா வாசு,

எஸ். தனலட்சுமி, ஆ.பிரியதர்ஷினி, மோ.பானு பிரியா, உஷா நாகராஜ், கே.பொற்கொடி, எஸ். உமா, பாத்திமா அகமது, பி சுமதி. மு. சரவணன், ச. அம்பேத்வளவன். எல். ரமணி. ச.தமிழ்ச்செல்வி, எல் நவீன், வி.பரிமளம், ராஜேஷ் ஜெயின், ம.கமல், எம்.இ.சேகர்,

**வட்ட கழக செயலாளர்கள்**: **எழும்பூர் வடக்கு** 77 தி. தயாளன், 77அ வி.அபாய், 78 சு. மனோகர், 78அ ந. பாலு, 104 - ஆர்.எம்.ரங்நாதன், 104அ - சி. சேகர்

**எழும்பூர் தெற்கு**

58 வி. விஜயகுமார், 58அ ஆர்.பாபு, 61 டால்பின். எஸ்.அரிகிருஷ்ணன். 61அ இ.மொய்தின், 108 வான்மதி கதிரவன், 108அ எல். சுந்தரராஜன்,எம்.சி.

**திரு.வி.க.நகர் வடக்கு**

71 பரிமளா சுரேஷ்பாபு, 71அ மா.ருத்ரமூர்த்தி, 72 எம்.ஏ.டிக்கா. 72அ எம்.இசட்.அபாய், 74 எஸ். புஷ்பராஜ், 74அ ஜி. கிருஷ்ணகுமார்

**திரு.வி.க.நகர் தெற்கு**

73 எம்.தமிழ், 73அ -பொல்லு.டி. சுரேஷ்குமார் , 75 வி.க.வெங்கடேசன், 76 எஸ். சசிகுமார், 76அ எஸ். வெங்கடேசன்

**கொளத்தூர் கிழக்கு**

66அ பி.உமைதுரை, 67 பி.பொன்முடி, 67அ கே. ஜார்ஜ்குமார், 68 கே.பி.ஆதவன்மணி, 68அ பி.டி.சி. எஸ்.ரவி, 70 ப. அன்பரசு, 70அ டி.சந்திரசேகர்

**கொளத்தூர் மேற்கு**

64 செ. முருகன், 64அ எம்.பி.தமிழ்செல்வன், 65 என்.சௌந்தர், 65அ என்.பவுல்ராஜ், 66 என். இராமச்சந்திரன், 69 எம்.ஜெ.சி.பாபு, 69அ பி.அதிபதி

**துறைமுகம் கிழக்கு**

55 வி.சத்தியநாராயணன், 55அ எஸ். புகழேந்தி, 55ஆ ஆர்.எ.அஸ்லாம், 56 டி. கதிரவன் (எ) ராஜா, 56அ பரத்குமார், 60 கே.கவியரசு, 60அ -ஆ.நா. பார்த்திபன்

**துறைமுகம் மேற்கு**

54 எம். ஜெய்சங்கர், 54அ -பா. கதிரவன், 54ஆ ஆர். ரவிச்சந்திரன், 57 ஜி.இராமமூர்த்தி, 57அ பா. அண்ணா துரை, 59 டி.சதிஷ்குமார், 59அ அ.வே.பா.பிரபாகரன்

**அம்பத்தூர் கிழக்கு**

82 மு.சண்முகம், 82அ ஆ. சுந்தராஜ், 83 சீ. லோக நாதன், 83அ சு.மோகன்குமார், 84 மு. விஜயகு மார், 84அ த.வ.லால்.பி செந்தில்

**அம்பத்தூர் தெற்கு** :

87 த. பிரகாஷ்தயாளன், 88 சி. சீனிவாசன், 89 எம்.இ.சேகர், எம்.சி., 90 நா.நெப்போலியன், 93 இரா. டீக்கா

**அம்பத்தூர் வடக்கு**

79 வே.ரவீந்திரன், 79அ பு.வீரா (எ) வீரராகவன்,

80 வெ. இராதாகிருஷ்ணன், 81 மு. இரகு, 85 த. கண்ணபிரான், 86 ம. கமல்,எம்.சி.,

**வில்லிவாக்கம் கிழக்கு**

96 எ.வேதா, 97 சீ.விக்னேஷ் , 97அ ச.மனோகரன், 98 கே. பாஸ்கர், 98அ எ.தேவராஜ், 98ஆ காஞ்சி செ. துரை

**வில்லிவாக்கம் மேற்கு**

94 சிட்கோ சேகர், 94அ ஆர்.தீனதயாளன், 94ஆ க. சுகுமாரன், 95 மா. அகிலன், 95அ உமாசங்கர், 104 சொ.முருகேசன், 104அ ப.லோகுபாபு 104ஆ ஜெ. தங்கராஜ்

அனைத்து நிகழ்ச்சிகளிலும் அந்தந்த பகுதிக்குட்பட்ட மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள்,வட்ட கழகச் செயலாளர்கள்,

மாவட்ட பிரதிநிதிகள். பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள், செயல் வீரர்கள் பங்கேற்று சிறப்பிப்பார்கள்.

அமைச்சர் **பி.கே.சேகர்பாபு**

செயலாளர்

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.

(இந்து சமய அறநிலையத்துறை மற்றும்

சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் துறை)



தருமபுரி ஒருங்கிணைந்த மாவட்ட செயல்வீரர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு எழுச்சியுரையாற்றிய கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் வெள்ளி வீரவாள் வழங்கினார். உடன் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தருமபுரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் தடங்கம்.பெ. சுப்ரமணி,நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.டி.என்.வி.எஸ்.செந்தில்குமார்,மாநில இளைஞர் அணி துணை செயலாளர்கள் பி.எஸ்.சீனிவாசன்,பிரகாஷ்,மற்றும் எழில் மறவன் உள்ளிட்டோர் இருந்தனர்.



தருமபுரி கிழக்கு மாவட்டத்தில் கழக கொடியேற்றுவிழா உள்ளிட்ட நிகழ்வுகளில் கலந்து கொண்ட கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் தருமபுரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் தடங்கம்.பெ.சுப்ரமணி,மற்றும் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் வழக்கறிஞர்.அசோக்குமார் ஆகியோர் செங்கோல் வழங்கினர். உடன் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன்,நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.டி.என்.வி.எஸ்.செந்தில்குமார்,சுற்றுச் சூழல் அணி கிழக்கு மாவட்ட அமைப்பாளர் டி.பி.எஸ்.இளையசங்கர் மற்றும் கழகத்தினர் இருந்தனர்.

### பூண்டி கலைவாணன் தலைமையில் - திருவாரூரில்

# கலைஞர் நூற்றாண்டு விழா பட்டிமன்றம்!

### புலவர் இரா.சண்முகவடிவேல் - ஆரணி மாலா பங்கேற்பு!

திருவாரூர்,அக் 2-

திருவாரூர் மாவட்ட இலக்கிய அணியின் சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா சிறப்பு பட்டிமன்றம் நன்னிலத்தில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., தலைமையில் நடைபெற்றது. நகைச்சுவை நாவலர் தமிழ்ச்செம்மல் புலவர் இரெ.சண்முகவடிவேலு தலைமையில் பட்டிமன்றம் நடைபெற்றது.

மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா திராவிட நாயகர் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல்களோடும், மாநில இலக்கிய அணி நிர்வாகிகளின் அறிவுருத்தல்களோடும், மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., ஆலோசனைகளின்படியும் திருவாரூர் மாவட்ட சட்டமன்றதொகுதிகள் அனைத்திலும் மாவட்ட இலக்கிய அணியின் சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா சிறப்புடன் நடைபெற்று வருகிறது.

நன்னிலம் சட்டமன்ற தொகுதியில் நடைபெற்ற சிறப்பு பட்டிமன்றம் மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ.,தலைமையில் நகைச்சுவை நாவலர் தமிழ் செம்மல் புலவர் இரெ.சண்முகவடிவேல் தலைமையில் தலைமை கழக பேச்சாளர்கள் ஆரணி மாலா, விஜய அறிவழகன் , வே.கோ.உதயசூரியன் ,பேராசிரியர் முனைவர் அறிவழகன் ஆகியோர் பங்கேற்க நடைபெற்றது.

கலைஞர் அவர்களின் நிலைத்த புகழுக்கு பெரிதும் காரணம் எழுத்தற்றலே ! பேச்சாற்றலே !! எனும் தலைப்பில் நடைபெற்ற பட்டி மன்றத்தில் நகர செயலாளர் பக்கிரிசாமி , ஒன்றிய செயலாளர்கள் வே.மனோகரன், கேப்டன் செல்வராஜ், வீ. அன்பரசன், கோ. தெட்சிணாமூர்த்தி, பிரபாகரன், நகர செயலாளர் ஏ.கே.டி. சேரன், பொதுக்குழு உறுப்பினர் முருகேசன் , மாவட்ட இலக்கிய அணி துணை தலைவர் தியாக ராஜன், அமைப்பாளர்கள் புலவர் எண்கண்.மணி, துணை அமைப்பாளர்கள், ஜாகிர் உசேன், தங்க குணசேகரன், செல்லதுரை, சோமசுந்தரம், பாலமுத்து உள்ளிட்டோர் முன்னிலை ஏற்றனர்.

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எ. எஸ்.குமார் மற்றும் மாவட்ட ,ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் என பெருந்திரளானோர் பங்கேற்றனர்.

# அரியலூர் மாவட்டத்தில் கலைஞர் நூற்றாண்டு விழா!

### அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவங்கி வைத்தார்!

அரியலூர், அக், 2-

அரியலூர் மாவட்டம், குன்னம் தொகுதி செந்துறையில் கூட்டுறவுத் துறையின் சார்பில் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு புதிய உறுப்பினர் சேர்க்கை மற்றும் கடன் வழங்கும் மேளா நிகழ்ச்சி தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா, முன்னிலை வகித்தார்.

கூட்டுறவுத் துறையின் சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா தொடர்பாக தமிழ்நாடு முழுவதும் 100 கடன் மேளாக்கள் நடத்த வேண்டும் என்று திட்டமிடப்பட்டு அதன் அடிப்படையில் அரியலூர் மாவட்ட கூட்டுறவு துறை மற்றும் திருச்சி ராப்பள்ளி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி சார்பில் இரண்டு கடன் மேளாக்கள் நடத்த முடிவு செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் இன்றைய தினம் கடன் வழங்கும் மேளா தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் 1592 பயனாளிகளுக்கு ரூபாய் 15.15 கோடி அளவிற்கு கடன்கள் வழங்கப்பட்டது. இதில் பயிர்கடனாக ரூ.9.05 கோடி அளவிலும், 35 மகளிர் சுய உதவிக் குழுக் களுக்கு 2.96 கோடி அளவிலும், மாற்றுத்திறனாளிகள் கடன்கள் 11 நபர்களுக்கு ரூ.5.5 லட்சத்திலும், கால்நடை வளர்ப்பு நடைமுறை மூலதன கடனாக 171 நபர்களுக்கு ரூ.54.16 லட்சத்திலும், டாம்கோ கடன் ரூ.12.82 லட்சத்திலும், வீட்டு வசதிக் கடன் 5 நபர்களுக்கு ரூ.57 லட்சத்திலும், வீட்டு அடமானக் கடன் 2 நபர்களுக்கு ரூ.22.75 லட்சத்திலும், மேலும், அரியலூர் கூட்டுறவு வங்கி சார்பாக சிறுசேமிப்பு திட்டத்தின் கீழ் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு உண்டியல் மற்றும் கணக்குப் புத்தகத்தினையும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்.

அரியலூர் மாவட்டத்தில் 64 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், 9 திருச்சிராப்பள்ளி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி கிளைகள், ஒரு நகர கூட்டுறவு வங்கி மற்றும் மாவட்டத்திலுள்ள மற்ற கூட்டுறவு சங்கங்கள் சார்பில் மேற்படி கடன்கள் வழங்கப்பட்டு பயனாளிகளுக்கு வாழ்வாதாரங்கள் உருவாக்கப் பட்டுள்ளது.

இந்நிகழ்வின் தொடர்ச்சியாக மாவட்டத்தில் கூட்டுறவு அமைப்புகள் மூலம் கடன் மேளாக்கள் அதிகளவில் நடத்திடவும், அதன் மூலம் புதிய உறுப்பினர்கள் சேர்த்திடவும், இதுவரை கூட்டுறவு சங்கங்களில் கடன் பெறாதவர்களுக்கு கடன்கள் வழங்கிடவும் திட்டமிடப்பட்டு அதற்கான செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

மேலும் அரியலூர் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் 110 நியாய விலைக்கடைகளில் எதிர்வரும் 03.10.2023 முதல் டிஜிட்டல் பணப் பரிவர்த்தனைகள் (PAYTM) மூலம் பொருட்கள் விநியோகம் செய்வதற்கான PAYTM இயந்திரத்தை தமிழ்நாடு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்கள் வழங்கி டிஜிட்டல் பணப் பரிவர்த்தனையை துவக்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், கூட்டுறவுத்துறை மண்டல இணைப்பதிவாளர் தீபா சங்கரி, திருச்சிராப்பள்ளி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இணைப்பதிவாளர் / செயலாட்சியர் அரசு, வட்டாட்சியர் பாக்கியம் விக்டோரியா, ஒன்றிய கழக செயலாளர்கள் பூ.செல்வ ராஜ், வி. எழில்மாறன் மற்றும் அரசு அலுவலர்கள், மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



குன்னூர் மரப்பாலம் சுற்றுலா பேருந்து விபத்து பலி எண்ணிக்கை 9 ஆக உயர்ந்துள்ளது. குன்னூர் அருகே உள்ள மரப்பாலம் 9 வது கொண்டைஊசி. வளைவில் ஏற்பட்ட சுற்றுலா பேருந்து விபத்தில் மீட்கப்பட்ட 8சடலங்களுடன்..தற்போது மேலும் ஒரு சடலம் மீட்கப்பட்டுள்ளது. தொடர்ந்து மீட்பு பணி நடைபெற்று வருகிறது. அடர் வனப்பகுதி என்பதால் மீட்பு பணியில் தாமதம் ஏற்பட்டுள்ளது. மீட்புப் பணிகள் குறித்தும், காயமடைந்த சுற்றுலா பயணிகளின் சிகிச்சை குறித்து ஆய்வு மேற்கொள்ள சுகாதார துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன். நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. ராசா, சுற்றுலா துறை அமைச்சர் க.இராமச்சந்திரன், மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் ஆகியோர் நேற்று குன்னூர் அரசு மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெறுவோரிடம் நலம் விசாரித்தனர். மறைவெய்தியவர்களின் குடும்பத்திற்கு ஆறுதல் கூறினர்.



உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, திண்டுக்கல் மாவட்டம், தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியம், பொருளூரில் நடைபெற்ற விழாவில் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு கடனுதவிகளை வழங்கினார். அருகில் திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ப.வேலுச்சாமி, மாவட்ட ஊராட்சி துணைத்தலைவர் கா.பொன்ராஜ், கூட்டுறவு சங்கங்களின் துணைபதிவாளர் அன்பரசு, பழனி வருவாய் கோட்டாட்சியர் செள.சரவணன், தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் திருமதி சத்தியபுவணா ராஜேந்திரன், ஒட்டன்சத்திரம் வட்டாட்சியர் முத்துச்சாமி உட்பட பலர் உள்ளனர்.

### இந்தியாவிலேயே முதன் முதலாக

# மகளிர் சுய உதவிக் குழுக்களை தொடங்கியவர் கலைஞர்!

### தொப்பம்பட்டியில் நல உதவிகளை வழங்கி அமைச்சர் அர.சக்கரபாணி பேச்சு!

திண்டுக்கல் அக்.2-

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் முதன் முதலில் சுய உதவி குழுக்கள் தொடங்கப் பட்டது. இந்த சுய உதவி குழுக்களை தலைவர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்தார் என்று உணவுத்துறை அமைச்சர் அர. சக்கரபாணி பேசினார்

ஒட்டன்சத்திரம் தொகுதி தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியம் பொருளூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, 1189 பயனாளி களுக்கு ரூ.980.44 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் மற்றும் கடனுதவிகளை அமைச்சர் அர.சக்கரபாணி வழங்கி னார். திண்டுக்கல் பாராளு மன்ற உறுப்பினர் ப.வேலுச்சாமி முன்னிலை வகித்தார்.

நிகழ்ச்சியில், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி பேசியதாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பெண்களின் முன்னேற்றத்திற்காகவும், அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திடும் வகையில் ஏராளமான திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வரு கிறார்கள். அந்த வகையில் அன்றாட பயணச் செலவு களை தவிர்த்திடும் வகையில் நகரப் பேருந்து களில் கட்டணமில்லா பயணத் திட்டத்தினை ஏற்படுத்தியுள்ளார்கள். பெண்கள் உயர்கல்வி கற்று, தங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக 6 முதல் 12ஆம் வகுப்பு வரை அரசு பள்ளிகளில் படித்து, உயர்கல்வி படிக்கும் பெண்களுக்கு புதுமைப் பெண் திட்டத்தில் மாதம் ரூபாய் 1,000 வழங்கப்படு கிறது. மகளிரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என்பதற்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால், இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழகத்தில்தான் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தொடங்கி வைக்கப் ப்பட்டது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தற்போது கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வழங்கும் திட்டத்தை கொண்டு வந்துள்ளார். தகுதியான இல்லத்தரசி களுக்கு மாதம் ரூ.1,000 வழங்கும் திட்டம் செப்டம்பர் 15ஆம் தேதி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காஞ்சிபுரம் மாவட்டத்தில் தொடங்கி வைக்கப்பட வுள்ளது. இத்திட்டத்தில் 1.63 கோடி விண்ணப்பங்கள் பெறப் பட்டதில், 1,06,50,000 மகளிர் தகுதியின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட் டுள்ளது. கலைஞர் மகளிர் உரிமைத்தொகை கிடைக்கப்பெறாதவர்கள் இசேவை மையத்தில் பதிவு செய்ய வேண்டும். தகுதி உடைய அனைவருக்கும் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வழங்கப்படும். எந்த மாநிலத்திலும் செயல் படுத்தப்படாத அற்புத மான திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தியுள்ளார். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு அனைவரும் தொடர்ந்து ஆதரவு வழங்க வேண்டும்.

பொருளூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் சார்பில் 296 விவசாயிகளுக்கு ரூ.556.10 இலட்சம் மதிப்பிலான பயிர்கடன், 21 விவசாயி களுக்கு ரூ.12.74 இலட்சம் மதிப்பிலான கால்நடை பராமரிப்பு மூலதன கடன், 1 விவசாயிக்கு ரூ.5.94 இலட்சம் மதிப்பிலான வேளாண் மத்திய காலக்கடன், 2 விவசாயி களுக்கு ரூ.20.00 இலட்சம் மதிப்பிலான தானிய ஈட்டுக்கடன், 604 விவசாயி களுக்கு ரூ.274.49 இலட்சம் மதிப்பிலான பொது நகைக்கடன், 264 நபர்களுக்கு ரூ.110.67 இலட்சம் மதிப்பிலான மகளிர் சுய உதவிக்குழு கடன், 1 மாற்று திறனாளிக்கு ரூ.0.50 இலட்சம் மதிப்பிலான கடனுதவிகள் என மொத்தம் 1189 நபர்களுக்கு ரூ.980.44 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது என உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் பேசினார்.


இந்நிகழ்ச்சிகளில், மாவட்ட ஊராட்சி துணைத்தலைவர் கா.பொன்ராஜ், பழனி வருவாய் கோட்டாட்சியர் செள.சரவணன், கூட்டுறவு சங்கங்களின் துணைப் பதிவாளர் அன்பரசு, ஒட்டன் சத்திரம் வட்டாட்சியர் முத்துச் சாமி, தொப்பம் பட்டி ஊராட்சி ஒன்றியக் குழு தலைவர் சத்தியபுவனா ராஜேந்திரன், ஊராட்சி ஒன்றிய குழு உறுப்பினர் முருகாத்தாள், ஊராட்சி மன்ற தலைவர் திருமதி மாரியம்மாள் பழனிச்சாமி, ஊராட்சி மன்ற துணைத் தலைவர் ராணி மோகன பிரபு, ஒட்டன் சத்திரம் வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத் தலைவர் ராஜாமணி, வட்டார வளர்ச்சி அலுவலர் தட்சீரா உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.



மதுரை தெற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி சார்பாக திருமங்கலத்தில் நடைபெற்ற உறுப்பினர் சேர்க்கை முகாமினை மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் துவக்கி வைத்த போது எடுத்த படம். உடன் கழக நிர்வாகிகள் நாகராஜன், இளமகிழன், ஸ்ரீதர், எம்.முத்துராமன், அரசு வழக்கறிஞர்கள் அன்புநிதி, தங்கேஸ்வரன், ராஜேந்திரன், அணி அமைப்பாளர் சிவனேசன், துணை அமைப்பாளர்கள் கவஸ்ரீ, ராமச்சந்திரன், சின்னராஜா, அரவிந்த், வையத்துறை, ரேவதி, அழகுமலை, இன்பம் மற்றும் கழக நிர்வாகிகள் கொ.தனபாண்டி, ராமமூர்த்தி, மதன்குமார், ஆதவன் அதியமான், முத்துக்குமார் ரம்யா, உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# திராவிட மாடல் அரசு 37

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி.**



## தானத்துக்கு மரியாதை!

தமிழ்நாட்டில் உடல் உறுப்பு தானம் பற்றி அதிகம் விழிப்புணர்வு இல்லாத காலத்தில், 2008-ஆம் ஆண்டு செப்டம்பரில் சாலை விபத்து ஒன்றில் உயிரிழந்த **‘ஹிதேந்திரன்’** எனும் மாணவரின் உடல் உறுப்புகளை தானம் கொடுத்தனர் அவரது பெற்றோர். அந்த விபத்துதான் ‘மூளைச்சாவு’ குறித்தும், உடல் உறுப்பு தானத்தின் பலன்கள் குறித்தும் ஒரு சுடரை ஏற்றி வைத்தது.

அதைத் தொடர்ந்து, அன்று முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நாட்டிலேயே முதன்முறையாக உடல் உறுப்பு தானம் சார்ந்த துறையையும், அதற்கான கொள்கையையும் உருவாக்கினார். அந்த **‘ஹிதேந்திரன் விளைவு’** காரணமாக, கடந்த 15 ஆண்டுகளாக தேசிய அளவில் உடல் உறுப்பு தானத்தில் தமிழ்நாடு முன்னணியில் இருந்து வருகிறது. அந்தச் சுடரை இன்னும் பிரகாசமாக்க நமது கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் ‘உடல் உறுப்பு தானம் வழங்குவோரின் இறுதிச் சடங்கு, இனி அரசு மரியாதையுடன் மேற்கொள்ளப்படும்’ என்று அறிவித்திருக்கிறார். ஹிதேந்திரனின் 15-ஆம் ஆண்டு நினைவு அனுசரிக்கப்படும் வேளையில் முதலமைச்சரின் இந்த அறிவிப்பு, **‘திராவிட மாடல் அரசு’** எனும் தத்துவத்தை மேலும் பொருள் பொதிந்ததாக்கியது.

### உறுப்பு தானம்... சில சிந்தனைகள்...

அரசின் அறிவிப்பு வந்த உடனே பொதுமக்களில் பலரும் ‘நானும் உடல் உறுப்பு தானம் செய்ய விரும்புகிறேன்’ என்று சமூக ஊடகங்களில் பதிவிடத் தொடங்கினார்கள். ஆனால், சமூக ஊடகங்களில் ஒரு பதிவு போடும் அளவுக்குச் சுலபமானதல்ல உடல் உறுப்பு தானம் செய்வது. அதற்குப் பின்னுள்ள உணர்ச்சிப் போராட்டமும், மருத்துவர்களின் உழைப்பும் பலருக்கும் தெரிவதில்லை.

முதலில் உறுப்பு தானம் என்பது இரண்டு வழிகளில் நடைபெறும். ஒன்று, உயிருடன், ஆரோக்கியமாக இருக்கும் ஒருவரிடமிருந்து, சிறுநீரகம், குடல் போன்ற உறுப்புகளை மட்டும் தானமாகப்பெற்று அவரது உறவினர்களில் யாருக்குத் தேவைப்படுகிறதோ அவருக்குப் பொருத்த முடியும். ஏன், இந்த இரண்டு உறுப்புகள் மட்டும் என்றால், சிறுநீரகங்கள் இரண்டு இருப்பதால் ஒன்றை தானமாகக் கொடுக்கலாம். போலவே, குடல் திரும்ப வளர வாய்ப்புள்ளதால், அதையும் தானமாகக் கொடுக்க முடியும். இந்த வசதி இதர உறுப்புகளில் இல்லை. இந்த முறையிலான உடல் உறுப்பு தானம் என்பது பல காலமாகவே நடைபெற்று வருகிறது.

இரண்டாவது வழி, ஒருவர் மூளைச்சாவு அடைந்திருந்தால் மட்டுமே, அவரிடமிருந்து இதயம், கண்கள், குடல், சிறுநீரகம், நுரையீரல், கணையம் போன்ற உறுப்புகளைப் பெற்றுக் கொண்டு தேவைப்படுவர்களுக்குப் பொருத்தி சிகிச்சை அளிக்க முடியும். பொதுவாக, ஒருவர் இறந்துவிட்டார் என்பதை, அவரது சுவாசம் நின்றுபோய், இதயம் துடிப்பது நின்றுவிடுவதன் அடிப்படையில்தான் நாம் தெரிந்துகொள்கிறோம். ஆனால், மூளைச்சாவு அப்படியல்ல. இதில் பாதிக்கப்பட்டவருக்கு, உயிர் இருக்கும். சுயநினைவு இருக்காது. அதாவது, மூளை நிரந்தரமாகச் செயல் இழந்துவிடும். ஆனால், இதர உறுப்புகள் இயங்கிக் கொண்டிருக்கும். அந்த சமயத்தில் செயற்கைச் சுவாசம் அளிப்பது உள்ளிட்ட பல நடவடிக்கைகள் மூலம் இதர உறுப்புகள் செயல் இழந்துவிடாமல் தடுத்து, அவற்றை மேலும் சில மணி நேரங்களுக்கு இயங்க வைக்க முடியும்.

### முதல்நிலை உறவினர்களுக்கே உரிமை!

ஒருவர் மூளைச்சாவு அடைந்துவிட்டார் என்பதை நான்கு மருத்துவர்கள் ஆறு மணி நேர இடைவெளியில் இரண்டு முறை பரிசோதித்து உறுதிப்படுத்த வேண்டும். அந்தப் பரிசோதனைகளில் ஒருவருக்கு நிரந்தரமாக மூளை செயல் இழந்துவிட்டது, அவரது மூளை திரும்பச் செயல்படுவதற்கான வாய்ப்பு இல்லை என்று தெரிய வந்த பிறகே அவர் மூளைச்சாவு அடைந்துவிட்டதாக அறிவிக்கப்படும். அவ்வாறு அறிவித்தவுடன், அந்த உடல் அவரது நெருங்கிய சொந்தங்களான பெற்றோர்கள், உடன் பிறந்தவர்கள், இணையர் ஆகிய முதல்நிலை உறவினர்களுக்கு உடைமையாகிவிடுகிறது.

அந்த சமயத்தில் அந்த உடலை அவர்கள் விருப்பப்படிதான் வழங்க முடியும். அவர்கள் அந்த உடலை உறுப்பு தானத்துக்கு வழங்கவும் செய்யலாம். அல்லது புதைக்கவோ, எரிக்கவோ செய்யலாம். அது அவர்களது உரிமை. அவர்களை யாரும் எதற்காகவும் கட்டாயப்படுத்த முடியாது. அந்த உணர்ச்சிப் பெருக்கு மிகுந்த நேரத்தில், அவர்களை ஆற்றுப்படுத்தி, உடல் உறுப்பு தானத்தின் மேன்மை மற்றும் பலன்களை எடுத்துச் சொல்லி அவர்களைச் சம்மதிக்க வைக்க ‘ஆற்றுப்படுத்தும் மருத்துவர்கள் அல்லது ஆலோசகர்கள்’ பெரும் முயற்சி மேற்கொள்வார்கள். அந்த முயற்சிக்குப் பிறகும், அவர்கள் என்ன முடிவு எடுத்தாலும், அது அவர்களது உரிமைதான்.

போலவே குடும்பத்தில் யாரேனும் ஒருவர் அனுமதி மட்டும் கிடைத்தால் போதும் என்பது இல்லை. உதாரணத்துக்கு, கணவனுக்கு மூளைச்சாவு ஏற்பட்டுவிட்டால், அவரது மனைவி ‘உடல் உறுப்பு தானம் செய்கிறேன்’ என்று விருப்பம் தெரிவித்தால் மட்டும் போதாது. மூளைச்சாவு ஏற்பட்டவரின் பெற்றோர் உயிருடன் இருந்தாலோ அல்லது அவரது உடன்பிறப்புகள் இருந்தாலோ அவர்கள் அனைவரின் அனுமதியும் ஒத்துழைப்பும் தேவை.

✪ உலக அளவில் **‘உடல் உறுப்பு தான நாள்’** என்பது ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் 13-ஆம் தேதி கடைப்பிடிக்கப்படுகிறது. இந்தியாவில் அது ஆகஸ்ட் 3-ஆம் தேதி அனுசரிக்கப்படுகிறது. ஆனால், தமிழ்நாட்டில் மட்டும், ஹிதேந்திரன் நினைவு நாளான செப்டம்பர் 23-ஆம் தேதியில் உடல் உறுப்பு தான நாளாக அனுசரிக்கப்படுகிறது.

✪ இதர மாநிலங்களில் உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை என்பது பெரும்பாலும் அந்த மாநிலங்களின் தலைநகரங்களில்தான் நடைபெறுகின்றன. மேலும், அங்கு அரசு மருத்துவமனைகளின் பங்கு மிகவும் குறைவு. ஆனால், தமிழ்நாட்டில் மட்டும்தான் இந்த அறுவை சிகிச்சைகள் மாநிலம் முழுவதும் பரவலாக மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் இங்கு அரசு மருத்துவமனைகளின் பங்களிப்பும் அதிகம். இங்கு 13 அரசு மருத்துவமனைகளில் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது. தவிர, உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை செய்ய வசதியில்லாத, ஆனால், மாற்று உறுப்புகளை தானம் பெறுவதற்கான வசதிகள் கொண்ட 27 இதர அரசு மருத்துவமனைகளும் உள்ளன.

✪ இந்த அறிவிப்பு வந்த உடனே முதல் மூளைச்சாவு அடைந்த தேனி மாவட்டத்தைச் சேர்ந்த வடிவேல் என்பவரின் உறுப்புகள் தானம் கொடுக்கப்பட்டன. அவருக்கு அரசு சார்பில் இறுதி மரியாதை செய்யும்விதமாக, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தேனி சின்னமனூர் பகுதியிலிருந்த வடிவேலுவின் இல்லத்துக்குச் சென்று மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

### சொந்த ஊரில் மரியாதை

இத்தனைக்கும் பிறகே உறுப்புகள் தானம் பெற்று, உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை ஆணையத்திடம் உள்ள பதிவேட்டில், பதிவு மூப்பு அடிப்படையில், தேவைப்படுபவர்களுக்கு வேண்டிய உறுப்புகள் அளிக்கப்படும். அதுவும் எல்லா மருத்துவமனைகளிலும் இந்த அறுவை சிகிச்சையைச் செய்துவிட முடியாது. உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்கான வசதிகள் கொண்ட மருத்துவமனையில், அந்தச் சிகிச்சை செய்வதற்கு முறையான உரிமம் பெற்று இருந்தால் மட்டுமே, அவர்கள் மூலம் பதிவு செய்து, உறுப்புகள் தானம் பெற்று, சிகிச்சை பெற முடியும். நோயாளிகள் தாங்களாகவே உறுப்பு வேண்டி பதிவு செய்ய முடியாது. இந்த உரிமம் பெற்ற மருத்துவமனைகள் மூலமே மேற்கொள்ள முடியும்.

அரசின் இந்த அறிவிக்குப் பிறகு தங்கள் உடல் உறுப்புகளைத் தானம் செய்ய விரும்பும் படிவத்தை ஆன்லைன் மூலமாக நிரப்பித் தங்கள் ஆதரவைத் தெரிவித்து வருகிறார்கள் மக்கள். அந்தப் படிவம் விருப்பப் படிவம்தானே தவிர, அதற்கு எந்த வித சட்ட அங்கீகாரமும் இல்லை. நீங்கள் மூளைச்சாவு அடைந்தால், உங்கள் உடல் உங்களது முதல்நிலை உறவினர்களுக்கே உடைமையாகிறது. ஒருவேளை உங்கள் விருப்பப்படி அவர்கள் உங்கள் உறுப்புகளைத் தானம் அளிக்கவும் முன்வரலாம். அல்லது அப்படிச் செய்யாமலும் இருக்கலாம். உடல் உறுப்பு தானத்தின் மேன்மை குறித்து, உங்கள் வீட்டில் உள்ளோரிடம் தொடர்ந்து உரையாடல் நடத்துவதன் மூலமாக மட்டுமே அவர்களின் மனங்களில் மாற்றத்தைக் கொண்டு வர முடியும்.

இதுவரையில் இவ்வாறு மூளைச்சாவு அடைந்தவர்களின் உடல் உறுப்புகளைத் தானம் பெற்ற நிகழ்வுகளின்போது, அந்தந்த மருத்துவமனை மருத்துவர்களே இறந்தவரின் உடலுக்கு உரிய இறுதி மரியாதைகள் செய்து வழியனுப்பி வைத்தனர்.

இதை அறிந்த முதலமைச்சர், ‘மருத்துவமனையில் மட்டும் இப்படி மரியாதை செய்தால் போதாது. தானம் கொடுத்தவரின் ஊரிலேயே அவருக்கு இறுதி மரியாதை வழங்கப்பட வேண்டும்’ என்று சிந்தித்ததன் விளைவே இந்த மாண்புமிகு முன்னெடுப்பு. இனி, ஆத்மாக்கள் நிஜமாகவே அமைதியில் துயில் கொள்ளட்டும்..!

...சாதனை தொடரும்



## திராவிடம் பரவட்டும்!




திராவிடர் இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் சுப.வீ அவர்களின் வழிகாட்டுதலில் நடக்கும் ‘திராவிடப் பள்ளி’ வெற்றிகரமாக மூன்றாண்டுகளை நிறைவு செய்துள்ளது. தொடக்க நிலை மற்றும் முதுநிலை என இரண்டு பிரிவுகளில் இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு திராவிட சிந்தனைகளை, இயக்க வரலாறுகளை, கழகம் சந்தித்த சவால்களை, தலைவர்கள் படைத்த சாதனை களைக் குறித்தெல்லாம் புத்தகங்கள், கருத்துரைகள் மூலம் கடத்தி, மாணவர்களுக்கு இன உணர்வு ஊட்டியிருக்கிறது இந்தப் பள்ளி.

மேலும், இந்த மூன்றாண்டுகளில், தமிழர்கள் வாழும் இதர பல நாடுகளிலும் **‘திராவிடப் பள்ளி’**கள் தொடங்கப்பட்டு, வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகின்றன. திராவிட சிந்தனைகள் மட்டுமின்றி, மார்க்சியம், அம்பேத்கரின் சிந்தனைகள், பெண்ணியம், சூழலியல், சட்டம் போன்றவற்றைப் பற்றியும் கற்றுக்கொடுப்பது இந்தத் **‘திராவிடப் பள்ளி’**யின் சிறப்பு அம்சமாகும்.

## :ப்ளாஷ்பேக்





கிருஷ்ணமூர்த்தி

### தமிழில் தற்காப்பு!

கராத்தே மற்றும் கோபுடோ அசோசியேஷன் தலைவர் ஹிரோஷி அகமின் ஜப்பானிலிருந்து தமிழ்நாட்டிற்கு, ‘தற்காப்புக் கலை’ போட்டிகளின் சிறப்பு அழைப்பாளராக வருகை தந்திருந்தார். 2009-ஆம் ஆண்டு தமிழ்நாடு முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞரை சந்தித்து வாழ்த்துபெற எண்ணினோம். அண்ணா அறிவாலயத்தில் கலைஞர் அவர்களை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. **‘தற்காப்புக் கலைகள்’** என்ற தலைப்பில் தமிழில் நான் எழுதியிருந்த நூலை அவரிடம் அளித்தேன். தமிழிலிருந்ததால் புன்னகை செய்தார். ஹிரோஷி அகமின் அவர்களை அறிமுகம் செய்து வைத்து, அவரிடம் வாழ்த்தும் பெற்றோம். அப்படியான தருணத்தில் அவருடன் எடுத்துக்கொண்ட புகைப் படமிது.

**-டாக்டர் கோபுடோ**
**ஏ.எஸ்.கிருஷ்ணமூர்த்தி,**
**தியாகராயர் நகர், சென்னை**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033- 24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### கலைஞருடன் சென்றால் கைது!

**1976-ஆம் ஆண்டு மிசா நெருக்கடி காலத்தில், கழகத்தினர் தொடர்ச்சியாகக் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப் பட்டனர். அப்போது, கலைஞருடன் யாரும் இருக்கக்கூடாது எனத் திட்டமிட்டு, அவருடன் சென்றவர்களும் குறிவைக்கப் பட்டு கைது செய்யப்பட்டனர். கலைஞரின் காரில் பேச்சுத் துணைக்காக யாராவது சில நாட்கள் வந்தால், அவர்கள் மிசா சிறைவாசியாக்கப்பட்டனர். கழக வழக்கறிஞரும், சட்டமன்ற உறுப்பினருமான போடி. சுருளிவேல், தற்போதைய கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, ஆயிரம் விளக்கு உசேன், எல்.கணேசன் என அடுத்தடுத்து கலைஞருடன் சென்ற முன்னணியினரையும் மிசா வளைத்துக் கொண்டது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 258




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.